
கல்கி

KALKI 15-10-72 45 காசு



உங்கள் எல்லாத் தலைவலிகளையும்



ஒரே ஒரு ஸாரிடான்

டிரேட் மார்க் 'ரோஷ்'

போக்கிவிடுகிறது.

உங்கள் தலைவலியின் காரணம் எதுவாயினும் சரி, கைவசம் ஸாரிடான் வைத்திருங்கள். தலைவலி, உடம்புவலி, பல்வலி, அசௌகரியமான தினங்களில் ஏற்படும் வலி இவைகளால் ஏற்படும் சோர்வைப் போக்கும் வகையில் ஸாரிடான் விசேஷ கலவை முறையில் தயார் செய்யப்பட்டுள்ளது. சோர்வை நீக்கிப் புத்துணர்வு அளிக்கிறது. அதுவே ஸாரிடானின் தனிச்சிறப்பு—அது உங்களைத் துடிப்புடனும், மகிழ்ச்சியுடனும் வைக்கிறது.

ஸாரிடான் நிவாரணமளிக்கிறது. சோர்வை நீக்குகிறது. புத்துணர்வூட்டுகிறது.



ஒரே ஒரு ஸாரிடான் போதும்
ஒரு 'ரோஷ்' தயாரிப்பு


KP-3840



1.3 gms
SANZYME
COMPOUND
UNI-SANKYO LIMITED



இந்திய உதவி காப்டன் வெங்கட்ராகவன் பிலிப்ஸ் சைக்கிள் உதவியினால் உடல் வளத்தை தெம்புடன் வைத்திருக்கிறார்




இந்தியாவின் சிறந்த விளையாட்டு வீரர் வெங்கட் தினமும் சைக்கிள் சவாரி செய்வதன் அவசியத்தை உணர்ந்திருக்கிறார் — அதுவும் குறிப்பாக விளையாட்டுப் போட்டிகள் இல்லாத காலங்களில் இதன்மூலம் அவரால் எப்பொழுதும் தெம்புடன் செயலாற்ற முடிகிறது. உலகப் புகழ்வாய்ந்த பிலிப்ஸ் ஊக்க மிகு வாலிபர்களுக்கு உகந்தது. கவர்ச்சியானது. அனாயாசமாக சவாரிசெய்ய வல்லது.

அதில்தான் எத்தனை வகை! ஒவ்வொரு இளைஞரின் விருப்பத்துக்கும் ஏற்றவாறு ஒவ்வொருவகை பிலிப்ஸ்!

பிலிப்ஸ் ஒலிம்பியா (சுபர்ப் மாடல்)
பிலிப்ஸ் நியூயார்க்கர் (ஸ்போர்ட்ஸ் மாடல்)
பிலிப்ஸ் லேடீஸ் மாடல்
பிலிப்ஸ் கான்கரர் (ஜூனியர் மாடல்)

ஊக்கமிகு வாலிபர்கள் உவந்து வாங்குவது பிலிப்ஸ்




இந்தியாவில் தயாரிப்போர்:
டிஐ சைக்கிள்ஸ் ஆஃப் இந்தியா
அம்பத்தூர், சென்னை-53

உரிமையாளர்கள்:
டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ்
ஆஃப் இந்தியா லிமிடெட் சென்னை-1
பதிவுபெற்ற உபயோகிப்போர்.

TIC/PH/6796

சென்னை **சாந்தி · கிரெளன் · புவனேஸ்வரி** மற்றும் தென்னகமெங்கும்





விஜயா & சுரேஷ் கம்பைன்ஸ்

வசந்த மாளிகை

ஈஸ்ட்மென் கலர்

தயாரிப்பு **D.ராமாநாயுடு** டைரக்ஷன்: **K.S.பிரகாஷ்ராவ்**

ELEGANT


ஆஹா!
கட்டியான தயிர்—
வெட்டி எடுக்கலாம்!



இரகசியம்—
அமுல் மில்க் பவுடர்!


லஸ்ஸி தயாரிக்கத் தயிர், பச்சடிக்குத் தயிர், தயிர் வடைக்குத் தயிர், இவற்றுக்காகக் கட்டியான ஆடைத் தயிரைப் பெறுவதற்கு, அமுல் மில்க் பவுடரிலிருந்து தயாரித்த பால் எடுத்துக்கொள்ளுங்கள். கொதிநிலைக்கு சூடாக்குங்கள். பின்னர் இளம் சூடாகும் வரைக் குளிர விடுங்கள். அரை அல்லது ஒரு தேக்கரண்டி நல்ல தயிரைத் தோய விடுங்கள். படிய விடுங்கள்.

ஆரோக்கியமான நல்ல பாலைத் தட்டில்லாமல் பெறவும், இனிப்புகள் மற்றும் பழத் தின்பண்டங்கள் தயாரிக்கவும் சிறந்தது, அமுல் மில்க் பவுடர். கறியுடன் இரண்டொரு ஸ்பூன் அமுல் மில்க் பவுடர் சேர்த்தால், வளமுடன் சுவை கொழிக்கும். மிகவும் வசதியானது; சிக்கனமானதும் கூட!



அமுல் மில்க் பவுடர்—
ஆரோக்கியமான நல்ல பாலை அமோகமாகத் தருகிறது.

ASP/AMP-13 TAM


வயிற்றுக் கோளாறு?
வாயுவா?
அமில உபாதையா?
நெஞ்செரிச்சலா?
அஜீரணமா?
2 ரென்னி மாத்திரைகளை
மெல்லுங்கள்...
விரைவிலேயே
நிவாரணம் பெற
பெப்பர்மின்ட் சுவையுள்ள ரென்னியை கைவசம் வைத்திருங்கள்.
நிக்கோலஸ் Ⓝ தயாரிப்பு

mcm/ni/4 tam

கல்கி
பொருளடக்கம்

பரிதாபி, புரட்டாசி 29 ○ அக்டோபர் 15, 1972



சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11-50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 27-00	ரூ. 13-50

புதிய பார்லே மாரி பிஸ்கெட்டுடன்

காப்பியின் சுவையை அனுபவிப்பீர்



க்ளுகோ, மொனகோ
மற்றும் சுவைமிக்க இதர
பிஸ்கெட்டுகளின்
தயாரிப்பாளர்களான பார்லே
உங்களுக்கென பிரத்யேகமாக
வழங்குகின்றனர்—
காப்பியின் சுவைக்குச் சுவையூட்டும்—

பார்லே
மாரி
பிஸ்கெட்டுகள்

அருமையான ருசியுள்ளவை—ஃபாயில்-ஸீல்டு பேக்குகளில்

everest/1080a/PP tam

கல்கி

மலர் 32

இதழ் 11

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
— பாரதியார்

காந்தி ஜயந்தி–காந்தீயத்துக்கு ஜயமா?

வழக்கத்தைவிடச் சிறப்பாக இவ்வாண்டு தேசமெங்கிலும் காந்தி ஜயந்தி கொண்டாடப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் அதி விசேஷமாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது. குறிப்பாக, கிண்டியிலுள்ள காந்தி மண்டபத்தில் தமிழக ஆளுநரின் ஆர்வத்தின் காரணமாக வெகு விமரிசையாக ஒரு வார காலம் காந்தித் திருவிழா நடைபெற்றது. ஆளும் கட்சியைச் சேராதவர்கள் ஒன்று கூடி மதுரையில் காமராஜரின் பிறந்த நாளையும் சேர்த்து அமோக உத்ஸவமாகக் கொண்டாடியிருக்கிறார்கள்.

அஹிம்சா முறையில் ஒரு மாபெரும் உபகண்டத்துக்குச் சுதந்திரம் பெற்றுத் தந்த மகாபுருஷரின் நினைவைப் போற்றி நன்றியும் அஞ்சலியும் செலுத்துவது மிகவும் பொருத்தம்தான். ஆனாலும்...?

சுதந்திர வெள்ளிவிழா படாடோபமாகக் கொண்டாடினோம். ஆனாலும் மக்களின் சுதந்திரம் எங்கே, எங்கே என்ற மகத்தான கேள்வியும் அப்போது உள்ளூறக் குமுறிக் கொண்டேதான் இருந்தது. அப்படியே, இப்போது காந்தி ஜயந்தி கொண்டாடிய போதும் காந்தீயம் எங்கே, எங்கே என்ற மாபெரும் வினா நம் நெஞ்சத்தைக் கொக்கி போட்டு வளைத்துக் கொண்டுதான் இருந்தது. இப்போது நாம் — அதாவது நமது மக்களும், அரசாங்கமும் — அண்ணல் காந்தியின் ஆன்மா உவக்கும் பாதையில்தான் செல்கிறோமா?

வாழ்முறையில் எளிமையும், ஆன்ம சிந்தனையில் உயர்வுமே காந்தியடிகளின் பேச்சும் மூச்சுமாக இருந்தது. இன்று எளிய வாழ்வு எங்கே போயிற்று? பிற நாடுகளைப் பார்த்து நாம் இப்படித் தேவைகளை அதிகரித்துக் கொண்டே போகிறோமே! அரசாங்கமும் இந்தத் திசையிலேயே திட்டங்கள் தீட்டிக் கொண்டு போகிறதே! இதை அண்ணல் ஒப்புவாரா?


நாம் சற்றேனும் ஆன்மீக உயர்வு பெற முயலுகிறோமா? எதற்கெடுத்தாலும் லஞ்சம் என்கிற நிலைமை ஏற்பட்டிருக்கும் போது ஆன்மீகத்தில் உயர்ந்ததாக எப்படிச் சொல்ல முடியும்? காந்திஜி ஒவ்வொரு நிமிடமும் வாழ்ந்து காட்டிய சத்தியமும், தர்மமும் என்னவாயின? அரசியல்வாதிகளிடம் ஒழுங்கு குறைந்தாலும் கூட, அந்த ஒழுங்கீனத்துக்கு மக்கள் யாவரும் அச்சமுற்று அடிபணிந்து போகிற அவல நிலைக்கு ஏன் இடம் தந்தோம்? சத்தியத்திலேயே அசையா நம்பிக்கை வைத்துப் பிரிட்டிஷ் முடியாட்சியுடன் ஆயுதம் தரிக்காமல் போர் தொடுத்த மகானின் நிரந்திலிருந்து நாம் என்ன படிப்பினை பெற்றோம்? அண்ணலின் ஆவி குளிரும்படியாக அதருமத்தை எதிர்த்துப் போராடும் ஆண்மையை நாம் பெற்றிருக்கிறோமா? அச்சுறுத்தலும், வன்முறையும் ஆண்மையாகாது. கடமையைக் கருதாமல், உரிமையை மட்டும் நினைத்துச் செய்கிற கலகங்கள் பேடித்தனமே.

அண்ணலின் மனோபலத்தின் ரகசியத்தை நாமும் உன்னி உணர்ந்தாலொழிய நாம் அவரது உண்மை வாரிசுகளாக இயலாது. தெய்வ பக்திதான் இந்த இரகசியம். நாம் இறைவனிடம் எளிமையுடன் சரண் புகுந்தவர் என்பதை காந்திஜி வெளிப்படப் பெருமையுடன் கூறினார். இந்த விஞ்ஞான யுகத்தில் இறைவன் தேவையற்ற வஸ்துவல்ல என்றும், அவனது அருட்துணையில்லாமல் எந்த விஞ்ஞானத்தாலும் ஆன்ம நிறைவு காண முடியாது என்றும் இயம்பினார். தமது பிரசங்க மேடையில் முதலில் ராமநாம பஜனைக்கே இடம் தந்தார்.


ஆண்டவனை விட்டு விட்டு விஞ்ஞானமும் இல்லை, சமூகமும் இல்லை, அரசியலும் இல்லை என்று திட்ட வட்டமாகக் கூறினார் அடிகள். இன்று காந்திஜியின் உயிர் வடிவமாகத் திகழும் ராஜாஜியும் இதே உண்மையைத்தான் இயம்பி வருகிறார். ஆண்டவனை இதயத்தில் அமர்த்திக் கொள்வதே இன்று தலையாய காரியம்; அதைச் செய்தால் சகல துறைகளிலும் தூய்மை தானாக ஏற்பட்டுவிடும் என்கிறார்.

காந்தி ஜயந்தி கொண்டாடிய நாம் காந்தீயத்துக்கு ஜயம் பெற்றுத் தருவதே அதைவிட முக்கியம்.


தேசியமயமாக்கும் கொள்கை
பஸ் போக்குவரத்து


தி.மு.க
கோட்டை
கருணாநிதி
யார் சொன்னது....?
நமது கோட்டைச்
சுவரில் விரிசலா?
இல்லை!....





தம்மைக் குதிரையாகவும் திரு ம.பொ.சி.யை ஜாக்கியாகவும் வர்ணித்துக் கொண்டார் முதல்வர் — செய்தி







மதுரைமா நகரில் காந்தி ஜெயந்தியையும் காமராஜ் பிறந்த தினத்தையும் அக்டோபர் 1, 2, தேதிகளில் லட்சக் கணக்கான மக்கள் சிறப்பாகக் கொண்டாடினர். இந்த விழாக்களில் சர்வகட்சித் தலைவர்களும் பங்குபற்றினர்.

1. சரித்திரம் கண்டிராத மாபெரும் ஊர்வலம். 2. ஊர்வலத்தில் உற்சாகம் கரைபுரண்டோடும் ஒரு பகுதி. 3. மக்கள் தலைவர் காமராஜ் உரையாற்றுகிறார். 4. விழாக்களில் கலந்துகொண்ட மாதர்களில் ஒரு பகுதி.



தமிழ் நாட்டிலே

தீரன்

மதுரையில் தேசியத் திருவிழா

அக்டோபர் முதல் தேதியும் மறுநாளும் மதுரையில் தேசியத் திருவிழா பிரமிக்கத் தக்க வகையில் சிறப்பாக நடைபெற்றது. அக்டோபர் மாதத்தில் இரண்டு சித்திரைத் திருவிழாவை ஒருங்கே சேர்த்துக் கண்டாற் போல் மதுரை நகரம் ஜே ஜே என்று இருந்தது. மதுரை மாவட்ட காங்கிரஸ் தலைவர் நெடுமாறன் அடக்கமும் அமைதியும் இணையற்ற செயலாற்றும் திறனும் உடையவர் என்பது இந்த மகாநாட்டின் மூலமும் மாபெரும் ஊர்வலத்தின் மூலமும் தெரிந்தது. சர்வ கட்சித் தலைவர்களும் கலந்து கொண்ட இந்த மகாநாட்டில் எட்டு லட்சம் மக்களுக்கு மேல் கூடியிருந்தனர். ஆயிரம் பஸ்கள், எண்ணற்ற மாட்டு வண்டிகள், லாரிகள், லட்சக் கணக்கான மக்கள், மாணவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள். அதிகாரத்தில்



இல்லாத ஒரு கட்சி மக்களுக்கிடையில் மாபெரும் செல்வாக்குடன் விளங்குவதை மதுரை தேசிய விழாவால் அறிய முடிந்தது. முதல் தேதி காலை விமான நிலையத்தில் மதுரை மக்கள் காமராஜ் அவர்களுக்கு அளித்த வரவேற்பு நீண்ட நாட்களுக்கு முன்பு நேரு அவர்களுக்கு மதுரை மக்கள் அளித்த வரவேற்பை நினைவூட்டுவதா யிருந்தது என்பதை எல்லாப் பத்திரிகைகளுமே எழுதி யிருந்தன. விழாவின் முதல் நாள் கடல் போல் கூடியிருந்த பெருமக்களுக்கு முன் "என்னை மறந்துவிடுங்கள். இங்கே காந்தியடிகளைப் பற்றிப் பேசுங்கள்" என்று காமராஜ் வேண்டியதை மக்கள் மிகவும் உருக்கமாகக் கேட்டார்கள். திரு காமராஜ் அவர்கள் நீடூழி வாழவும் தமிழ் நாட்டில் அவருக்கு இருக்கும் அசைக்க முடியாத செல்வாக்கு மேலும் பெருகவும் இந்தச் சந்தர்ப்பத்தில் வாழ்த்துகிறோம்.

கே. கே. ஷா பேசுகிறார்:

தமிழ் நாடு கவர்னர் திரு ஷா அவர்கள் கிண்டி காந்தி மண்டபத்தில் நடைபெற்ற விழாவில், "ஒவ்வொரு பிரச்சினையையும் அணுகுவதில் நம்முடைய முதல்வர் கருணாநிதி அவர்கள் காந்தியார் கடைப்பிடித்த நிதானத்தையும் உறுதியையும் கொண்டு அணுகுகிறார்.... காந்தியாரின் நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதில் மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் வழிகாட்டியாக விளங்குகிறது தமிழ் நாடு. எதுபோன்ற திட்டங்கள் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்க



ளுக்கு மேன்மை உண்டாக்கும் என்று காந்தியார் நினைத்தாரோ — கனவு கண்டாரோ அந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுவதில் முதல்வர் கருணாநிதி பெரிதும் ஊக்கத்தோடு செயல்படுகிறார்" என்று புகழுரை வழங்கியிருக்கிறார். முதல்வர் மதுவிலக்கை எடுத்த சாதனை எதில் சேரும் என்பதுதான் நமக்குப் புரியவில்லை.

தி.மு.க.வில் பிளவா?

பத்திரிகைகளில் மாற்றி மாற்றி வரும் செய்திகளையும், அறிக்கைகளையும், பார்த்தால் தி.மு.க.வில் ஏதோ மோதல்களும், பிளவுகளும் இருப்பது போல் தோன்றுகிறது. ஆனால் அப்படி இல்லை போலத் தோன்றும் படி உடனே அதன் தலைவர்கள் மறுப்புக்களை வழங்கிவிடுகிறார்கள். என்றாலும், தலைவர்களின் பேச்சுக்களாலும், அறிக்கைகளாலும் மொத்தத்தில் ஏதோ ஒரு குழப்பம் மட்டும் உள்ளே இருப்பது தெரிகிறது. 'தி.மு.க.வை அதிலுள்ளவர்களே அழித்தால் அன்றிப் பிறர் யாரும் அழித்துவிட முடியாது' என்றும், 'தி.மு.க.வில் பணக்காரர்கள் நுழைந்து விட்டார்கள்' என்றும், 'நான்தான் கழகம் கழகம்தான் நான்' என்றும் பல குரல்கள் ஒரே சமயத்தில் கழகக் கூடாரத்திலிருந்து வேறு வேறு தொனிகளில் கேட்கின்றன. 'அண்ணாயிஸத்தின் வளர்ச்சியே கருணாயிஸம்' எனத் திடீரென்று ஒரு குரல் 'இல்லை விளக்கம்' தருகிறது. எல்லாக் குரல்களும் திடீரென்று ஒற்றுமையைப் பற்றி வற்புறுத்துவதைப் பார்த்தால் ஒற்றுமையைப் பற்றி உடனடியாக ஒரு 'கோரஸ்' பாடவேண்டிய

அளவு வேற்றுமைகள் உள்ளே இருக்க வேண்டும் என்பது மட்டும் புலனாகிறது. ஒற்றுமை ஒற்றுமை என்று பேதமான கருதிகளில் அதிகமாகப் பேசுவதே ஒற்றுமைக் குறைவைக் காட்டிக்காட்டுகிறதல்லவா?

பக்தி பெருகியுள்ளது

சேலத்தில் ஒரு விழாவில் ''தி. மு. க. ஆட்சிக்கு வந்த பின் திருத்தணிக் கோவிலின் வருமானமும், பழநி கோவிலின் வருமானமும் பெருகியுள்ளன'' என்று அமைச்சர் நெடுஞ்செழியன் பெருமையாகக் கூறியிருக்கிறார். தி. மு. க. வின் தெய்வ நிந்தனைப் பிரசாரங்களுக்கு மக்கள் செவிசாய்க்கவில்லை என்பதை அமைச்சரும் புரிந்துகொண்டிருப்பதைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால் அதே விழாவில் ''அதிக வருமானமுள்ள கோவில்களிலிருந்து அறப் பணிக்கும், சமுதாயப் பணிக்கும், கல்விப் பணிக்கும் செலவிடுவதே ஆண்டவன் விரும்பும் செயல்'' என்று ஆண்டவனுக்கும் வக்காலத்து வாங்கிக் கொண்டு அமைச்சர் கூறியிருப்பதுதான் சிந்தனைக்குரியது. அமைச்சர் கூறிய விவரங்களின்படி இங்கே தமிழகத்தில் உள்ள 2 லட்சத்து 71 ஆயிரம் கோயில்களில் 11 ஆயிரம் கோயில்கள்தான் அதிக வருமானமுள்ளவை. லட்சக் கணக்கில் வருமானமுள்ள கோவில்களோ அறுபது அல்லது எழுபதுதான் இருக்கும். இந்த நிலையில் வருமான வசதி இல்லாத இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட கோவில்களைத் திண்டாடவிட்டுவிட்டு வருமான வசதி உள்ள கோவில்களின் உபரி நிதிகளை வேறு பிரிவுகளில் செலவழிப்போம் என்று கூறிக் கொண்டிருப்பது பொருந்துமா? இந்துக் கோவில்களின் அதிக வருமானம் அதிக வருமானமில்லாத ஏழைக் கோவில்களைச் செப்பம் செய்வதற்குச் . செலவிடப் படுவதுதான் நியாயமானதாகும்.

பாலத்தின் பெயர்

மதுரையில் கட்டப்பட்டிருக்கும் ஒரு ரயில்வே மேம்பாலத்துக்கு யார் பெயரை வைப்பது என்பது பற்றிச் சர்ச்சைகள் அடிபட்டன. அமரர் முத்துராமலிங்கத் தேவரின் பெயரை இந்தப் பாலத்துக்கு வைக்கலாம் என்று சிலரும், மதுரை மேயர் முத்துவின் பெயரை வைக்கலாம் என்று சிலரும் விவாதித்தார்கள். சர்ச்சைக்கு இடமில்லாத பெரிய தலைவராயிருந்த முத்துராமலிங்கத் தேவரின் பெயர் எல்லோராலும் ஏற்கப்பட்டு இருந்தால்கூட நல்லது. அதுவும் மறுக்கப்பட்டிருக்கிறது. பதவியில் இருக்கும் ஒரு மேயர் தம் பெயரை ஒரு பாலத்துக்கோ, கட்டிடத்துக்கோ வைத்துவிட முடிவது சுலபம். ஆனால் தம்மை விடப் பெரிய தலைவரும், அமரருமான ஒருவர் பெயர் பிரஸ்தாபிக்கப்படும்போது அதை ஏற்றுத் தம் பெயரை பிரஸ்தாபிக்காமல் இருப்பதே சிறந்தது. கடைசியில் இரண்டு பெயர்களுமே வேண்டாம் அந்தப் பகுதியின் பெயரோடு இணைத்து 'சுப்பிரமணியபுரம் பாலம்' — என அழைக்கலாம் என்று முடிவாகி விடும்போலிருக்கிறது.

கொள்முதலும் கட்டுப்பாடும்

சர்க்கார் கொள்முதல் வியாபாரம், விநியோகக் கட்டுப்பாடு, நியாய விலைக் கடைகள் இம்மூன்றும் புதிய காங்கிரஸ் காரியக் கமிட்டி நாட்டில் நிலவும் விலை உயர்வுப் பிரச்னையைச் சமாளிக்கக் கூறியுள்ள யோசனைகள்.

இப்போதுகூட 'ப்ரொக்யூர்மென்ட்' என்ற கொள்முதல் வியாபாரமும், ரேஷன் முறை அமலில் உள்ள பகுதிகளில் நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகமும் நடந்து கொண்டுதான் வருகின்றன. நியாயவிலைக் கடைகளுடன் இதர கடைகளும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதனால் அத்தியாவசியமான எல்லாப் பண்டங்களுக்கும் இரண்டு விலைகள் — நியாய விலை, திறந்த மார்க்கெட் விலை — நிலவுகின்றன. நியாயவிலைக் கடைகளில் பொருள்கள் கிடைப்பதில்லை; கிடைத்தால் தரம் நன்றாயிருப்பதில்லை. இதனால் பெரும்பாலும் அதிக விலை கொடுத்தே தேவைப் பொருள்களை மக்கள் வாங்க வேண்டியிருக்கிறது. இதனால் ஏற்பட்டதுதான் தற்போது காணும் ஆர்ப்பாட்டங்கள்.

சர்க்கார் கொள்முதலினால் அரசாங்கத்தின் ஆதிக்கம்தான் வளரும். விலைகள் இறங்காது. கட்டுப்பாடுகளால் பதுக்கலும் கறுப்பு மார்க்கெட்டும் அதிகரிக்கும். உற்பத்தித் துறையில் இப்போது ஏற்பட்டுள்ள அரசின் ஆதிக்கம் விநியோகத் துறையிலும் விஸ்தரிக்கும். வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கலாம்.

சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்? உற்பத்தி பெருகினால்தானே கொள்முதல் செய்ய முடியும்? சென்ற ஆண்டு 36 லட்சம் டன் உணவுப் பொருள்கள் கையிருப்புக்கு வைத்துக்கொள்ள வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதை நிறைவேற்ற முடிந்ததா? நல்ல மகசூல் இருந்தபோதே செய்து முடிக்க முடியவில்லை என்னும் போது பருவ மழை சாதகமில்லாத இந்த ஆண்டில் 40 லட்சம் டன் கொள்முதல் செய்ய வேண்டும் என்று இலக்கு நிர்ணயிப்பது பிரத்யக்ஷத்தில் நிறைவேறக் கூடியதாக இராது. கொள்முதல் கெடுபிடிகளால் விவசாயிகளுக்குத் தொல்லைகள்தான் வளரும். தங்களிடம் இருக்கும் தானியங்களைக் கொள்முதலுக்கெனக் கொடுத்து விட்டுத் தங்களுடைய தேவைகளுக்குச் சர்க்கார் நியாய விலைக் கடைகளில் 'கியூ' வரிசையில் நிற்க வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

விவசாயிகளின் ஊக்கத்தை வளர்க்கும் வகையில், உற்பத்தியைப் பெருக்கும் வகையில் அரசின் நடவடிக்கைகள் அமைந்திருக்கவில்லை. இதைச் செய்யாமல் உள்ளதை விநியோகிப்பதில் அரசு தலையிடுவதும் கட்டுப்பாடுகளைக் கொணர்வதும் மக்களுக்குச் செய்யும் நன்மைகள் அல்ல. அவர்களைத் துயரில் ஆழ்த்தும் காரியங்களாகவே முடியும்.

இஸ்திரிப் பெட்டிகளிலே எத்தனை-
யோ ரகம் உண்டு. சில இயங்கும்
சில தயங்கும். எதை-
யோ வாங்கிய பின்
ஏங்காதீர். பாங்காகத்
தெரிந்தெடுப்பீர் இப்போதே.
க்ளியர்டோன் இஸ்திரிப் பெட்டி.



இஸ்திரிப் பெட்டி
வாங்க எண்ணிப்
புறப்பட்ட பின் எங்கும்
அலைய வேண்டாம். கிட்டத்திலேயே
இருப்பார் க்ளியர்டோன் வியாபாரி.
அவர்போல் நாட்டிலுண்டு
1000 விற்பனையாளர்கள். 7 இஸ்திரிப்
பெட்டிகளின் எழில் வரிசை
க்ளியர்டோன்.
விரிவாகப் பார்வையிட்டு
விரும்பியதை வாங்கிடுவீர்.





இதர தயாரிப்புகள்: குக்கிங் ரேன்ஜ், பிரஷ்ஷர் குக்கர்கள், பாப்-அப் டோஸ்ட்டர்கள், பேக்கிங் ஓவன், ஸாஸ்பான் கெட்டில், ஹாட் ஃபுட் கேபினெட், நாதமிசைக்கும் கதவு மணி, மின்விசிறிகள், மினி-எஸ்-பிரஸோ காப்பி மெஷின், இஸ்திரி போர்டு முதலியன.


Kleertone

க்ளியர்டோன்—வீட்டுபயோக
சாதனங்களின் படைப்பகம்

தி நேஷனல் ரேடியோ & எலக்ட்ரானிக்ஸ் கோ. லிட்.

பம்பாய் • நியூ டெல்லி • கல்கத்தா • சென்னை.

Creative Unit-259-Tam



நவராத்திரி நாயகியர்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

நவராத்திரியில் துர்க்கா பரமேசுவரியையும், மகாலக்ஷ்மியையும், சரஸ்வதி தேவியையும் பூஜிக்கிறோம். மூன்று மூர்த்திகளாகச் சொன்னாலும், முப்பத்து முக்கோடி மூர்த்திகளாகச் சொன்னாலும், அத்தனையாகவும் இருப்பது ஒரே பராசக்திதான். இந்த உண்மையைத்தான் லலிதா சஹஸ்ரநாமம் பரதேவதையை வர்ணிக்கும்போது, அவளே ஸ்ருஷ்டி செய்பவள் (ஸ்ருஷ்டிகர்த்ரீ–ப்ரம்ம ரூபா), அவளே பரிபாலனம் செய்பவள் (கோப்த்ரீ – கோவிந்த ரூபிணீ), அவளே சம்ஹாரம் செய்பவள் (ஸம்ஹாரிணீ–ருத்ர ரூபா) என்று சொல்கிறது. லலிதையாக, துர்க்கையாக இருக்கிற பராசக்திதான் மகாலக்ஷ்மியாகவும் சரஸ்வதியாகவும் இருக்கிறது. லக்ஷ்மி அஷ்டோத்தரத்தில் 'பிரம்ம விஷ்ணு சிவாத்மிகாயை நம:' என்று வருகிறது. சரஸ்வதி அஷ்டோத்தரத்திலும் இப்படியே 'பிரம்ம விஷ்ணு சிவாத்மிகாயை நம:' என்று வருகிறது. படைப்பு, காப்பு, அழிப்பு எல்லாம் செய்வது ஒரே சக்திதான் என்று இந்த நாமங்கள் நமக்கு நன்றாக உணர்த்துகின்றன. ஒரே பராசக்திதான் வெவ்வேறு வேஷங்களைப் போட்டுக் கொண்டு வெவ்வேறு காரியங்களைச் செய்கிறது. துர்க்கையாக இருக்கிற போது வீரம், சக்தி எல்லாம் தருகிறது; மகாலக்ஷ்மியாகி சம்பத்துக்களைத் தருகிறது; சரஸ்வதியாகி ஞானம் தருகிறது.

ஆதிபராசக்தியான துர்க்கையைப் பொதுவாகப் பார்வதி என்று சொல்லலாம். அவள் ஹிமவானின் புத்திரியானதால் மலைமகள். மகாலக்ஷ்மி பாற்கடலில் தோன்றியதால் அலைமகள். சரஸ்வதி சகலகலா ஞானமும் தருவதால் கலைமகள்.

பர்வதராஜ புத்திரியாக வந்த அம்பாளும், க்ஷீரசாகரத்திலிருந்து பிறந்த மகாலக்ஷ்மியும் இரண்டு மகரிஷிகளுக்கும் பெண்களாக அவதரித்திருக்கிறார்கள்.

மகாலக்ஷ்மியை மகளாகப் பெற்று, சீராட்டி வளர்க்க வேண்டும் என்று பிருகு மஹரிஷி தபஸ் செய்தார். அதற்கிணங்கவே லக்ஷ்மி தேவி அவருக்குப் புத்திரியாக உத்பவித்தாள். பிருகுவுக்குப் புத்திரியானதால் அவளுக்குப் **பார்கவி** என்று பெயர் ஏற்பட்டது.

இப்படியே காத்யாயன மகரிஷி சாட்சாத் பரமேசுவரியைப் பெண்ணாக அடைய வேண்டும் என்று விரும்பித் தபஸ் செய்தார். அம்பிகையும் அவருக்கு மகளாக ஆவிர்பவித்தாள். காத்யாயனருக்குப் பெண் என்பதாலேயே அவளுக்குக் **காத்யாயனி** என்ற பெயர் உண்டாயிற்று.

தெய்வத்தைக் குழந்தையாக வரச் சொன்னதில் நிரம்ப விசேஷம் இருக்கிறது. 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்கிறோம். தெய்வமே குழந்தையாக வந்தால் ரொம்பக் கொண்டாட்டமாகும். குழந்தைக்கு நம்மைப் போல் காமமும் குரோதமும் துக்கமும் வேரூன்றி இருப்பதில்லை. இந்த க்ஷணத்தில் ரொம்பவும் ஆசைப்பட்ட ஒரு வஸ்துவை அடுத்த க்ஷணத்தில் தூக்கிப் போட்டுவிட்டுப் போகிறது. கோபமும் இப்படியே சுவடு தெரியாமல் நிமிஷ மாத்திரத்தில் மறைந்து போகிறது. அழுகையும் இவ்வாறேதான். நாம்தான் உணர்ச்சிகளை ஆழ உள்ளுக்கு வாங்கிக் கொண்டு மனத்தைக் கெடுத்துக் கொள்கிறோம். உணர்ச்சிகள் வேரூன்றாமல் குழந்தைகள் போல் நாமும் ஆனந்தமாக இருக்க வேண்டும். இதனால்தான் உபநிஷதமும் 'குழந்தையாய் இரு' என்கிறது.

சாக்ஷாத் பராசக்தியைக் காத்யாயனியாகவும், மகாலக்ஷ்மியைப் பார்கவியாகவும் குழந்தைகளாக்கி அந்த பாவத்திலேயே வழிபட்டால் நமக்கும் குழந்தைத் தன்மை சாக்ஷாத்கரித்துவிடும். இந்த நாளில் வாட்டர் ப்ரூஃப் என்று சொல்வதுபோல், நாம் காம–ப்ரூஃப், குரோத ப்ரூஃப், சோக ப்ரூஃப் எல்லாமாகி, சாந்தமாக இருப்போம். குழந்தை ரூபத்தில் இருந்தாலும் ஞானப் பாலூட்டும் ஸ்ரீ மாதாவாக இருக்கிற தேவி நமக்கு இந்த அநுக்ரகத்தைச் செய்வாள்.

குழந்தையாக வந்த காத்யாயனியைத் தமிழ் நாட்டுக் கிராம ஜனங்கள் கூட நீண்ட காலமாக வழிபட்டு வந்திருக்கிறார்கள் என்பது என் ஊகம். 'காத்தாயி' என்று சொல்கிற கிராம தேவதை 'காத்யாயனி' தான் என்று நினைக்கிறேன்.

'பட்டாரிகை' என்று பெரிய ஸ்ரீ வித்யோபாசகர்கள் குறிப்பிடும் அம்பாளைத்தான் நம் கிராம மக்கள் 'பிடாரி' என்று சொல்லிப் பூஜிக்கிறார்கள். பழைய செப்பேடுகளில் 'பட்டாரிகா மான்யம்' என்பதை 'படாரி மானியம்' என்று குறிப்பிடுவதிலிருந்து இதை உணரலாம்.

இவ்வாறே நம் கிராம ஜனங்களும் கூட சரஸ்வதியை நீண்ட காலமாக வழிபட்டிருக்கிறார்கள். 'பேச்சாயி, பேச்சாயி' என்று சொல்கிற கிராம தேவதை பேச்சுக்கு ஆயியான வாக்தேவி சரஸ்வதியைத்தான் குறிப்பிடுகிறது.

அம்பாளையும், மகாலக்ஷ்மியையும், சரஸ்வதி தேவியையும் பூஜித்து எல்லோரும் சக்தியும், சம்பத்தும், நல்ல புத்தியும் பெறுவோமாக!

'காத்தாயி என்பது காற்று ஆயி - ஆவிருபமான பேய்த் தெய்வம்; பேச்சாயி என்பது பேய்ச்சி ஆயி; பிடாரி ஒரு குரூரக் கடவுள்' என்றெல்லாம் இதுவரை எண்ணியிருந்தோம். இங்கே ஸ்ரீ பெரியவர்கள் தரும் அற்புத விளக்கத்தைப் பாருங்கள்.



நாகரிகச்சுடரை தன் எழிலில் ஏந்தி வருவது
ஸிஸிஎம் வீராங்கனை. ஸிஸிஎம் புதிய
மிர்ராபோ ஃபுல் வாயில் புடவை அவளைத்
தழுவி காண்போர் உள்ளத்தினை நெகிழ
வைக்கிறதல்லவா? கண்களைப் பறிக்கும்
டிசைன்கள். உங்கள் இளம் உள்ளத்து
உணர்ச்சிகளை பிரதிபலிக்கும் வண்ண
ஓவியங்கள். உயர்தர எகிப்திய பருத்தியால்
உருவாக்கப்பட்டவை. 'ஆன்டிகிரஸ்'
செய்யப்பட்டதால் என்றும் கசங்காது.
மற்றும் பொருத்தமான ஃபுல் வாயில்
ரவிக்கைத் துணிகள்.
இதர தயாரிப்புகள்:
ஸ்டேலாங்கர்,
ஸ்ட் ரேஞ்சர் ஷர்ட்டிங்
குகள் • எலகன்ஸா
சூட்டிங் • லவ்லின்
ஷர்ட்டிங் • சில்வர்
லேன், சில்வர்கிங்
வேஷ்டிகள் • மல்,
காடா.
இதோ வருகிறாள், ஸிஸிஎம்
வெற்றி வீராங்கனை!
நியூ மிர்ராபோ
ADWAVE CCM 26 TAM
உங்கள் குடும்ப நண்பன்... CCM
தி கோயம்பத்தூர் காட்டன் மில்ஸ் லிமிடெட்
மார்க்கெட்
செய்பவர்கள்:
வெங்கடேஷ்
வஸ்திராலயா



அலை ஓசை

அமரர் கல்கி

5. வெற்றி ரகசியம்

சென்னை மாநகரின் சிரோரத்தினமாக விளங்கி வந்த பத்மாபுரத்தில் ''தேவி ஸதனம்'' என்னும் பங்களாவில் ராவ்பகதூர் பத்மலோசன சாஸ்திரிகள் துர்வாச முனிவராக உருக் கொண்டிருந்தார். தம்முடைய இதய கமலத்திலிருந்து பொங்கி வந்த குரோத மோகமாற்சரியங்களைப் பேனா முனை வழியாகக் காகிதத்தில் தீட்டிக் கொண்டிருந்தார். ''தார்மிக கேஸரி'' என்னும் ஆங்கிலப் பத்திரிகைக்கு அவர் எழுதிக் கொண்டிருந்த கட்டுரை, எழுதிய காகிதம் தீப்பட்டு எரியுமாறு அவ்வளவு உத்வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. சில காலமாக மேற்படி பத்திரிகையின் பத்திகளில் ராவ்பகதூர் பத்மலோசன சாஸ்திரியாருக்கும் பேராசிரியர் பரிவ்ராஜக சர்மாவுக்கும் மாபெரும் விவாத யுத்தம் நடந்து கொண்டிருந்தது. அந்த யுத்தத்துக்கு மூலகாரணம் சாஸ்திரியார் பத்மாபுரம் சர்வக்ஞ சங்கத்தில் நிகழ்த்திய ஒரு பிரசங்கந்தான்.

ஹிந்து சமுதாயத்தில் அநாதி காலமாக ஏற்பட்டுள்ள வருணாசிரமத்தின் சிறப்பைச் சாஸ்திரியார் மேற்படி பிரசங்கத்தில் சாங்கோபாங்கமாக விளக்கினார். வர்ணாசிரம தர்மத்தை மேற்கொள்ளாததினால் மேனாடுகள் எப்படிப் பயங்கரமான யுத்தத்தில் அகப்பட்டுக் கொண்டு தவிக்கின்றன என்று எடுத்துக் காட்டினார். நாலு வர்ணங்களைப் பற்றிச் சொல்லிவிட்டு நாலு ஆசிரமங்களைப் பற்றிக் கூறும்போது, சந்நியாச ஆசிரமத்தின் மகிமையைப் பற்றி மிக விஸ்தாரமாக எடுத்துச் சொன்னார். காலாகாலத்தில் சந்நியாச ஆசிரமத்தை மேற்கொள்ள முடியாதவர்கள் அந்திக் காலம் நெருங்கிவிட்டதென்று தெரிந்த பிறகாவது 'ஆபத்சந்நியாசம்' வாங்கிக் கொள்வதின் அவசியத்தை இலேசாகக் குறிப்பிட்டார். சாஸ்திரியாரின் மேற்படி பிரசங்கத்தின் சாராம்சம் சற்று விரிவாகவே தினப் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது.

மேற்கண்ட கருத்துக்கள் சாதாரணப் பேராசிரியர் பரிவ்ராஜக சர்மா ஒப்புக் கொள்ளக் கூடியவைதான். ஆயினும் சாஸ்திரியார் பிரசங்கம் செய்து அது பத்திரிகையிலும் வந்துவிட்ட காரணத்தினால் ஏதாவது ஒரு விதத்தில் அதைத் தாக்குவது சர்மாவின் இன்றியமையாத கடமையாயிற்று. எனவே, ''தார்மிக கேஸரி''க்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினார். அதன் சாராம்சமாவது: ''இந்தக் காலத்தில் சிலர் சந்நியாச ஆசிரமத்தைப் பற்றிப் பிரமாதமாகப் புகழ்ந்து பேச ஆரம்பித்திருக்கிறார்கள். உண்மையில் பழைய வேத காலத்து ஹிந்துக்கள் சந்நியாசத்துக்கு அவ்வளவு உயர்வைக் கொடுக்கவில்லை. ஸஹதர்மிணி இல்லாதவன் யாகம் செய்வதற்கு உரியவனாகக் கருதப்படவில்லை. அத்திரி, பிருகு, ஆங்கிரஸர், அகஸ்தியர், வசிஷ்டர், வாமதேவர், பராசரர் முதலிய மகரிஷிகளுக்குப் பத்தினிகள் இருந்தார்கள். கௌதம புத்தருடைய காலத்துக்குப் பிறகுதான் இந்தியாவில் சந்நியாசத்துக்குச் சிறப்பு ஏற்பட்டது. 'ஆபத்சந்நியாசம்' வாங்கிக் கொள்ளும் வழக்கம் மிக்க அபத்தமானது. புதல்வர்கள் சரிவரச் சிராத்தம் செய்யமாட்டார்களோ என்று பயந்தவர்கள்தான் கடைசிக் காலத்தில் அவசரம் அவசர

...மாகச் சந்நியாசம் பெறுவார்கள். சில அபூர்வமான புத்திர சிகாமணிகள் தகப்பனாருக்குச் சிராத்தம் செய்யும் சங்கடம் இல்லாமற் போவதற்காகத் தகப்பனாரைக் கட்டாயப்படுத்தி மொட்டையடித்துக் காஷாயம் கட்டி விடுவதும் உண்டு. ராவ்பகதூர் பத்மலோசன சாஸ்திரியாருக்கு இத்தகைய விபத்து எதுவும் நேராது என்று நம்புகிறேன். சாஸ்திரியார் இம்மாதிரியெல்லாம் உளறிக் கொட்டாமல் தமது திருவாயை மூடிக் கொண்டிருந்தாரானால் ஹிந்து தர்மத்துக்குப் பேருதவி செய்தவராவார்.''

இத்தகைய அவதூறு நிறைந்த கடிதத்தைப் படித்துவிட்டு ராவ்பகதூர் பத்மலோசன சாஸ்திரியார் அளவில்லாத கோபங் கொண்டது இயல்பே அல்லவா? அவர் எழுதிய மறுப்புக் கடிதத்தில் பேராசிரியர் சர்மாவை வெளுவெளு என்று வெளுத்திருந்தார். ''ஹிந்து சமயத்தில் சந்நியாச ஆசிரமத்துக்கு உயர்வு கொடுக்கவில்லையென்று எந்த மூடசிகாமணி — எந்த நிரட்சர குட்சி சொல்லுவான்? இந்தியாவில் ஹிந்து தர்மத்தை நிலைநாட்டிய மகாபுருஷரான ஆதி சங்கராசாரியார் சந்நியாசி அல்லவா? நம்முடைய காலத்தில் ஹிந்து தர்மத்தின் உயர்வை உலகமெல்லாம் உணரும்படி செய்தவர் சுவாமி விவேகானந்தர் அல்லவா? இன்று திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் ரமண மகரிஷியின் பெருமையை உணராத ஜடமாக யார் இருக்க முடியும்? இராமாயண காலத்தில் இந்தியாவிலே சந்நியாச ஆசிரமத்துக்கு எவ்வளவு பெருமை இருந்தது என்பதை வால்மீகி பகவான் சந்தேகத்துக்கு இடமின்றிச் சொல்லியிருக்கிறார். சந்நியாசி வேடத்தில் வந்த இராவணனைப் பார்த்ததும் சீதாதேவி எவ்வளவு பயபக்தி மரியாதையுடன் அவனை உபசரிக்கிறாள்? சந்நியாசத்துக்கு அவ்வளவு மரியாதை அந்தக் காலத்தில் இருந்தபடியால் அல்லவா இராவணன் சந்நியாச கோலம் பூண்டு சீதையிடம் வந்தான்? நிற்க, ஆசிரமங்களை எப்படி வரிசைப்படுத்தியிருக்கிறது என்பதிலிருந்தே எது உயர்ந்த ஆசிரமம் என்பதை நன்கு அறியலாம். பிரம்மச்சரியம், கிரகஸ்தம், வானப் பிரஸ்தம், சந்நியாசம் என்னும் வரிசையில் கடைசியில் இருப்பதனாலேயே அது எல்லா ஆசிரமங்களுக்கும் சிகரமானது என்று விளங்கவில்லையா? சாதாரணமாக எல்லோருக்கும் இது விளங்கக்கூடிய விஷயந்தான். மெத்தப் படித்த மேதாவியான பேராசிரியர் சர்மாவின் அபார மூளைக்கு மட்டும் இது விளங்கவில்லை போலும்!''

இவ்வாறு சாஸ்திரியார் எழுதியதை விவாதத்தின் கடைசி வார்த்தையாக இருக்கும்படி விட்டுவிட்டுப் பேராசிரியர் சர்மா சும்மா இருந்து விடுவாரா? மீண்டும் அவர் எழுதத்தான் செய்தார்:

''ராவ்பகதூர் பத்மலோசன சாஸ்திரிகள் தாம் மெத்தப் படித்தவர் இல்லை என்று ஒப்புக் கொள்கிறார். அப்படியானால் கொஞ்சம் படித்தவர் என்று ஏற்படுகிறது. ஆனால் அந்தக் கொஞ்சமும் எதைப்படித்தாரோ, தெரியவில்லை. இந்தியாவின் சரித்திரத்தைத் தொட்டுப் பார்த்ததில்லை என்று திட்டமாய்த் தெரிகிறது. புத்தருக்குப் பிறகு இந்தியாவிலே சந்நியாசத்துக்குப் பெருமை ஏற்பட்டது என்று நான் சொன்னேன். சாஸ்திரியார், ஸ்ரீ சங்கராசாரியாரையும், சுவாமி விவேகானந்தரையும், ஸ்ரீ ரமண மகரிஷிகளையும் குறிப்பிட்டிருக்கிறார். இந்த மூவரும் புத்தருக்கு முன்னாலிருந்தவர்கள் என்பது சாஸ்திரியாரின் எண்ணம் என்று தெரிகிறது. ஆனால் சாஸ்திரியார் சொல்லிவிட்டதற்காகச் சரித்திரம் வந்த வழியே திரும்பிப்



போய்விடாது. சாஸ்திரியார் 'இராவண சந்நியாசி'யைக் குறிப்பிட்டது பற்றிச் சந்தோஷப்படுகிறேன். இராமாயண காலத்திலேயே சந்நியாச ஆசிரமம் போலிகளுக்கும் மோசக்காரர்களுக்கும் வேஷமாகிவிட்டது என்பதை வால்மீகி பகவான் நன்றாக ஸ்தாபனம் செய்திருக்கிறார். ஆசிரம வரிசைக் கிரமத்தில் சந்நியாசம் கடைசியில் வருவதால் அதுவே உயர்ந்த ஆசிரமம் என்றும் சாஸ்திரியார் சாதிக்கிறார். இதே மாதிரி வர்ணங்களிலும் கடைசி வர்ணமே உயர்ந்தது என்று சாஸ்திரியார் ஒப்புக் கொள்கிறாரா? அப்படி ஒப்புக் கொண்டால் நானும் சந்நியாசத்தில் உயர்வை ஒப்புக் கொண்டு சாஸ்திரியாருக்கு இப்போதே 'ஆபத்சந்நியாசம்' வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்.''

சாஸ்திரிகளின்பாடு இப்போது மிகவும் சங்கடமாகத்தான் போய்விட்டது. தம்முடைய வாதங்களில் உள்ள பலக்குறைவைக் கோபத்தினாலும் தாபத்தினாலும் இட்டு நிரப்பிக் காரசாரமுள்ள பதில் ஒன்றை எழுதப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தார். அந்தப் பிரயத்தனக் காரணமாகச் சாஸ்திரியார்



ரௌத்ராகாரம் கொண்டிருந்தபோது, அவருடைய பங்களாவின் வாசலில், ''பவதி! பிட்சாந்தேஹி'' என்ற குரல் ஒன்று கேட்டது.

மேல் மாடித் தாழ்வாரத்துக்கு வந்து சாஸ்திரியார் எட்டிப் பார்த்தார். இளம் பிராயத்துத் துறவி ஒருவர் நிற்பதைக் கண்டார். அவருக்கு ஏற்பட்ட வியப்பைச் சொல்லி முடியாது. தம் வாழ்நாளிலேயே இது வரையில் இல்லாத பரபரப்புடன் மச்சுப் படிகளை மூன்று மூன்று படிகளாகக் குதித்துத் தாண்டிக் கொண்டு கீழே இறங்கினார். பின் கட்டிலிருந்த தமது வாழ்க்கைத் துணைவியை அழைத்து, ''காமாட்சி! ஓர் அதிசயத்தைக் கேள்! வாசலில் யாரோ பாலசந்நியாசி வந்து நிற்கிறார். முகத்தில் தேஜஸ் ஜொலிக்கிறது. 'பிட்சாந்தேஹி!' என்ற வார்த்தையைக் கேட்டதும் எனக்கு உடம்பெல்லாம் சிலிர்த்து விட்டது. வாசற் கதவு சாவியைச் சீக்கிரம் கொண்டு வா! ஒரு மகானை எத்தனை நேரம் வாசலில் நிறுத்தி வைக்கிறது? சாக்ஷாத் ஆதிசங்கரரே திரும்

அவதாரம் எடுத்து வந்தது போலிருக்கிறது. நம் பிதாமகர்கள் செய்த பாக்கியம், நம் விட்டைத் தேடி வந்திருக்கிறார். என்ன பேசாமல் நிற்கிறாயே ?'' என்று இரைந்தார்.

இதற்குள் வாசற்புறம் எட்டிப் பார்த்து யாரோ ஒரு சந்நியாசி நிற்பதைத் தெரிந்து கொண்ட காமாட்சி அம்மாள், ''எதற்காக இவ்வளவு படபடப்பாய்ப் பேசுகிறீர்கள்? வாசற் கதவு திறந்துதானிருக்கிறது. அப்படி அதிசயமான மகான் எங்கேயிருந்து வந்து குதித்துவிடப் போகிறார் ? இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சாமியாரா யிருக்கும். ஏதாவது நன்கொடை வசூலிப்பதற்காக வந்திருக்கிறார் போலிருக்கிறது!'' என்றாள்.

இதைக் கேட்டதும் சாஸ்திரியாரின் உற்சாகம் கொஞ்சம் தணிந்தது. காமாட்சி அம்மாள் சொன்னதைப் போலவே இராமகிருஷ்ண மடம் அல்லது கௌடியா மடத்திலிருந்து யாராவது நன்கொடை கேட்க வந்திருக்கலாம் என்று நினைத்தார். ஆனால் அப்படியிருந்தால், 'பவதி பிக்ஷாந் தேஹி!' என்று கேட்டிருக்கமாட்டாரல்லவா ? இந்த எண்ணம் கொஞ்சம் தைரியத்தை ஊட்டியது. எப்படியிருந்தாலும் பார்த்துவிடலாம் என்று வாசற் பக்கம் சென்றார். காமாட்சி அம்மாளும் வஸந்தியும் பின்னோடு வந்தார்கள்.

இதற்குள் சாமியாரும் கதவைத் திறந்துகொண்டு வீட்டுக்குள் பிரவேசித்தார். சந்நியாசியை நெருங்கி நின்று பார்த்ததும் சாஸ்திரியாரும் காமாட்சி அம்மாளும், 'தெரிந்த முகமாய்த் தோன்றுகிறதே ! யாராக இருக்கும்?' என்று திகைத்தார்கள்.

''மாமி! என்னை அடையாளம் தெரிகிறதா?'' என்று சாமியார் கேட்டதும் காமாட்சி அம்மாளுக்குப் பளிச் சென்று உண்மை தெரிந்துவிட்டது.

''நம்ம சூரியா போலிருக்கிறதே ? இது என்ன கோலம்?'' என்றாள் காமாட்சி அம்மாள்.

''நம்ம சூரியா போலிருக்கிறதா ? என்ன உளறுகிறாய்? நம்ம சூரியா என்றால் யார்?'' என்றார் சாஸ்திரியார்.

''ராஜம்பேட்டைக் கிட்டாவய்யர் பிள்ளை சூரியாதான். வேறு எந்த சூரியாவைச் சொல்லப் போகிறேன்?''

''நிஜமாகவா? அதனாலேதான் எனக்குக் கூடப் பார்த்த முகமாகத் தோன்றியது'' என்றார் சாஸ்திரியார்.


''ஆமாம்; பூர்வாசிரமத்தில் இந்தக் கட்டையின் பெயர் சூரியாதான்; இந்த ஆசிரமத்தில் சுதந்திரானந்தர்'' என்று சொன்னார் சந்நியாசி.

''அப்படியா? ரொம்ப சந்தோஷம். பால் நழுவிப் பழத்தில் விழுந்தது போலாயிற்று !'' என்று உபசரித்துக் கொண்டே சாஸ்திரிகள் ஸ்ரீ சுதந்திரானந்தரை அழைத்துச் சென்று ஹாலில் சோபாவில் உட்காரச் செய்தார்.

காமாட்சி அம்மாள், ''இத்தனை சின்ன வயதில் இது என்ன கோலம்? அப்பா அம்மா சம்மதித்தார்களா ? காலா காலத்தில் ஆக வேண்டியதெல்லாம் ஆகி, வயதான பிறகு சந்நியாசம் வாங்கிக் கொண்டால் பாதகமில்லை!'' என்றாள்.

சாமியார் பதில் சொல்வதற்குள் சாஸ்திரியார் குறுக்கிட்டு, ''ரொம்ப லட்சணம்! உன்னைக் கேட்டுக்கொண்டு தான் சந்நியாசி ஆக வேணும்போலிருக்கிறது. உலகத்தைத் துறந்து ஆசிரமம் வாங்கிக் கொண்ட பிறகு, அப்பா யார்? அம்மா யார்? பரிவ்ராஜகர் ஆன பிறகு, உலக பந்தமே கிடையாது; குடும்ப பந்தம் எப்படி வரும்? அவள் கிடக்கிறாள், சுவாமிகளே! தங்களைப் போல் பால வயதில் வைராக்கியம் அடைந்து ஆயிரம் பேர் சந்நியாசம் வாங்கிக் கொண்டு ஸநாதன தர்மத்தைப் பிரசாரம் செய்வது என்று ஆரம்பித்தால் ஸநாதன தர்மம் உத்தாரணமே ஆகிவிடும். அது இருக்கட்டும்; தாங்கள் எங்கே, எப்போது இந்த ஆசிரமத்தை மேற்கொண்டது ? எந்த மகானிடம் ஆசிரமம் வாங்கிக் கொண்டது? எத்தனை நாட்கள் ஆயிற்று? ஆசிரமம் வாங்கிக் கொண்ட பிறகு எங்கெங்கே போய் வந்தது? இந்த நகரத்தில் எத்தனை நாட்கள் தங்குவதாக உத்தேசம்? எல்லாம் விவரமாகச் சொல்ல வேண்டும். காமாட்சி! நீ சமையலறைக்குப் போய்க் கொஞ்சம் கவனி. சாஸ்திரோக்தமாகச் சுவாமிகளுக்குப் பிட்சை பண்ணி வைக்க வேண்டும். ஒரு குறைவும் ஏற்படக் கூடாது. தெரிகிறதா?'' என்றார்.

''நன்றாய்த் தெரிகிறது. எல்லாம் ஒரு குறைவுமில்லாமல் நடந்துவிடும், நீங்கள் கவலைப்பட வேண்டாம் !'' என்று சொல்லிவிட்டுக் காமாட்சி அம்மாள் பின்கட்டுக்குச் சென்றாள். அவளுடன் வஸந்தியும் போனதைப் பார்த்த பால சந்நியாசி, ''வஸந்தி ! என்னை ஞாபகம் இல்லையா? பேசமாட்டேன் என்கிறாயே ?'' என்றார். வஸந்தி அப்படியும் சுவாமியாருடன் பேசாமல் பாட்டியைக் குனியச் சொல்லி அவள் காதோடு, ''ஏன், பாட்டி ! சூரியா மாமா எதற்காகக் குடுமியை மொட்டை அடித்துக் கொண்டிருக்கிறார்? திருப்பதிக்குப் போய்விட்டு வந்தாரா ?''



மின்னலடிக்கும் வெண்மைக்கே...
ரின்
RIN
சலவையோ யானையளவு!
சோப்பை விட அரை மடங்கு
அதிகத் துணிகளை வெளுப்பது ரின்!

என்று கேட்டதும் எல்லோரும் சிரித்து விட்டார்கள்.

வஸந்தியையும் அழைத்துக் கொண்டு காமாட்சி அம்மாள் பின்கட்டுக்குச் சென்ற பிறகு சாஸ்திரியார், ''ஆமாம்; தாங்கள் எப்படி இந்த ஆசிரமத்தை மேற்கொண்டது? ஏதோ காங்கிரஸில் சேர்ந்து 'குவிட் இந்தியா' இயக்கத் துக்குப் பாடுபட்டுக் கொண்டிருப்ப தாகச் சொன்னார்களே?'' என்றார்.

''ஆம்; அதுவும் உண்மைதான். 'குவிட் இந்தியா' இயக்கத்துக்காகத் தான் ஊர் சுற்றிக் கொண்டிருந் தேன். ஹரித்வார் போயிருந்த சமயத் தில் அங்கே ஒரு சுவாமியாரைத் தரிசித் தேன். தரிசித்த வேளை, விட்ட குறை வந்து தொட்டுக் கொண்டது. அவ ரிடம் சிஷ்யனாகி ஒரு வருஷம் இருந்து தொண்டு செய்தேன். பிறகு ஆசிரமம் பெற்றுக் கொண்டு க்ஷேத்திர யாத்திரை செய்து வருகிறேன். இப்போது ராமேசு வரத்துக்குப் போய்விட்டுத் திரும்பி வருகிறேன்!'' என்றார் பால சந்நியாசி.

'' தங்களுடைய பூர்வீகர்களிலே யாராவது மகான்கள் இருந்து யாக யக்ஞங்கள் செய்திருக்க வேண்டும். அதனாலேதான் இந்தப் பிராயத்தில் இப்படிப்பட்ட பாக்கியம் தங்களுக்குக் கிடைத்தது. ஈரேழு பதினாலு தலை முறைகளும் தங்களால் கடைத்தேறப் போகிறது. இந்த நகரிலே எத்தனை நாட்கள் தங்குவதாக உத்தேசம்?''

''இன்றைக்கும் நாளைக்கும் இருந்து விட்டு நாளை மறுநாள் புறப்படலாம் என்று நினைக்கிறேன்.''

''அதெல்லாம் கூடவே கூடாது. இங்கே ஒரு மாதமாவது தங்கியிருக்க வேண்டும். இருக்கிற வரையில் நம் முடைய கிரஹத்திலேயே பிக்ஷை, பூஜை எல்லாம் வைத்துக் கொள்ளலாம். சர்வக்ஞ சங்கத்தின் ஆதரவில் உபந்நி யாசங்களுக்கு ஏற்பாடு செய்கிறேன். ஸநாதன தர்மத்தைப் பற்றியும் முக்கிய மாக வர்ணாசிரம தர்மத்தைப் பற்றி யும் உபந்நியாசம் செய்ய வேண்டும். ஹிந்து சமூகத்தில் சந்நியாசத்துக்கு எவ் வளவு பெருமை என்பதை எல்லோரும் மறந்துவிட்டார்கள். பரிவ்ராஜக சர்மா வைப் போன்ற படித்த முட்டாள்கள் கூட இந்த விஷயத்தில் தப்பபிப்பிராயம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தங்க ளுடைய உபந்நியாசங்கள் அவர்களை யெல்லாம் வாயடைத்துப் போகும்படி செய்ய வேண்டும்.''

இந்தச் சமயத்தில் வாசற் பக்க மிருந்து ஓர் இளம் பெண்மணி உள்ளே வந்தாள். அவள் தூய வெள்ளைக் கதர் உடை தரித்திருந்தாள். தலையில் கூந்தல் மாத்திரம் மிக்க நவநாகரிக முறையில் 'பாப்' செய்யப்பட்டுப் பரட்டையாகத் தொங்கியது. ஆனால் நடை உடை பாவனை யெல்லாம் அடக்க மாக இருந்தன.

"நமஸ்காரம் மாமா! சௌக்கியமா? மாமி உள்ளே சமையலறையில் இருக்கிறாரா?" என்று கேட்டுக் கொண்டே அவன் பின்கட்டுக்குச் சென்றான்.

"இந்த அம்மாள் யார்?" என்று சுவாமியார் கேட்கவும், "உனக்குத் தெரியாதா? இவள்தான் என்னுடைய மூத்த நாட்டுப் பெண். இவளுடைய வாழ்க்கையில் திடீரென்று இந்த மாறுதல் ஏற்பட்டு விட்டது. இவளுடைய சிநேகிதிகள் சிலர் 1942 ஆகஸ்டு இயக்கத்தில் சிறைக்குப் போயிருக்கிறார்களாம். இவளுடைய இன்னொரு சிநேகிதி பர்மாவில் நேதாஜி சுபாஷ் பாபுவின் ஐ. என். ஏ.யில் சேர்ந்திருக்கிறாளாம். இதெல்லாம் சேர்ந்து இவளையும் இப்படிக் கதர், காங்கிரஸ் பைத்தியமாக அடித்துவிட்டது. ஆனால் மொத்தத்தில் நல்ல மாறுதல்தான். இவள் இந்த வீட்டுக்கு வந்து இருப்பதாகக் கூடச் சொல்கிறாள். ஆனால் நான்தான் கொஞ்ச நாட்கள் போகட்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். இவள் இங்கிருக்கும்போது போலீஸ்காரர்கள் வந்து இவளைப் பிடித்துக் கொண்டு போனால், என்னுடைய பென்ஷனுக்கு அல்லவா ஆபத்து வந்து தொலையும்?" என்றார் சாஸ்திரியார்.

"ஆனால் தங்கள் பென்ஷனுக்கு இப்போது ஆபத்து வந்தாலும் சுயராஜ்யம் வந்தவுடன் பென்ஷனும் திரும்பி வந்துவிடும் அல்லவா?" என்றார் சந்நியாசி.

"வரலாம், வரலாம். ஆனால் இந்த மாதிரி இளம் பெண்கள் வேலை செய்துதானா இந்தியாவுக்குச் சுயராஜ்யம் வரப் போகிறது? மகாத்மா காந்தி, வல்லபபாய் படேல், ஜவாஹர்லால் நேரு முதலியவர்கள் சிறை புகுந்ததற்கே சுயராஜ்யம் வரவில்லையே?"

"அப்படியானால் இந்தியாவுக்குச் சுயராஜ்யம் வரவே வராது என்று நினைக்கிறீர்களா?" என்றார் சந்நியாசி.

"யார் சொன்னது? இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கட்டாயம் வரத்தான் போகிறது. ஆனால் இவர்களாலெல்லாம் வரப் போவதில்லை; கடவுளுடைய சித்தத்தினால் வேறு 'வழியில் வரப் போகிறது. கலி புருஷர் ஜெர்மனியில் அவதாரம் எடுத்திருக்கிறார். ஹிட்லரைத்தான் சொல்கிறேன். ஹிட்லர் ருஷியாவின் மேல் படையெடுத்தது முட்டாள்தனம் என்று சில பிரகஸ்பதிகள் இங்கே சொல்கிறார்கள். ஹிட்லரைவிட இவர்கள் மேதாவிகள் என்கிற எண்ணம். ஹிட்லர் ருஷியாவின் மீது படையெடுத்ததே இந்தியாவை நோக்கமாக வைத்துக் கொண்டுதான்! ஸ்டாலின் கிராடைப் பிடித்தவுடன், ஒரே தாவலில் இந்தியாவிலே ஆகாச விமானத்தில் வந்து இறங்கப் போகிறார். ஐம்பதினாயிரம் ஆகாசக் கப்பல்களில் துருப்புகளும் வந்து இறங்கப் போகின்றன. ஹிட்லர்தான் ஸ்பஷ்டமாகச் சொல்லிவிட்டாரே, உலகத்திலேயே ஆரிய ஜாதிதான் உயர்ந்த ஜாதி என்று? அப்படியானால் இந்தியாவிலேதானே உலக சாம்ராஜ்யத்தின் தலைநகரத்தை ஸ்தாபித்தாக வேண்டும்? ஹிட்லர் இந்தியாவில் வந்து இறங்கியவுடனே செய்யப் போகிற முதல் வேலை என்ன தெரியுமா? 'சாதி வித்தியாசம் கூடாது' என்று சில பிரகஸ்பதிகள் உளறிக் கொண்டிருக்கிறார்களே,— அவர்கள் எல்லோரும் தலையிலே துணியைப் போட்டுக் கொள்ள வேண்டியதுதான்! உலகத்திலுள்ள ஜனங்களையெல்லாம் அடால்ப் ஹிட்லர் நான்கு வர்ணங்களாகப் பிரித்துவிடப் போகிறார். அப்போது அல்லவா தெரியப் போகிறது, வர்ணாசிரமத்தின் பெருமை? பிழைத்துக் கிடந்தால் நானும் பார்க்கத்தான் போகிறேன்!" என்றார் சாஸ்திரியார்.

அங்கே தேவப்பட்டணத்தில் தாமோதரம் பிள்ளை, 'ஜப்பான்காரன் வந்து எல்லா ஜாதிகளையும் ஒன்றாக்கப் போகிறான்" என்று சொன்னதையும், இங்கே சாஸ்திரிகள், "ஹிட்லர் வந்து வர்ணாசிரம தர்மத்தை நிலைநாட்டப் போகிறார்" என்று சொல்லுவதையும் மனத்துக்குள் சாமியார் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டார். அதனால் தம்மை மீறி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, "ஆனால் சில பேர் ஹிட்லர் தோற்றுப் போய்விடுவார் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்களே!" என்றார்.

"அப்படிச் சில பேர் உளறிக் கொண்டிருக்கிறார்கள். நானும் கேட்டுத்தான் இருக்கிறேன். இவர்கள் இப்படி உளறினால் நடக்க வேண்டியது நடக்காமல் போய்விடுமா? ஹிட்லர் எப்பேர்ப்பட்ட வாழ்க்கை நடத்துகிறார் என்பது தெரியுமல்லவா? மாமிசம் சாப்பிடுவதில்லை; மதுபானம் செய்வதில்லை; ஸ்திரீகளின் முகத்தில் விழிப்பதில்லை. பிறந்ததிலிருந்து பிரம்மசரிய விரதம். சுவாமிகளே! ஹிட்லரைச் சாதாரண மனுஷன் என்று எண்ணிவிட வேண்டாம். அவர் மஹா யோகி; கலிபுருஷனுடைய அவதாரம். ஸம்ஸ்கிருத பாஷையைக் கரைத்துக் குடித்த மகாபண்டிதர்கள் இப்போது ஜெர்மனியில்தான் இருக்கிறார்கள் என்பது தெரியும் அல்லவா? ஒரு நாள் ஜெர்மன் ஸயண்டிஸ்டுகளையெல்லாம் ஹிட்லர் கூப்பிட்டார்.



பெண்மை.
மதிமயக்கும்,
மலைப்பூட்டும்,
மனம் வாட்டும்,
மகிழ்வூட்டும்
பெண்மையின்
பத்துவித
சித்தங்களைப்
படித்தறிந்த
படைப்பு
'மெஃப்ரின்'

மெஃப்ரின்

'மெஃப்ரின்' சேலை அணிபவள்
. மங்கையர்க்கரசியாவாள், உண்மையிலே அது முழு
நிலவாய்த் தழுவும் மோகன கனவே. மென்மையிலே
தென்றல் இழைநெய்த துகிலே, விண்முகிலே.

'மெஃப்ரின்' 100% பாலியெஸ்டர் சேலைகள்,
பாலியெஸ்டர் இழை கலந்த காட்டன் சேலைகள்;
பாலியெஸ்டர் இழை கலந்த உடுப்புத் துணிகள்—
இலேசான லான்கள், கோடை நிழல் படரும்
கேம்ப்ரிக்குகள், கோலாகல நகை மிளிரும்
பாப்ளின்கள்.

மபத்லால் க்ரூப்

AIYARS-M. 287 TM



"பூஜ்யர்!"

ஓர் அமெரிக்க பேஸ்பால் ஆட்டக்காரர் அம்பயர் வில்லியம்ஸுடன் மைதானத்தில் நின்று பேசிக் கொண்டிருந்தார். அன்று விடுமுறையான நாள் அவர்கள் இருவரும் பல்வேறு விஷயங்களைப் பற்றிச் சாவகாசமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். விடை பெறும் பொழுது வில்லியம்ஸ் சொன்னார்: "இன்று நான் நீங்க மைதானத்தில் மட்டையுடன் பந்து நிமிடங்களுக்குமேல் நின்று பார்த்தேன்!" -கே. வி. எம்.

'உங்கள் அசட்டு ஆராய்ச்சிகளையெல்லாம் மூட்டை கட்டி வையுங்கள்; அதர்வண வேதத்தைக் கையில் எடுத்துக் கொள்ளுங்கள்' என்றார். ஜெர்மன் ஸயன்டிஸ்டுகள் அப்படியே செய்தார்கள். அதன் பலன் என்ன? வி. ஒன்று, வி. இரண்டு, வி. மூன்று என்பதாகப் புதுப் புது ஆயுதங்கள் புறப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன! இங்கிலீஷ்காரர்கள், அமெரிக்கர்கள், ருஷ்யர்கள் எல்லோரும் 'முழி முழி' என்று முழிக்கிறார்கள்! எல்லாம் அதர்வண வேதத்திலுள்ள இரகசியம் என்று இவர்களுக்கெல்லாம் தெரியாது. இன்னும் ஒரு விஷயம் தெரியுமோ இல்லையோ? ஹிந்து ஜோதிஷ சாஸ்திரத்தின்படி நாள் நட்சத்திரம் பார்த்துக் கொண்டுதான் ஹிட்லர் ஒவ்வொரு காரியத்தையும் ஆரம்பிக்கிறார். ஸெக்கோஸ்லோவேகியா மீது படையெடுத்த போதும் அப்படி; பிரான்ஸைப் பிடிக்கக் கிளம்பிய போதும் அப்படி; இல்லாவிட்டால் நெப்போலியன் பிறந்த பிரான்ஸு தேசத்தைப் பத்தே நாட்களில் பிரியைக் கட்டி இழுத்திருக்க முடியுமா? நான் சொல்லுகிறது என்ன?" என்று சாஸ்திரியார் நிறுத்தினார்.

"கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்!" என்று பால சந்நியாசி பட்டுக் கொள்ளாமல் பதில் சொன்னார்.

"கவனமாகக் கேட்டு என்ன பிரயோஜனம்? மனத்திலே வாங்கிக் கொள்ள வேண்டும். இன்னொரு சர்வ இரகசியமான விஷயம். நாள் நட்சத்திரம் பார்த்துச் சொல்வதற்கு ஹிட்லர் எப்பொழுதும் பக்கத்திலே வைத்துக் கொண்டிருக்கிற ஆசாமி யார் என்று சுவாமிகளுக்குத் தெரியுமா?"

"அது யார்? தெரியாதே!"

"நான் சொல்லுகிறேன். மன்னார்குடி பஞ்சு சாஸ்திரிகள் பிரசித்தமாயிருந்தாரே, தெரியுமோ இல்லையோ? நாலு வேதம் ஆறு சாஸ்திரம் தெரிந்த மகான். அவருடைய [illegible] வயிற்றுப் பேரன் பிச்சு சாஸ்திரிகளைத்தான் எப்போதும் ஹிட்லர் தம் பக்கத்திலே வைத்துக் கொண்டிருக்கிறாராம். எப்பேர்ப்பட்ட ஜெனரல் ஆகட்டும், பீல்டு மார்ஷல் ஆகட்டும், சீப் ஆப் ஸ்டாப் ஆகட்டும், யார் வந்து 'இதுதான் சமயம்; படை கிளம்ப வேண்டும்!' என்று சொன்னாலும் ஹிட்லர் 'நஹுஹு' என்று சொல்லிவிடுவாராம். பிச்சு சாஸ்திரிகள் பஞ்சாங்கத்தைப் புரட்டிப் பார்த்துப் 'படை கிளம்பலாம்' என்று சொன்னால்தான், புறப்பட உத்தரவு கொடுப்பாராம்! அதன் பலன் என்ன? ஜயத்துக்கு மேல் ஜயம்! வெற்றிக்கு மேல் வெற்றி! உலகமே ஹிட்லரின் காலடியில் வந்து கொண்டிருக்கிறது. அங்கே ஹிட்லர் நம்முடைய சாஸ்திரங்களுக்கு அவ்வளவு மதிப்புக் கொடுக்கிறார். இங்கே சில பிரகஸ்பதிகள், 'பழம் பஞ்சாங்கம்' என்று பரிகாசம் செய்கிறார்கள்! என்னத்தைச் சொல்கிறது? எந்தக் குட்டிச்சுவரிலே போய் முட்டிக் கொள்கிறது என்று கேட்கிறேன்."

இவ்விதம் சாஸ்திரியார் சரமாரியாகப் பொழிந்ததைச் சந்நியாசி வேறு வழியின்றிக் கேட்டுக் கொண்டிருந்தார். இவ்வளவு படித்த மனிதர், பி.ஏ., பி. எல். பட்டம் பெற்றவர், ஸப்ஜட்ஜு உத்தியோகம் பார்த்தவர், உலக அநுபவம் பெற்றவர், — இத்தகைய குருட்டு நம்பிக்கைகளைப் பிடிவாதமாகப் பிடித்துக் கொண்டிருப்பது குறித்து அவருடைய மனத்தில் ஒரு பகுதி ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தது. பரம்பரையாக வந்து இரத்தத்தில் ஊறிப் போன நம்பிக்கைகளைக் கைவிடுவது அவ்வளவு எளிதான காரியமல்ல போலும் என்று எண்ணினார். அதே சமயத்தில் அவருடைய மனத்தில் இன்னொரு பகுதி, 'இவருடைய சளசளப்பு எப்போது ஓயும்? காமாட்சியம்மாளிடம் தனியாகச் சீதாவைப் பற்றிப் பேச எப்போது சந்தர்ப்பம் கிடைக்கும்?' என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தது.

கடைசியில் சாஸ்திரிகளின் பேச்சை நிறுத்துவதற்குச் சாமியார் ஒரு வழி கண்டுபிடித்தார்.

"நீங்கள் சொல்லுவதெல்லாம் சரியாயிருக்கலாம். ஆனால் இப்படி இரைந்து பேசுகிறீர்களே? இப்போதுதான் எங்கே பார்த்தாலும் சி. ஐ. டி.க்காரர்கள் வட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்களே? யார் காதிலாவது விழுந்து ரிப்போர்ட்டு செய்தால் வீண் வம்பு அல்லவா?" என்றார்.

சாஸ்திரியாரின் சரமாரியான பிரசங்கம் அந்தக் கணமே பளிச்சென்று ஓய்ந்தது.

(தொடரும்)

ராஜாஜியின் ஜெயில் டைரி

1921, டிசம்பர் 30உ

சிறை அதிகாரிகள் எங்களையும் ஆந்திரர்களையும் பிரித்து வைக்கத் தீர்மானித்திருப்பது போல் தோன்றுகிறது. செட்டியாரும், சாஸ்திரியாரும், நானும் இங்கு வந்து பத்து நாட்களுக்கு மேலாகி விட்டன. தூக்குத் தண்டனை பெற்ற கைதிகளுடனும், பல முறை குற்றம் செய்து தண்டனை பெற்ற கைதிகளுடனும் நாங்கள் தனிக் கொட்டடியில் வாசம் செய்து வருகிறோம். எங்களை வேறு பகுதிக்கோ, அல்லது என்னை வைத்தியசாலைக்கோ மாற்றுவதற்கான அறிகுறிகள் எதுவும் காணோம்.


அலிகார் இளைஞர்கள் இருவரும் லட்சுமி நாராயணனும் வேறு பலரும் வைத்திய சாலையில் இருப்பதாக அறிகிறேன். என்னை வைத்தியசாலைக்கு அனுப்பாததற்கு அதுதான் காரணமோ என்று எண்ணுகிறேன்.

குழந்தைகளுக்கு ஒரு கடிதம் எழுதி வைத்திருக்கிறேன்.

கொஞ்சம் ஆளி விதை கொண்டு வந்து கொடுத்தார்கள். அதை நான் என் வலது காலில் புதிதாகப் புலப்பட்டுள்ள பருக்களின் மீது பூசி வைத்திருக்கிறேன். இடது காலைச் சோப்பும் சுடுதண்ணீரும் கொண்டு கழுவிக் களிம்பைத் தடவினேன். எங்களுடைய தண்டனையில் அதிகக் கடினமான அம்சம் எங்களுக்குப் பத்திரிகைகள் கொடுக்காமல் இருப்பதுதான். இன்றும் நான் ஒன்றுமே படிக்கவில்லை.

1921, டிசம்பர் 31உ

சிறைத் தலைமை அதிகாரி இன்று என்னைப் பார்த்தார். எனக்கு மாலையில் கொடுக்கும் உணவு எளிதில் ஜீரணமாகக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதை அவர் ஏற்றுக் கொண்டார். மாலையில் எனக்குப் பொரித்த ரொட்டி கொடுக்க முடியுமா என்பதைக் கவனிப்பதாகக் கூறினார். அத்துடன் ஸ்நானத்துக்கு வெந்நீர் கொடுப்பதாகவும் கூறினார். ஆனால், தாம் கூறும் காரியங்கள் சீக்கிரம் நிறைவேறுகின்றனவா என்று பார்க்கும் வழக்கம் அவரிடம் இல்லை. என்னை வைத்தியசாலைக்கு அனுப்பாமல் இருக்கவும், இந்த அறையில் வைத்தே என்னுடைய பருக்கள் முதலியவற்றுக்குச் சிகிச்சை செய்யவும் முடிவு செய்து விட்டார் என்பதில் சந்தேகமில்லை. என்னுடைய பருக்கள் போக வேண்டுமானால் தடுப்பு மருந்து குத்தி வைக்க வேண்டும் என்று பலமாகச் சிபாரிசு செய்தார். அப்படியே எனக்கு மாலையில் மருந்து குத்தி வைத்தார்கள். அத்துடன் என் கால்களில் 'போரிக்' மருந்து கலந்து வெந்நீரைக் கொண்டு ஒத்தடம் கொடுத்தார்கள். ஆனால் வெந்நீர் வைத்தியசாலையிலிருந்து இங்கு வந்து சேர்வதற்குள்ளாகக் குளிர்ந்து விடுகிறது.





வேலூரில் உள்ள நண்பர்கள் எங்களுக்குக் கைராட்டினங்களையும் பஞ்சுத் திரிகளையும் அனுப்பியிருக்கிறார்கள். செட்டியாரும் சாஸ்திரியாரும் நூற்கக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். கௌஸ் சாகேப்புக்கு நன்றாக நூற்கத் தெரியும்.

குழந்தைகளுக்குக் கடிதம் எழுதி அதை என் செலவில் ரிஜிஸ்தர் தபாலில் அனுப்புவதற்காகச் சிறைத் தலைமை அதிகாரியிடம் அனுப்பினேன்.

1922, ஜனவரி 1உ

நேற்று இரவு ரொம்பக் கொஞ்சமாகவே தூங்கினேன். தடுப்பு மருந்து ஊசி குத்தியதால் சிறிது சுரம் உண்டாயிருப்பதுபோல் தெரிகிறது. ஆஸ்துமா கஷ்டமும் மறுபடியும் ஏற்பட்டிருக்கிறது.

காலையில் கஞ்சியைக் கொஞ்சமாகவே குடித்தேன். சிறிது நேரம் கைராட்டினத்தை எடுத்து வைத்துக் கொண்டு நூல் நூற்றேன். கால்களில் ஒத்தடமிட்டார்கள். 'டிஞ்சர் அயோடியன்' மருந்து கொஞ்சம் தடவினார்கள்.

சிறையின் உதவி அதிகாரி சென்னைக்குப் போயிருந்தபோது அவருடைய நண்பர்கள் என்னைப் பற்றிக் கூறியிருக்கக் கூடும் என்று எண்ணுகிறேன். அவர் திரும்பி வந்த பின் என்னிடம் சிநேக பாவத்துடன் நடந்து வருகிறார். எனக்குச் சுடுதண்ணீர் தரும்படியாகத் தலைமை அதிகாரி உத்தரவிட்டிருப்பது போல் தெரிகிறது. உதவி அதிகாரி கொஞ்சம் எண்ணெயும் சீக்காயும் அனுப்பிவைத்தார். ஸ்நானம் செய்ய உதவி புரிவதற்காக வார்டர் இரண்டு கைதிகளையும் அனுப்பினார். அதனால் இன்று ஸ்டோர் அறைகள் ஒன்றில் சுகமாக ஸ்நானம் செய்து முடித்தேன். இந்த மாதிரி சுகம் கிடைத்துக் கொண்டிருந்தால் சிறையை விட்டு வெளியேற மனம் வராமல் போகுமோ என்னவோ!

என்னுடன் பேச அனுமதி தர வேண்டும் என்று சிறைவாசம் செய்யும் சில ஆந்திர நண்பர்கள் அதிகாரியிடம் விண்ணப்பித்துக் கொண்டார்களாம். அதற்குச் சிறை அதிகாரி அனுமதி அளிக்கவில்லை என்பதோடு அக்கோரிக்கை அவருடைய மனத்தில் பயத்தை எழுப்பியிருப்பதாகவும் அறிகின்றேன். அதனால் தான் ஆந்திர நண்பர்களையும் என்னையும் பிரித்து வைத்திருக்கிறார்கள்.

லட்சுமி நாராயணனை வைத்திய சாலையிலிருந்து அவரது அறைக்கு அனுப்பி விட்டதாகத் தெரிகிறது. இப்பொழுது என்னை அங்கே அனுப்பாக் கூடும். என்னுடைய கால்கள் சுகமாகி, இந்தப் பாழாய்ப் போன புருக்களும் இனி வராமல் போகுமானால் சிறைச் சாலையில் சத்தியாக்கிரகக் கைதி எவ்விதம் வாழ வேண்டுமோ, அவ்விதம் வாழக்கூடிய முன்னோடி ஆவேன்.

கண் கண்டதைக் கை உருவாக்குகிறது!

டாக்டர் வீட்டுக்கு வந்து ஊசி போடுகிறார். காலி மருந்து புட்டியை எங்காவது எறிகிறோம். யார் காலிலாவது மீறுத குத்தி அவர்கள் மீண்டும் டாக்டரிடம் போக நேரிடுகிறது! ஆனால் மாம்பலத்திலுள்ள ஸ்ரீமதி வி. எஸ். லட்சுமியிடம் இதுபோன்ற காலி புட்டிகள் கிடைத்தால் அண்ணா நகரில் அமைந்துள்ள ஸ்ரீ விவேகானந்தா நினைவு கோபுரம் போன்ற சிறிய மாடலோ அல்லது ஒரு தாஜ்மகாலோ உருவாக்கி விடுகிறார்! சுமார் 300 காலி புட்டிகளை ஒன்றோடு ஒன்று பொருத்தி ஒட்டி சுமார் 3 அடி உயரமுள்ள விவேகானந்தா கன்னாடி கோபுரத்தை மூன்று வாரங்களில் தத்ரூபமாக உருவாக்கியுள்ளார். படத்தில் நீங்கள் பார்க்கும் இதோபதேசக் காட்சி கம்பி, பிளாஸ்டிக் மணிகளால் உருவானவை. நவராத்திரியின்போது இவரது வீட்டுக் கொலுவில் இக்கலைப் பொருட்கள் இடம் பெறுகின்றன. பத்து வயது முதலே இப்படி ஏதாவது செய்வதில் இவருக்கு ஆர்வம் வளர்ந்து வந்துள்ளது. இந்த ஆர்வம் இக் குடும்பத்தில் அனைவருக்குமே தோன்றி, ஸ்ரீமதி லட்சுமியின் படைப்புகளுக்கு உதவி வருகிறது. ரங்கோலி வண்ணக் கோலங்கள் வரைவதும் இவருக்குக் கைவந்த கலை. புதுமையான மாதிரி ஒரு வாருமின்றியே பழக்கிக் கொண்டுள்ளார்.

- ருக்மிணி பாலகிருஷ்ணன்



உங்கள் வீட்டு நவராத்திரி கொலுவில் நீங்களே தயாரித்த கலைப் பொருள் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா? இருந்தால் நல்ல முறையில் படம் எடுத்து அனுப்புங்கள். சிறந்த கலைத்திறன் என்று நாங்கள் தேர்ந்தெடுக்கும் பொருளை உருவாக்கியவருக்குப் பரிசு உண்டு.

- ஆசிரியர்

முடிவு தேதி 24-10-72

ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. கடிதப் போக்குவரத்து கிடையாது. புகைப் படங்களைத் திரும்பப் பெறப் போதிய தபால் தலைகள் அனுப்ப வேண்டும்.



அய்க்கண்

"ஹாய் சுரேஷ்! எங்கே புறப்பட்டு விட்டே?"

"ஏண்டா, மறந்துட்டியா? இன்னைக்கு அழகுப் போட்டி இல்லையா? நீ டிக்கெட் வாங்கலியா ராமு?"

"இல்லே.... எனக்குப் பிடிக்கலேடா.... இளம் பெண்கள் நீச்சல் உடையிலே அரை குறை ஆடையோடே மேடைக்கு வந்து, குலுக்கி, மினுக்கி நடக்கிறது எனக்குப் பிடிக்கலேடா!"

"முட்டாள்! அதுதான்டா அழகு.... மில்டன் சொல்றான்: 'ப்யூட்டி'ங்கிறது இயற்கையினுடைய நாணயம். அதை மறைச்சோ ஒளிச்சோ வைக்கக் கூடாது. அது நாலு பேர் பார்க்கப் புழங்கணும். அப்போதான் அழகுக்கும் மதிப்பு."

"இல்லே! உன்னோடு நான் ஒத்துப் போக மாட்டேன். அழகை மூடி மறைச்சால்தான் அழகு. இதோ சுரேஷ்! இந்த 'கபா' சோப் விளம்பரத்தைப் பாரு. ஒரு மாடல் பெண் போஸ் கொடுத்திருக்கிறாளே, எவ்வளவு கவர்ச்சியாயிருக்கு பார்! இவ்வளவுக்கும் இவள் முகத்தைத் தவிர உடல் முழுவதும் சேலையும் ரவிக்கையும் மறைச்சுக்கிட்டுத் தான் இருக்கு!"

"ஆமா... இந்த மாடலைப் பொறுத்த வரை நீ சொல்வது சரி. இவள் அழகின் சிகரம். பொதுவாகப் பெண்களுக்கு முக அழகு இருந்தால் உடல்கட்டு இருக்காது; உடல்கட்டு இருந்தால் முக அழகு இருக்காது. ஆனால் இந்த மாடல் பெண்ணுக்கு ரெண்டும் இவ்வளவு அற்புதமாக அமைந்திருக்கிறது ரொம்ப ஆச்சரியம்தான்! இவள் மாதிரி அழகியை நான் படத்தில்கூடப் பார்த்ததில்லே. ராமு!... இந்த மாடல் மட்டும் சினிமா உலகத்திலே நுழைஞ்சால் ரசிகர்களின் தாரகையாக மின்னுவாள்டா..."

"அசடு! எந்த அழகான பெண்ணைப் பார்த்தாலும் உடனே ஒரு நடிகையாகத்தான் உனக்குப் பார்க்கத் தோணுதாடா?... நம்ம புத்தி வரவர ரொம்பக் குறுகிப் போச்சுடா. நம்ம தாயையும் சகோதரியையும் தவிர, வேறு எந்தப் பெண்ணையுமே அந்த ஸ்தானத்தில் பார்க்கிற பக்குவம் நமக்கு இல்லாமல் போச்சு!..."

"குட் ஈவினிங், மானேஜர் ஸார்!"

"குட் ஈவினிங், சந்திரா!...உட்காருங்க."

"தாங்க்யூ ஸார்!"

''தோ கூப்பர்மாவிட்டு. சந்திரா! இப்போ மணி என்ன?''

''ஐந்தரை ஸார்!''

''அப்போ வேலை முடிஞ்சு போச்சு. இனி நான் மானேஜர், நீ ஸ்டெனோ என்கிறதில்லே, புரியுதா?''

''ஓ. கே. ஸார்!''

''இன்னைக்கு நம்ம சோப் விளம்பரத்திலே உன் படத்தைப் பார்த்தாயா?''

''பார்த்தேன் ஸார்!''

''உண்மையிலேயே அழகு சுந்தரிதான்! உன்னுடைய படத்தைப் பார்த்த பிறகு இன்றைக்கே நம்ம சோப் விற்பனை திடீர்னு உயரப் போகுது பார்! நம்ம முதலாளிக்கு ரொம்ப சந்தோஷம். அந்தச் சமயம் பார்த்து, நீ போஸ் கொடுத்ததற்கான சார்ஜை இரண்டு பங்கு கொடுக்கலாம்னு சிபாரிசு பண்ணினேன். அவரும் சரின்னு சொல்லிவிட்டார்.''

''நன்றி ஸார்!''

''வெறும் நன்றி மட்டும்தானா சந்திரா?... இதை ஏன் நாம் கொண்டாடக் கூடாது?''

''நீங்க என்ன கேட்டாலும் வாங்கித் தர்றேன் ஸார்!... ஸ்வீட், காரம், காப்பி...''

''இல்லே... அதோடு விஷயத்தை முடிச்சுடப் பார்க்கிறியா? முடியாது...''

''ஸார்! எனக்காக நீங்கள் எவ்வளவோ உதவி செஞ்சிருக்கீங்க... பவுடர் கம்பெனியிலே இருந்து, வீட்டுக்கு வீடு போய் கான்வாஸ் செய்து கொண்டு, எவ்வளவோ கசப்பான அநுபவங்களையெல்லாம் அனுபவிச்சுக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தபோது ஒரு நாள் உங்க வீட்டுக்கு வந்த என்னைப் பார்த்துப் பரிதாபப்பட்டு எனக்காகச் சிபாரிசு செய்து இந்த நல்ல வேலையை வாங்கிக் கொடுத்தீங்க... ஏழைக் குடும்பத்திலே மூத்த பெண்ணாய்ப் பிறந்த பாவத்துக்காக, ஆண் பிள்ளை மாதிரி நானே சம்பாதிக்க நேர்ந்தது. எனக்கும் கல்யாணம்னு ஒண்ணு நடந்து குடும்பம் நடத்தி நானும் ஒரு பெண்ணாக வாழ முடியுமான்னு திகைத்துக் கொண்டிருந்தபோது, நீங்க கடவுள் மாதிரி வந்து எனக்கு ஆதரவு கொடுத்தீங்க ஸார்!''

''சந்திரா! என்ன இது. கல்யாணத்தைப்பத்தி இப்பவே நினைக்க ஆரம்பிச்சுட்டே?... இந்த இளம் வயதிலே கல்யாணம் குடும்பம்னு அகப்பட்டுக்கிறது முட்டாள்தனம். நீயெல்லாம் இப்போ வாழ்க்கையை நல்லா அனுபவிக்கணும்! தெரியுமா?''

''......''

''பாவம், சந்திரா!... எப்பவும் ஆபீஸ், வீடுனு ஒரே மாதிரி யந்திர வாழ்க்கை வாழ்ந்துக்கிட்டிருக்கே!... உனக்கும் ஒரு மாறுதல் வேண்டாமா?... நாம் ஒரு படத்துக்குப் போனால் என்ன?''

''ஸார்...!''

''ஆமா.... இப்படியே ஹோட்டலிலே போய்ச் சாப்பிட்டுட்டு, ஒரு நல்ல சினிமாவுக்குப் போகலாமே?''

''ஸார்! ப்ளீஸ்...கையைத் தோளிலிருந்து எடுங்க...யாராவது பார்த்திடப் போறாங்க.''

''இதிலே ஒண்ணும் தப்பில்லே, டியர்! இது ரொம்ப சகஜம்...''

''ஸார்! இது உங்களுக்கு நல்லாயில்லே ஸார்! நான் வர்றேன்...''

''நன்றிகெட்ட ஜென்மமே! உனக்கு எவ்வளவு உதவி செஞ்சிருக்கேன்?''

''ஸார்! உங்களிடம் நான் கொண்டிருக்கிற நன்றியைக் காட்டறதுக்கு இதுவா ஸார் வழி?... மானேஜர் ஸார்! நீங்களும் பெண் குழந்தைகளைப் பெத்தவங்க... பிற்காலத்திலே என் மாதிரி உங்க மகளும் ஓர் ஆபீஸிலே வேலை பார்த்து, அங்கே அவளுக்கு வேலை கொடுத்த மானேஜர், இந்த மாதிரி நன்றியைக் காட்டச் சொன்னால்...''

''சந்திரா! என்னை அவமானப்படுத்திட்டேயில்லே?... இதற்கு நீ நன்றாக அனுபவிக்க வேண்டி நேரும்!''

* * *

''காஷியர் ஸார்! இப்போ நம்ம ஆபீஸிலே ஒரு 'சேஞ்ச்' கவனிச்சீங்களா?''

''என்னப்பா சொல்லறே? எனக்குக் காசு, சில்லறை 'சேஞ்ச்'தான் தெரியும். வேறு ஒண்ணும் தெரியலே.''

''நம்ம மானேஜர் எப்பவும் ஸ்டெனோ சந்திராவிடம் ஹிஹின்னு இளிச்சுக்கிட்டிருப்பாரே, இப்போ அப்படி இல்லே ஸார்! ரெண்டு பேரும் கர்புர்னு ஆயிட்டாங்க!''

''அதைப் பத்தி நமக்கென்ன கப்பு? நீ வேலையைப் பாரு!''

''அதுக்கில்லே ஸார்! அந்தப் பெண் ஏழையாயிருந்தாலும் ரொம்ப ரோஷக்காரி ஸார்! இவரு எதாச்சும் அதுக்கிட்டே வாலாட்டியிருப்பாரு — மற்ற 'லோபிஸ்டி கேட்' பெண்கள்மாதிரி சந்திராவையும் நினைச்சிருப்பார். அது நல்லாக் கொடுத்திருக்கும். வாலைச் சுருட்டிக்கிட்டு உட்கார்ந்திட்டாரு.''

''ஆமா, கப்பு! அந்தப் பொண்ணுதான் யாரையோ காதலிக்குதுன்னு சொன்னியே?''

''யாரோ என்ன? அவனும் என் மாதிரி நம்ம ஆபீஸிலே அப்பர் டிவிஷன் கிளார்க்கு



தான் ஸார்! டெலிவரி செக்ஷன் பாலுவைத் தான் அந்தப் பொண்ணு காதலிக்குது.''

''பார்த்தியா கப்பு? நீயும் யு.டி.ஸி.தான்; பாலுவும் யு. டி. ஸி. தான். ரெண்டு பேர் நிலைமையும் ஒண்ணுதான். இன்னும் சொல்லப்போனால் நீ அவனைவிட எவ்வளவோ அழகு. சந்திராவுக்குப் பொருத்தமான அழகன் நீதான். ஆனாலும் அந்தப் பொண்ணு பாலுவைக் காதலிக்குது பாரு. அதுதான் அதிர்ஷ்டங்கறது!''

''இல்லே ஸார். அது அதிர்ஷ்டம் இல்லே; அதுதான் காதல். காதலுக்குக் கண்ணில்லே என்பார்களே!... இதிலே ஒரு வேடிக்கை பாருங்க ஸார்! நம்ம பாலு இருக்கிறானே, அவனுக்குச் சந்திராவின் காதலைப் பார்த்து ஒரே ஆச்சரியம்! இவ்வளவு அழகான ஒரு பெண், தன்னைப் போல் அழகற்றவனைக் காதலிப்பாளான்னு அவனுக்குப் பெரிய சந்தேகம். — இன்ஃபீரியாட்டி காம்ப்ளெக்ஸ்— என்கிட்டேயே பல முறை சொல்லி யிருக்கான்... ஒதெல்லோ — டெஸ்டிமோனு நாடகம் படிச்சிருப்பீங்களே ஸார்? அதே கதை!''

* * *

''குட் மார்னிங் ஸார்!''

''குட் மார்னிங் மிஸ் சந்திரா!... முதல்லே உங்ககிட்ட பெர்மிஷன் கேட்டுக்கிறேன். இப்போ நான் உங்க முதலாளி என்ற தோரணையில் பேசலே; ஆபீஸ் நேரத்திலேயே உங்களிடம் தனிப்பட்ட சொந்த விஷயங்களைப் பேசப் போகிறேன். இதை ஆபீஸ் நேரமான பிறகுதான் பேசணும். ஆனால் அந்த நேரத்திலே உங்களிடம் பேசறதுக்கு எனக்குத் தைரியம்வரலே...''

''பரவாயில்லே ஸார்! இப்போதே பேசலாம்.''

''தாங்க்யூ... நான் ஒண்ணும் இப்போ புதிசா சொல்லப் போறதில்லே. முன்பே ஒரு முறை உங்ககிட்டம் சொல்லியிருக்கிறேன். ....நீங்க என்னைக் கல்யாணம் செய்துகொள்ள முடியுமான்னு கேட்டேன். நீங்க மறுத்திட்டுப் போயிட்டீங்க... அப்படிச் செஞ்சதினாலே உங்க மேலே—அட்மிரேஷன் அதிகமாயிருக்கு. நான் உங்களை விரும்பறதுக்குக் காரணம், உங்களுடைய பேரழகு மட்டும் இல்லே — 'மட்டும்' என்ன? உங்களைவிட அழகான பெண்களைப் பார்த்திருக்கிறேன், பழகியிருக்கிறேன். உங்களிடம் உண்மையைச் சொல்லுவதற்கு என்ன? — நெருங்கிப் பழகியிருக்கிறேன்... ஆனால், நான் கேட்டவுடனேயே, கேட்பதற்கு முன்னமே இன்பம் கிடைக்கிறதினாலே — அப்படி இலகுவாகக் கிடைக்கிற காரணத்தினாலேயே அந்த இன்பம்கிற 'த்ரில்'லே எனக்குக் கிடைக்காமல் போயிடறது. மிஸ் சந்திரா!... எந்த ஒரு பெண்ணின் முன்னிலையில் ஆணின் உள்ளத்தில் உயர்ந்த எண்ணங்கள், உயர்ந்த ஒழுக்கங்கள் தூண்டப்படுகின்றனவோ, அவள் தான் பெண். என் கீழ்த்தரமான எண்ணங்கள், பழக்க வழக்கங்கள் எல்லாவற்றையும் நினைத்து நான் வெட்கப்படுகிறேன். இந்தப் பெண்ணுக்குத் தகுந்த கணவனாக நான் உயர வேண்டும் என்று துடிக்கிறேன். என்னுடைய துடிப்புக்குத் தூண்டுகோலாக நீங்கள் இங்கே ஆபீஸ் நேரத்திலே சில மணி நேரங்கள் இருப்பதைவிடத் தினசரி இருபத்து நாலு மணி நேரமும் என் முன்னே இருந்தால் நிச்சயம் நான் நல்ல ஒழுக்கமுள்ள மனிதனாக மாறிவிடுவேன். நான் கெட்டுப் போனவன் தான்; ஆனால் ஒரு பெண்ணைப் பலவந்தமாக அடைய நினைக்கிற அளவுக்கு நான் இன்னும் கெட்டுப் போகல்லே... மன்னித்துவிடுங்கள், மிஸ் சந்திரா! ரொம்ப நீளமாகப் பேசிக்கிட்டே யிருக்கேன். உங்களிடம் நான் ரொம்ப நேரம் பேச ஆசைப்படறேன். நீங்க பேசுவதையும் ரொம்ப நேரம் கேட்க ஆசைப்படறேன்...''

''.......''

''நல்லா யோசிச்சுச் சொல்லுங்க. ஏன்னா, இந்த விஷயத்திலே யோசிக்க வேண்டியவங்க நீங்கதான். நமக்குள்ளே கல்யாணம் நடந்தால் அதனாலே அதிக நன்மை அடையப் போறது நான்தான். 'இவர் என் கணவர்'னு பெருமையாய்ச் சொல்லிக்கிற அளவுக்கு நான் இருப்பேனோ இல்லையோ, இவள் என் மனைவின்னு பெருமையாய்ச் சொல்லிக் கொள்ள முடியும்.''

''ஸார்!... என்னை மன்னிச்சிடுங்க...நான் ஏற்கனவே... ஒருத்தரைக் காதலிக்கிறேன்.''



''அப்படியா? மன்னிச்சுடுங்க சந்திரா! என்னை மன்னிச்சுடுங்க... இன்னொருவருடைய காதலியிடம் போய் நான் என்னென்னவோ பேசிக்கிட்டிருக்கேன், பாருங்க!... உங்க காதல் நிறைவேற என் மனப்பூர்வமான வாழ்த்துக்கள்... ஒரு வேளை, உங்ககாதல்.... வேண்டாம், அதைச்சொல்ல நான்விரும்பவில்லே... நீங்கள் போகலாம்!''

''நீங்கள் சொல்ல விரும்பாதது எது என்று எனக்குப் புரிகிறது ஸார்!''

''.......''

''நான் வருகிறேன், ஸார்!''

* * *

''பாலு!... என்ன ஒரேயடியாய்ச் சிந்தனையில் ஆழ்ந்திட்டீங்க?''

''ஒண்ணுமில்லே சந்திரா! நமக்குள்ளே ஏற்பட்ட காதலை நினைக்கப் பார்க்கிறேன். பெண்கள் என்றாலே அலர்ஜியாக இருந்த நான் — எங்கேயோ இருந்த நீ — எப்படி நம்ம ரெண்டு பேருக்கும் காதல் ஏற்பட்டுவிட்டது பார்த்தியா?''

''அதுதான் காதல் என்கிறது!... காலேஜிலே தமிழ் லெக்சரர் சொல்லுவார்: 'காதல் என்கிறது ஏழேழு பிறவியும் தொடர்ந்து வரது; போன பிறவியிலே காதலர்களாக இருந்தவர்களைத் தெய்வமே அடுத்த பிறவியிலும் சந்திக்க வைக்கக் காதலர்களாக்கும்'னு சொல்லுவார்...''

''அதிருக்கட்டும், சந்திரா!... இவ்வளவு அழகியான நீ என் மாதிரி அழகில்லாதவனை எப்படிக் காதலிக்க முடியறது?.. நம்ப முடியல்லியே?''

''அடடா!... எப்போ பார்த்தாலும் இதே பேச்சுத்தானு?... பாலு! ஆண்களுடைய புற அழகிலே பெண்கள் மயங்கிவிட மாட்டாங்க; அவர்களுடைய அகத்தழகுதான் முக்கியம். புற அழகு இன்றைக்கு இருக்கும்; நாளைக்குப் போயிடலாம். ஆனால் உள்ளத்தின் அழகு — அது என்றும் உள்ளதல்லவா?''

''சபாஷ்! தமிழ்ச் சினிமா வசனம் மாதிரி இருக்கே!... ஏன் சந்திரா, பேப்பரிலே நம்ம கம்பெனி விளம்பரத்திலே உன் அழகான படம் வெளி வந்ததே. அதைப் பார்த்திட்டு எந்தச் சினிமாக்காரனாவது உன்னை நடிக்கக் கூப்பிட்டா, நீ என்ன செய்வே?''

''சினிமாவைப் பத்தி என்ன பேச்சு? நான் என்ன புரொபஷனல் மாடல்னு நினைச்சுட்டீங்களா? நம்ம முதலாளியும் மானேஜரும் ரொம்பக் கேட்டுக் கிட்டதாலே, நம்ம குடும்பத்துக்கும் நல்ல பணம் கிடைக்குதேன்னு தான் ஒப்புக் கொண்டேன். அதுவும் ஒரேயொரு படம்தான் தெரியுதா? நாம எத்தனை நாட்கள் இப்படியே திருட்டுத்தனமாய்ச் சந்திச்சுக்கிட்டிருக்கிறது?... எனக்கும் வேலை நிரந்தரமாயிடுச்சு.''

''உனக்கு இவ்வளவு சீக்கிரமாய் வேலையை நிரந்தரமாக்கினதுக்கு என்ன காரணம்?''

''என் கடமையுணர்வும் நடத்தையும்தான் காரணம். எதுவா யிருந்தால் என்ன? இனி நடக்க வேண்டியதைப் பேசுவோம். இனி மேலும் இப்படியே வெறும் காதலர்களாக இருந்துக்கிட்டிருக்கமுடியாது. தெரிஞ்சுதா?''

''ஆனால்—எனக்கு ஒரு பிரச்னை இருக்குதே. அதனால்தான் கொஞ்சகாலம் ஆகட்டுமென்னு பார்க்கிறேன்.''

''என்ன பிரச்னை அது? சொல்லுங்களேன்!''

''ஒண்ணுமில்லே; அதைப் பிறகு சொல்றேன்.... ஏன் சந்திரா! பெண்கள் மனசு நிலையில்லாததுன்னு சொல்றாங்களே, அதைப் பத்தி என்ன நினைக்கிறே?''

''அடடா!... பெண்கள் ... மனசு ... காதல் ... அழகு... இப்படி ஆராய்ச்சி பண்ணி முடிச்சு, என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்குள்ளே நான் கிழவியாய்ப் போய் விடுவேன்.''

* * *

''குட் ஈவினிங் ஸார்!... குட் ஈவினிங் மானேஜர் ஸார்!''

''குட் ஈவினிங், மிஸ் சந்திரா! இந்த ராத்திரி நேரத்திலே உங்களைக் கூப்பிட்டு வேலை செய்யச் சொல்வதற்காக என்னை மன்னிச்சுடுங்க... கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே, ஒன்பதரை மணிக்கு பம்பாயிலிருந்து டிரங்க் கால் வந்தது. நம்ம லயஸான் ஆபீஸர் பேசினார்: கெமிகல் தொழிற்சாலை சம்பந்தமாக ஒரு ஜப்பான் கம்பெனியுடன் 'கொலாபரேஷன் பேசிக் கொண்டிருக்கோமே, அந்தக் கம்பெனி முதலாளி ஒரு மாநாடு சம்பந்தமாக லண்டன் போற வழியிலே பம்பாயில் நான்கு மணி நேரம் தங்கப் போகிறாராம். அப்போ நான் போய் நேரடியாய்ச் சந்தித்துப் பேச வேண்டும். அதற்காகச் சில விஷயங்களும் டாக்குமெண்டுகளும் நாம் தயாரிக்கவேண்டும். காலை ஆறு மணி விமானத்திலே புறப்படறேன். அதனாலேதான் மானேஜரையும் உங்



''புரிஞ்சு போச்சு, புதுப்புடவைதானே? ஷோகேஸ் பொம்மைமாதிரி எத்தனை நேரம் நிற்பாய்? சாதம் போடு!''

களையும் இந்த அகால நேரத்திலே அழைத்து வரச் சொன்னேன்...''

''ஆமாம், சந்திரா! காலை நாலு மணிக்குள்ளே எல்லாத்தையும் முடிச்சுடணும். நான் எல்லாப் பேப்பரையும் டிராப்ட் போட்டுக் கொடுத்திடறேன். நீ ராத்திரி எவ்வளவு நேரமானாலும் அதையெல்லாம் டைப் பண்ணிக் கொடுத்திடு.''

''எஸ் ஸார்!''

''நன்றி மிஸ் சந்திரா! பம்பாயிலே பேசுற பேச்சு நன்றாக முடிந்தால் அப்படியே நேரடியாக ஜப்பானுக்கே போய் எக்ரிமெண்டை முடிச்சுட்டு வரலாம்னு நினைக்கிறேன்...''

''உங்களுக்கு அதிர்ஷ்டம் கிட்டட்டும்!''

''தாங்க்யூ மிஸ் சந்திரா!...இதோ இந்தக் கடிதங்களை டைப் பண்ணுங்க.''

''ஆகட்டும், ஸார்!''

* * *

''என்ன பாலு! கடைசியிலே இப்படியா யிடுச்சு? ஐயோ பாவம்...''

''என்ன சங்கர், என்ன சொல்றே?''

''ஏன், உனக்கொண்ணும் தெரியாதா? விஷயம் ஆபீஸ் முழுதும் சிரிப்பாய்ச் சிரிக்குது!''

''என்ன சங்கர், என்ன விஷயம்?''

''என்ன விஷயம்? காத்திருந்தவன் பெண்டாட்டியை நேத்து வந்தவன் கொண்டு போனவன் கதைதான்... நேத்து ராத்திரி நம்ம ஆபீஸிலே நடந்தது தெரியாதா?''

''தெரியாதே! என்ன நடந்தது?''

''ஆமாம், உனக்கு எப்படித் தெரியும்? நீதான் அழகின் மயக்கத்திலே இருக்கிறவனாச்சே!''

''சங்கர்! விளங்கும்படியாகச் சொல்லேன். என்ன நடந்தது?''

''நேத்து ராத்திரி, ஏதோ அவசரமான வேலைன்னு நம்ம முதலாளியும் மானேஜரும்

கூட்டுக் கல்வி

கல்கியில் நான்கு வாரங்கள் இடம் பெறும் இந்த விவாத அரங்கில் மாணவ, மாணவிகள், கல்லூரி முதல்வர்கள், பெற்றோர்கள் ஆகியோர் பங்குகொள்கின்றனர்.

குமாரி கே. ரமா (பி. காம். இரண்டாம் ஆண்டு)
எஸ். ஐ. இ. டி. மகளிர் கல்லூரி

கல்லூரி மட்டத்தில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிப்பதன் விளைவாக ஏதோ பெரிய விபரீதம் நேரிட்டுவிடும் என்று நினைப்பது வீண் பிரமைதான்! மாணவர்கள் மாணவிகளிடம் தகாத முறையில் சேஷ்டை செய்வார்கள் என்று சிலர் சொல்லக் கூடும். மாணவிகள் வரம்பு மீறாமல் இருந்தால் மாணவர்களும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்வார்கள். சேர்ந்து படிப்பது நமது கலாசாரத்துக்கு விரோதம், பண்பாட்டுக்கு விரோதம் என்றெல்லாம் வாதம் தொடுக்கலாம். பெண்கள் லுங்கி அணிவதும், ஸ்கர்ட் போட்டுக் கொள்வதும், 'ஸ்லீவ்லெஸ்' அணிவதும் மட்டும் நமது பண்பாட்டுக்குப் பொருந்துமா என்று கேட்கிறேன். 'டீஸென்ட்'டாக டிரஸ் செய்து கொண்டு கல்லூரிக்கு வரும் மாணவிகளிடம் மாணவர்கள் தவறாகப் பழக மாட்டார்கள். ஆடவர்களைச் சீண்டுகிற மாதிரி — அதாவது 'டீஸ்' (Tease) செய்கிற மாதிரி — டிரஸ் செய்து கொண்டு மாணவிகள் கல்லூரிக்கு வந்தால் மாணவர்கள் சிலர் சீட்டி அடிப்பார்கள், கேலி



செய்வார்கள். அதற்காக மாணவர்களை மட்டும் குற்றம் சாட்டலாமா?

இன்று பெண்கள் படித்துப் பட்டம் பெற்று வேலைக்குப் போவது சகஜமாகி விட்டது. பெண்கள் பலர் ஆண்களுடன் ஒரே அலுவலகத்தில் பணியாற்றி வருகிறார்களே — அங்கெல்லாம் என்ன விபரீதம் நடக்கிறது? ஒழுங்கு தவறி நடப்பவர்கள் ஒருசிலர் இருக்கலாம். அவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் தவறு செய்யக் கூடும்.

பெண்களுக்குப் பொதுவாக ஆண்களிடம் பழக வாய்ப்பு இல்லை. அண்ணா, தம்பி, அப்பா அல்லது வேறு நெருங்கிய உறவினர்களிடம் மட்டுமே பழகி வருகிறார்கள். சம வயதுள்ள பிற ஆண்களைக் கண்டால் ஒருவிதக் கூச்சம் அல்லது பயம் குறுக்கிடுகிறது. ஆண்களுடன் சேர்ந்து கல்வி பயிலும்போது இந்தப் பய உணர்ச்சி நீங்கிவிடுகிறது. மேலும் பெண்கள் ஒரு வேலைக்கு 'இன்டர்வியூ'வுக்குப் போனால் தைரியமாகப் பேசவும், வேலையில் சேர்ந்த பிறகு ஆண்களுடன் ஒரே அலுவலகத்தில் வேலை செய்யும்போது அனைவரிடமும் நல்ல முறையிலே பழகவும் கூட்டுக் கல்வி அளிக்கும் கல்லூரிகள் ஒரு பயிற்சிக் கூடமாகும்.

கூட்டுக் கல்வி அமலில் உள்ள கல்லூரிகளில் 'பெண்கள் பக்கத்தில் இருக்கிறார்களே, என்ன நினைப்பார்களோ?' என்று எண்ணி மாணவர்கள் கண்ணியமாக நடந்துகொள்ள முயலுவார்கள். வார்த்தைகளை எண்ணிப் பேசுவார்கள். பெண்களும் அவ்விதமே மிகவும் கட்டுப்பாட்டுடன் நடப்பார்கள். கண்ணியத்தையும் கட்டுப்பாட்டையும் மாணவ சமுதாயத்தினரிடையே வளர்க்கவும் பின்னர் அவர்கள் பரந்த நோக்குடன் நல்ல பிரஜைகளாகத் திகழவும் கூட்டுக் கல்வி ஒரு சாதனமாகவே அமையக் கூடும் என்று நினைக்கிறேன்.

சந்திராவும் இங்கே வந்திருந்தாங்களாம். மானேஜர் இங்கே உட்கார்ந்து பைல்களைப் பார்த்து டிராப்ட் எழுதிக்கிட்டிருந்தாராம். முதலாளியும் சந்திராவும் ஏர்கண்டிஷன்ட் அறைக்குள்ளே — அதுதான் முதலாளி அறை — அதுக்குள்ளே போய் 'லெட்டர் டிக்டேட் பண்றேன்'கிற சாக்கிலே ரொம்ப நேரமாக உள்ளே கதவைப் பூட்டிக்கிட்டு — சேச்சே!''

''சங்கர்! இதெல்லாம் யார் சொன்னது?''

''எல்லாத்தையும் நேரடியாகப் பார்த்துக்கிட்டிருந்த மானேஜரே சொல்லியிருக்கார். கம்பெனி வான் டிரைவர், காவல்காரன் எல்லாரும் கூட அதே மாதிரி சொல்றாங்க... நம்ம முதலாளி இப்படிச் செய்திட்டாரேன்னு நான் ஆச்சரியப்படலே. ஆனால் உன் காதலி...''

''நானும் ஆச்சரியப்படல்லே சங்கர்! அழகான பெண்கள் மேலே எனக்கு எப்போதும் நம்பிக்கை இருந்ததில்லே. என்றைக்காவது ஒரு நாள் சந்திரா எனக்குத் துரோகம் செஞ்சிடுவாள்னு நான் சந்தேகப்பட்டுக்கிட்டேயிருந்தேன். அந்த நாள் இவ்வளவு சீக்கிரமா வந்திட்டதேன்னு நான் சந்தோஷப்படறேன்.''

''நல்ல வேளை, பாலு! நீ இதற்கு முன்னே அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டிருந்தால்?''

''இந்தச் சந்தேகத்தினால்தானே நான் கல்யாணத்தைத் தள்ளிப் போட்டுக்கிட்டேயிருந்தேன்.... நான் இப்பவே போய் அவளிடம் நாக்கைப் பிடுங்கிட்டுச் சாகிறாப்பலே நாலு கேள்விகள் கேட்டுட்டு வரேன்...''

* * *

''பாலு! நீங்களா இப்படிப் பேசறீங்க?... யாரோ நமக்கு வேண்டாதவங்க இப்படிக் கதை கட்டி விட்டிருக்காங்க... நீங்க நம்பாதீங்க, பாலு! நம்பாதீங்க!''

''நான் நம்ப மாட்டேன், சந்திரா! உன்னை எப்போதுமே நம்ப மாட்டேன்! மானேஜர், டிரைவர், காவல்காரன் எல்லோரும் சொல்றாங்க. அதையெல்லாம் நம்பாமல் நீ ஒருத்தி சொல்றதை மட்டும் நான் நம்ப வேண்டுமா? அடேயப்பா! உனக்கென்ன? இனிமே எங்களுக்கு முதலாளியாகப்போறே!''


''பாலு! தயவுசெய்து என் பேச்சைக் கேளுங்க... சந்தர்ப்பமும் சூழ்நிலையும் உங்

கூடாதா?

கோ. கிருஷ்ணசுவாமி, (பி.எஸ்ஸி. முதல் ஆண்டு)
புதுக் கல்லூரி, சென்னை.

பேருந்துகளில் பத்துப் பதினைந்து நிமிஷங்கள் பிரயாணம் செய்யவே பெண்களுக்கு எனத் தனியாகச் 'சீட்'டுகள் ஒதுக்குகிறீர்களே - ஏன்? முன்பின் தெரியாத ஆண்களுடன் சில நிமிட நேரம் அருகருகே நெருங்கி உட்காரக்கூட வயதுவந்த பெண்களுக்கு மனம் இடம் தராது. நமது கலாசாரம், பண்பாடு அப்படிப்பட்டது. இரத்தத்திலேயே ஊறிப் போன மரபு. எனவே பெண்கள் கூட்டுக் கல்வியை விரும்ப மாட்டார்கள். அருகருகே ஒரு மகளிர் கல்லூரியும் ஒரு கூட்டுக் கல்வி அளிக்கும் கல்லூரியும் இருந்தால், மகளிர் கல்லூரியில்தான் சேர விரும்புவாள் பெண். ஆண்களிடம் பெண்களுக்கு இயல்பாக உள்ள கூச்சம் நியாயமானதே. ஏதாவது ஏடாகூடமாக நடந்துவிட்டால் என்ன செய்வது? ஆயிரத்தில் ஒன்று அப்படி நேரலாம் என்று நீங்கள் சொல்லக் கூடும். அப்படியே இருந்தாலும் அந்த ஒரு பெண்ணின் எதிர்காலம் என்னவாகும்?

கல்யாணமாகிப் பல வருடங்கள் கணவன் மனைவியாக வாழ்க்கை நடத்திய பிறகும் வேற்று ஆண்களிடம் மனைவி பேசினால் கணவன் மனைவியைச் சந்தேகிக்கிறான்! இதனால் பல பெண்களின் வாழ்க்கை சீரழிந்து போய் விடுவது கண்கூடு. கல்யாணமான பிறகே இந்த நிலை என்றால், ஆண்களுடன் 3, 4 வருடங்கள் சேர்ந்து படித்த பெண் என்றால் அவளை மணக்க ஆண்களுக்கு உள்ளூறத் தயக்கம்தான். இதனைப் பலர் வாய் விட்டுச் சொல்லுவதில்லை. உயிரியல், உடற்கூறு முதலிய பாடங்களைப் பெண்கள் ஆண்களுடன் சேர்ந்து பயிலும்போது பெண்களுக்குக் கூச்சமாகத்தான் இருக்கும்.



மாணவர்கள் பிற பெண்களைத் தங்கள் சகோதரிகளாகப் பாவிக்க மாட்டார்களா என்று கேட்கலாம். அப்படியானால் மகளிர் கல்லூரி, பெண்கள் பள்ளிகளின் அருகில் கூட்டமாக நின்று கொண்டு மாணவர்கள் பலர் வீதியில் செல்லும் மாணவிகளைப் பார்த்துச் சீட்டி அடிப்பதும், சீண்டுவதும், வாய் கூசும் வார்த்தைகளை உதிர்ப்பதுமாக ஏன் இருக்கிறார்கள் என்று கேட்கிறேன்?

என்ன இருந்தாலும் பெண் பெண்தான். இயல்பாகவே வலிமையற்றவர்கள். 20,30 பெண்கள் சேர்ந்து போகும் போதுகூட ஓரிரு ஆண்கள் கலாட்டா செய்தால் பெண்களுக்கு நடுக்கம்தான். 'காகமானது ஒரு கோடி கூடினும் ஒரு கல்லெறிமுன் நிற்குமோ?' - என்று தாயுமானவர் பாடியிருப்பது போல் தன்னைத் தானே காத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு மிகுதியுள்ள பெண்ணினம் தனித்துக் கல்வி பயிலுவதே உசிதம். மற்றவர்கள் ஒதுங்கி நிற்கும் மாணவனைப் பார்த்து 'ரிஷ்யசிருங்கர்' என்றெல்லாம் கேலி செய்கிற நிலைமை உள்ளது இங்கு. பெண்களிடம் ஒரு வசீகரத் தன்மை, கவர்ச்சி இருக்கத்தான் செய்கிறது. அக்கவர்ச்சி ஆண்களிடமிருந்து மாணவப் பருவத்தில் விலகி யிருப்பதுதான் நலம். பஞ்சும் தீயும் நெருங்காமல் இருப்பதுதான் உசிதம் என்பது நமது மூன்னோர்களின் முடிவு. நமது சிநேகங்களை நிலைக்குக் கூட்டுக் கல்வி உதவாதுதான்.

- பேட்டி: பாணன்

மேலட்டை வண்ணப்படம்: வித்யாவ்ரதா

* * *

களைத் தவறாக நினைக்க வைச்சிருக்க.... இதோ பாருங்க, என் முகத்தைப் பார்த்துச் சொல்லுங்க--''

''முகத்தைப் பார்த்துத்தான் சொல்றேன். உன் முகத்தைப் பார்த்தாலே யாருக்கும் உன்னைக் கற்பழிக்கணும்னு வெறி வரும்.''

''சீச்சீ! இந்த அசிங்கப் பேச்சை விடுங்க!''

''பேச்சை மட்டும் என்ன, உன்னையே விட்டுட்டுத்தான் போறேன்.''

''பாலு....பாலு....பாலு!...''

⁂

''சந்திரா! சந்திரா! என்னை மன்னிச்சிடு... உன்னைப் பத்தித் தப்பா நினைச்சிட்டேன். உன் பேச்சை நம்பாமல் தவறு பண்ணிட்டேன். உன்னைக் கைவிட்டுத் துரோகம் பண்ணிட்டேன்.''

''என்ன பாலு, என்ன சொல்றீங்க நீங்க?''

''நம்ம மானேஜர் மவுண்ட் ரோட்டிலே விபத்திலே சிக்கி ஆபத்தான நிலைமையிலே ஆஸ்பத்திரியிலே கிடக்கிறார், தெரியுமா?''

''தெரியும். அங்கே போகத்தான் புறப்பட்டுக்கிட்டிருக்கேன்.''

''இனிமேல் பிழைக்க மாட்டோம்னு தெரிஞ்சோ என்னவோ, அவர் உன்னைப் பத்திச் சொன்னார். நீ களங்கமில்லாதவள் என்றும், உன்மேலே வேண்டுமென்றே தாம் பழி சுமத்திவிட்டதாகவும் சொல்லி, மன்னிப்புக் கேட்டுக்கிட்டார் சந்திரா! அவர் பேச்சை நம்பி நான் உனக்குத் துரோகம் செய்திட்டேன். நல்ல வேளை, சாவதற்கு முன்னாலாவது அவர் நம் காதலைக் காப்பாற்றி விட்டாரே!''

''இல்லை பாலு! முன்னாலேயே அவர் என்னை உங்களிடமிருந்து காப்பாற்றி விட்டார்....! ஒருவேளை, நம் இருவருக்கும் கல்யாணம் நடந்துவிட்டது என்று வைத்துக் கொள்வோம். ஸ்டெனோகிராபர் என்ற முறையில் முதலாளியோடும் மற்றவர்களோடும் இப்படிப்பட்ட சூழ்நிலையில் நான் பழகவேண்டிய நிலைமை பல தடவைகள் ஏற்படும்; அப்போதெல்லாம் உங்களுடைய சந்தேகத்துக்குள்ளாகி நான் வாழ்க்கையை இழக்க வேண்டி வந்திருக்கலாம் அல்லவா?''

''இல்லை, சந்திரா! இப்பொழுது நான் உன்னை முழுதும் நம்புகிறேன், சந்திரா!''

''எப்பொழுது? — என்னுடைய பரிசுத்தத்தைப் பற்றி மானேஜர் நற்சாட்சிப் பத்திரம் கொடுத்த பிறகு என்னை நம்புகிறீர்கள். என் பேச்சை, என் உள்ளத்தை, என் உணர்ச்சிகளை நீங்கள் நம்பவில்லை! ஒரு மூன்றாம் மனிதரின்வாக்குமூலத்தைத்தானே நம்புகிறீர்கள்? இதேபோல் என்மேல் உங்களுக்குச் சந்தேகம் ஏற்படும்போதெல்லாம் நான் ஒரு மூன்றாம் மனிதரிடம் சர்டிபிகேட் வாங்கிக் கொண்டு வர முடியுமா, பாலு?''

''சந்திரா! போனதையே ஏன் திருப்பித் திருப்பிப் பேசுகிறே?''

''பாலு! தன் காதலனே இப்படி ஒரு அபாண்டமான பழி சுமத்திப் பேசுவதை விட ஒரு பெண்ணுக்கு வேறு மரண தண்டனை வேண்டாம். சந்தர்ப்பம், சூழ்நிலை காரணமாக நிஜமாகவே கெட்டுப் போகிற அவமானம் இருக்கிறதே, அதைவிடக் கெட்டுப் போனதாக அபாண்டமான பழிக்குள்ளாகிற அவமானம் பெரிசு பாலு!... நீங்க என் அழகான உடல் மேலே ஆசையும், அது தூய்மையாக இருக்கணும்கிறதிலே அக்கறையும் கொண்டிருக்கிறீர்களே யொழிய என் உள்ளத்தை, உயிரைக் காதலிக்கலே... அப்படி என் உள்ளத்தைக் காதலிக்கிறவரா யிருந்தால் அன்றைக்கு உண்மையாகவே நான் களங்கப்பட்டிருந்தாலும், அதுக்காக நீங்கள் பரிதாபப்பட்டு இரங்கி, எனக்கு ஆறுதல் சொல்லி விருப்பீங்க; சுடு நெருப்பை மேலே அள்ளிக் கொட்டியிருக்க மாட்டீங்க! தன் மனைவி கற்பழிக்கப்பட்டிருப்பாளோன்னு எந்தக் கணவன் சந்தேகப்படுறானோ, அந்தக் கணவனும் அவளைக் கற்பழிக்கிறவன்தான்!... பாலு! அன்றைக்குச் சொன்னீங்களே, ஞாபகம் இருக்கா? என் முகத்தைப் பார்த்தாலே யாருக்கும் கற்பழிக்கும் வெறி ஏற்படும்னு— இதே முகத்தைப் பார்த்து மிஸ்டர் சரவணன் என்ன சொன்னார் தெரியுமா? இந்த முகத்தின் முன்னால் உயர்ந்த எண்ணங்கள் தோன்றுகின்றன என்றார் — இதிலேயே தெரியுமே யார் உயர்ந்த மனிதர், யார் கெட்டமனிதர் என்று! மிஸ்டர் பாலு! நீங்கள் போகலாம். நான் ஆஸ்பத்திரிக்குத்தான் போகிறேன். மானேஜரின் கடைசிக் காரியங்களுக்கு ஏற்பாடு செய்யத்தான் போகிறேன். ஸ்டெனோ சந்திராவாக அல்ல — முதலாளியின் பிரதிநிதியாக.''

''சந்திரா! என்ன சொல்லறே?''

இனிமேல் நான் உங்களுக்கு முதலாளி ஸ்தானத்தில் உள்ளவள்: மிஸஸ் சரவணன்!''

''என்ன! அவரையா கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாய்? அவருடைய ஒழுக்கம், நடத்தை பற்றி உனக்குத் தெரியாதா?''

''தெரியும். உங்களைப் போன்ற சந்தேகப் பிராணிகளைத்தான் திருத்த முடியாது. அவரைப் போன்ற மனிதர்களைச் சுலபமாக ஒரு பெண்ணால் திருத்திவிட முடியும்!''

வட்டமேஜை

எனது சகோதரி முத்துலக்ஷ்மி ஜெனரல் ஆஸ்பத்திரியில் பதினெட்டாம் நம்பர் வார்டில் கடந்த ஒரு மாதமாக வயிற்றில் ஏற்பட்டிருக்கும் புற்றுநோய்க்காக சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறாள். கடந்த 26—9—72ல் மாலை சுமார் நான்கு மணிக்கு அவளது படுக்கைக்குப் பக்கத்தில் வைத்திருந்த ஒரு கைப் பையை யாரோ திருடிக் கொண்டு போய்விட்டார்கள். ஊசி போடப்பட்டு மயக்க நிலையில் இருந்த சமயம் திருட்டு நடந்திருக்கிறது. சாவதற்கு நாட்களை எண்ணிக் கொண்டிருக்கும் — கடுமையாக நோய் வாய்ப்பட்டிருக்கும் ஒரு நோயாளியின் பொருட்கள் பட்டப் பகலில் களவாடப்படுவதென்றால் மற்ற நிர்வாகங்கள் அங்கு எப்படி இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

சென்னை — 30
29—9—72 கே. நாகராஜன்

மேற்கு வங்காள அரசு அங்குள்ள தனியார் அரசுத் துறை நிறுவனங்களுக்கு, ''உங்கள் நிறுவனங்களில் ஏற்படும் காலி இடங்களை நிரப்புவதற்கு வங்காளத்தில் பிறந்தவர்களை மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டும். 'வெளியார்'களை நியமிக்கக் கூடாது'' என்று ஆணையிட்டுள்ளது.

மைசூர் மாநில அரசும் அதே போல, '' ஐந்நூறு ரூபாய் வரை ஊதியமுள்ள வேலைகள் யாவும் மைசூர்க்காரர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட வேண்டும் என்று அறிவித்துள்ளது.

இந்திய அரசின் உரக் கார்ப்பொரேஷனின் பரௌனி பிரிவு வேலைக்கு செப்டம்பர் இரண்டாம் வாரம் பேட்டி நடப்பதா யிருந்தது. ஆனால், அங்குள்ள மக்கள் பேட்டி நடக்காதவாறு செய்துவிட்டனர். காரணம்? 'வெளியார்'கள் பலர் பேட்டிக்கு 'அழைக்கப்பட்டிருந்தனராம்.

கேரளாவில், சில வாரங்களுக்கு முன்னால் உள்ளூர் மக்கள் பலர் கூடி அரசுத் துறை நிறுவனம் ஒன்றின்முன், ''கேரள மண்ணின் மக்களையே தேர்ந்தெடு'' என்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

என் நண்பர் ஒருவர் தமிழ் நாட்டில் ஒரு கல்லூரியில் விரிவுரையாளராக இரண்டாண்டுகள் வேலை பார்த்து வந்தார். கடந்த ஜூலை மாதம் கல்லூரி நிர்வாகத்தினர் அவரைக் கூப்பிட்டு, ''எங்கள் 'சமூக'த்தைச் சேர்ந்தவர் ஒருவர் விரிவுரையாளர் வேலைக்கு விண்ணப்பித்துள்ளார். எங்கள் 'ஜாதி' விண்ணப்பதாரரைக் கண்டிப்பாக எடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம். ஆகவே உங்களை உடனடியாக நீக்க வேண்டியுள்ளது'' என்று ஒளிவு மறைவில்லாது கூறிவிட்டனர்.

'நாம் அனைவரும் இந்தியர்' என்று மார் தட்டிக் கொண்டு, வேற்றுமையுள் ஒற்றுமை என்றெல்லாம் ஆர்ப்பாட்டம் செய்கிறோம்! ஆனால் பிற மாநிலத்தவருக்கு வேலை கொடுக்கக் கூடாது என்று வேறுபடுகிறோம். இது தான் அந்த ஒற்றுமையா? நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்?

திருநெல்வேலி — 1
28—9—72 நெல்லை நீல சுந்தரம்


என்னைப்
பாருங்களேன்!
நான் அழகாக
இல்லையா?
அப்பா அம்மா
டேடோன்
அனைவருக்கும்
நன்றி
அவனுக்குத்தான் என்ன குஷி! உற்சாகமாக விளையாடுகிறான். ஆனந்தத்தில் மூழ்கி யிருக்கிறான். டேடோன், அவன் இஷ்டம்போல ஓடியாட வசதியாக இருக்கிறது.
உயர்ந்த ரகப் பருத்தியைக்கொண்டு மென்மை யான பல வண்ணங்களில் தயாரிக்கப்பட்ட டேடோன், இளையோர் முதல் முதியோர் வரை அனைவருக்கும் உகந்தது..
லக்ஷ்மியின்
டேடோன்®
சிறந்த பாப்ளின் ஷர்ட்டிங்
THE
LAKSHMI
MILLS
COMPANY LIMITED
COIMBATORE
SYMBOL OF
OUTSTANDING FABRICS
modern/LM/4/TM



ஜாங்கோ ஜக்கு
கதை:
குட்டி கிருஷ்ணன்
சித்திரம்: ராஜு..
2
கப்பண்றை ஃபோனில் பிச்சுவாக் கத்தி பிச்சுமணியிடம் பேசியதை ஒட்டுக் கேட்டு விட்டாள், அப்பண்றுவின் மகள் பொன் மொழி.
அப்பா! கத்தியின் முனையும் புத்திமானின் அறிவும் கூர்மையானவை. ஏன் தெரியுமா?
ஏன்?
கத்தி முனை மழுங்கினால் அது கத்தியுமில்லை; புத்திமானின் அறிவு மழுங்கினால் அவன் புத்திமானுமில்லை! அதனால் தான்.
எந்த வேளையில் உனக்குப் பொன் மொழின்னு பேர் வைச்சேனோ; ஒரு பித்தளை மொழி கூட உதிர்க்க மாட்டேங்கறே!
பொன் மொழி தனித்து விடப் பட்ட போது...
ஜக்கு என்பவனுக்கு ஆபத்து... அப்பாத் தனையும்... ஏதோ ஒரு சர்க்கார் ஆபீஸில் வேலை பார்ப்பதாக ஃபோனில் சொல்லிக் கிட்டிருந்தாரே...? ஆ! கரெக்ட்!...
வைக்கோலிடை தொலைந்த ஊசியும் டெலிஃபோன் டைரக்டரியில் இடம் பெற்ற சர்க்கார் காரியாலயமும் ஒன்றுதான். இரண்டையும் கண்டு பிடிக்க முடியாது! சே!
அப்போது ஃபோன் மணி ஒலிக்கவே...
ஹலோ! நான் ஜக்கு பேசறேன். அப்பண்றை அல்லது கப்பண்றை வேணும். பத்து ரூபாய்க்குப்பாதாம் அல்வா சாப்பிட்டேன். தாங்க்ஸ் சொல்லணும்!


ஜக்கு! நான் பொன் மொழி பேசறேன்!
மேடையேறிப் பேசறவங்க உதிர்க்கிற பொன் மொழிகளையே சகிக்க முடியலே; பொன் மொழியே பேச ஆரம்பிச்சுட்டா எப்படி? உலகம் தாங்காது!
ஜக்கு! நான் சொல்றதைக் கேளு. உனக்கு ஆபத்து!
வாடகை குறைவுன்னு பத்து வருஷமா பேயப்பா தோட்டத் தெருவில் பிசாசு குடியிருக்கிற பத்தாம் நம்பர் வீட்டில் தான் வசிக்கிறேன்...
... ஒரு ஆபத்தையும் கண்டதில்லே. இப்போ புதுசா என்ன வந்துடப் போகுது?
மனிதரிடமும் பேய்க் குணமுண்டு; பேய்களிடமும் மனிதத் தன்மை உண்டு... ஹலோ?... ஹலோ?
அடப் பாவி! ஆபத்து என்னன்னு தெரிஞ்சுக்காமலேயே வைச்சுட்டியே.. நல்ல வேளை! விலாசம் சொன்னியே! நேரிலேயே வரேன்!
அலங்காரம் பண்ணிக் கொண்டு பொன்மொழி கிளம்புவதற்கு முன்பாகவே பிச்சுவாக் கத்தி பிச்சுமணி ஜக்குவின் காரியாலயம் சென்று அவன் வீட்டு விலாசத்தைத் தெரிந்து கொண்டு வந்து சேர்ந்து விட்டான்.
அம்மா! ஆபீஸில் நாலு மணி நேரம் தான் தூங்க முடிஞ்சுது இன்னிக்கு. ரொம்ப களைப்பா இருக்கு. சீக்கிரம் சாப்பிட்டு விட்டுப் படுக்கணும்!
எல்லாம் தயார். வந்து கொட்டிக்கோ!
அப்போது உள்ளே நுழைந்தான் பிச்சுவாக் கத்தி பிச்சுமணி.
ஆச்! ஒரே சதக்!
ஐயோ! என் உயிரான உன் கத்தியை வாங்கிடாதே! என் புள்ளைக்கு ஒரே அம்மா நான்!
?

தொடரும்

பார்க்-டேவிஸ்

மூவகை ஆற்றலுள்ள நிகோ சோப்

மற்றெந்த சோப்பையும் விட உங்கள் சருமத்திற்கு மிகுந்த பாதுகாப்பளிக்கிறது

1 நிகோ சருமக் கிருமிகளைக் கொல்லுகிறது

2 நிகோ உடல் துர்நாற்றத்தைப் போக்குகிறது

3 நிகோ உடலைத் துப்புரவாக்கிப் பாதுகாப்பளிக்கிறது

நீங்கள் ஆரோக்கியமான சருமத்தைப் பெற, நாள்தோறும் நிகோ சோப் தேய்த்துக் குளியுங்கள். நிகோவின் நச்சுநாச நுரைவளம் சரும நோய்க் கிருமிகளைக் கொன்று, உங்கள் சருமத்திற்கு ஆரோக்கியமளிக்கிறது. நிகோவிலுள்ள மருந்துப் பொருள்கள் வியர்வையினால் ஏற்படும் துர் நாற்றத்தைப் போக்குகின்றன. நிகோ சின்னஞ்சிறிய சருமத் தொற்றுகளையும் எதிர்த்துப் போராடி, சருமத்துக்கு மென்மையளிக்கிறது. அதோடு மினுமினுப்பும் புதுமையும் தருகிறது. இது மட்டுமல்ல; முகப் பருக்கள் மற்றும் வேர்க்குருவிலிருந்தும் உங்கள் சருமத்துக்குப் பாதுகாப்பு தருகிறது நிகோ. ஷாம்புவாகக்கூட இதைப் பயன்படுத்தலாம். இதனால் பொடுகு விழாமல் தடுக்கிறது நிகோ. எனவே, இன்று முதலே, நிகோ சோப் உபயோகிக்கத் தொடங்குங்கள்.

நிகோ பழக்கத்தைக் கடைப்பிடிப்பீர்.
அது உங்கள் சருமத்திற்கு அவசியம்.

TRIPLE ACTION

NEKO®

The Original Antiseptic Soap



® Regd. Trade Mark. Regd. Users—Parke Davis (India) Ltd., Bombay-72 AS.

JAISONS 293



இளைஞர் சமுதாயம்

26. பொங்கி வரும் பெருவெள்ளம்

"'இளைஞர்களுக்கு என்று நாம் நம்முடைய வருங்காலத்தை உருவாக்கித் தர முடியாது. ஆனால் நம் இளைஞர்களை வருங்காலத்துக்கு ஏற்றவாறு உருவாக்கி விடலாம்' என்று முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் கூறியிருக்கிறார். அதைத்தான் எங்கள் இளைஞர் சங்கம் செய்ய முற்பட்டிருக்கிறது.''

இப்படிச் சொன்னவர், நாகர்கோவில் ஜூனியர் சேம்பரின் தலைவர்தான். நான் அங்கு சென்றபோது நல்ல மழை. சென்னையில் மழையைக் கண்டு வெகு காலமாகிவிட்டதால் எனக்கு உற்சாகம் தாங்கவில்லை. மழையில் நனைந்து கொண்டே ஜூனியர் சேம்பருக்குச் சென்றேன்.

அங்கத்தினர்கள் அனைவரும் எனக்கு நல்ல முறையில் வரவேற்பு அளித்து மேற்படி இளைஞர் சங்கத்தின் நடவடிக்கைகளை விளக்கிக் கூறினார்கள்.

''இன்றைய இளைஞர்கள் துடிதுடிப்பு மிக்கவர்களாயிருக்கிறார்கள். எதையும் ஆராய்ந்து துருவித் தெரிந்து கொள்ளும் ஆவலுடன் இருக்கிறார்கள். அவர்களுடைய ஆர்வத்தையும், உற்சாகத்தையும் நாம் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பொங்கி வரும் பெருவெள்ளத்தைக் கட்டுப்படுத்த அணை கட்டித் தேக்கிப் பசுமைப் புரட்சிக்குப் பயன்படுத்துகிறோமே அது மாதிரிதான். பாரதத்தின் வருங்காலமே அவர்களிடம்தான் இருக்கிறது. பெரியவர்கள் செய்ய வேண்டிய புத்திசாலித்தனமான காரியம், நாட்டின் வருங்காலத் தலைமைப் பொறுப்பைப் படித்த வாலிபர்களிடம் ஒப்படைத்துவிட வேண்டியதுதான்!'' என்றார் செயலாளர்.

''நீங்கள் சொல்வது ரொம்ப சரி. அந்தப் பொறுப்பை இளைஞர்கள் ஏற்க முன்வர வேண்டுமே! அதற்கு ஓரளவு அவர்களைத் தயார்ப்படுத்த வேண்டும் அல்லவா?'' என்று ஒரு கேள்வியைப் போட்டேன்.

''ஆமாம். அந்தப் பொறுப்பைத்தான் ஜூனியர் சேம்பர் ஏற்றுக் கொண்டிருக்கிறதே! கல்லூரியில் படிக்கும் பட்டதாரி மாணவர்களையும், படிப்பு முடிந்து விட்ட பட்டதாரிகளையும் ஒன்றுசேர்த்துக் கருத்தரங்கு, விவாதம், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி ஆகியவற்றை உபயோகமான பல விஷயங்களைக் குறித்து நடத்துகிறோம். தலைமைப் பதவிக்குப் போட்டியிடும் வகையிலும் பயிற்சி அளிக்கிறோம். பார்லிமெண்டரி முறைகளைப் பற்றிப் பயிற்சி அளிக்கிறோம். கம்பெனி வணிகத் துறைகளில் நிர்வாகப் பொறுப்பு ஏற்கவும் பயிற்சி அளிக்கிறோம்.''

''இவை தவிர உங்கள் சங்கம் இன்னும் என்ன உருப்படியான சேவை செய்கிறது?''





(மேலே) குலசேகரப்பட்டினத்தில் அமெரிக்க டாக்டர் போயிங் (Dr.Bowing) பள்ளி மாணவர்களுக்கு மருத்துவ சோதனை நடத்துகிறார்.

(நடு) 1972 புதிய அங்கத்தினர்களின் பதவியேற்பு விழாவிலே கலந்து கொண்டவர்கள்: 1. செனட்டர் அன்வர் தாவூத், 2. டாக்டர் என். எ. நூர் முகமது. 3. பாபு, முன்னாள் தலைவர். 4. வாழ்த்துக் கூறவந்த லயன்ஸ் கிளப் தலைவர் கே. பி. நாராயணன் நாயர்.

(கீழே) வைஸ் அட்மிரல் என். கிருஷ்ணன் நாகர்கோவில் ஜூனியர் சேம்பர் வரவேற்பின்போது தலைவர் ஜே. சி. எச். சிவசுப்பிரமணியம் மற்றும் அங்கத்தினர்களுடன் அளவளாவுகிறார்.



"புடவை சாயம் போகுமா : போகாதா என்று பார்த்துத்தான் வாங்குவேன்!"

"காற்றும் நீரும், சுற்றுப்புறச் சூழல்களும் பலவிதத் தொழிற்சாலைக் கழிவுப் பொருள்களினாலும், புகையினாலும், வாயுக்களினாலும் அசுத்தம் அடைந்து மக்களுக்குப் பெரிதும் சுகாதாரக் கேட்டை விளைவிக்கின்றன. இதுபற்றி மக்களுக்கு அறிவிக்கச் சிறு வெளியீடுகளைத் தயாரித்து விநியோகிக்கிறோம். சுகாதார முறைகளைப் போதிக்கிறோம். துரிதமான வண்டிப் போக்குவரத்து அதிகரிப்பினால் ஏற்படும் ரஸ்தா விபத்துக்களைத் தவிர்க்கச் சிறு வெளியீடுகளைத் தயாரிக்கிறோம். குழந்தைகளுக்குச் சித்திரப் போட்டி நடத்திப் பரிசு அளித்து உற்சாகப்படுத்துகிறோம்."

"இன்னும் ஏதாவது..." என்று நான் கேட்க ஆரம்பித்ததும் செயலாளர் முந்திக்கொண்டு "...குறிப்பிடும்படியான சேவையைத்தானே கேட்கிறீர்கள்? சொல்கிறோம். இவ்வூருக்கு அருகில் உள்ள குலசேகரப்பட்டினத்தில் ஒரு பள்ளிக்கூடத்தைத் தேர்ந்தெடுத்து அப்பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு இலவசமாக வைத்தியப் பரிசோதனை (Thorough Medical checkup) செய்து வருகிறோம். அதற்காக விசேஷப் பயிற்சி பெற்ற டாக்டர்கள் அடங்கிய ஒரு குழுவை அழைத்துச் சென்று மாணவர்களுக்கு உடனுக்குடன் இலவசச் சிகிச்சையும் செய்து வருகிறோம். இத்துறையில் இளம் டாக்டர்கள் காட்டி வரும் சிரத்தையை நாங்கள் மறக்க முடியாது. இம்முயற்சி ஆரம்ப நிலையில்தான் உள்ளது. இதைப் பெரிய அளவுக்கு விஸ்தரிக்கும் திட்டம் ஒன்றைத் தீட்டி வருகிறோம்."


"அப்புறம்...?"

"வாக்காளர்கள் சரியாக இருந்தால்தான் நல்ல வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க முடியும். பதவிக்கு வரும் வேட்பாளர்களைக் குறை சொல்வதில் பயனில்லை. வெள்ளம் வருவதற்கு முன்பு அணை போட வேண்டும். ஆகவே, வாக்காளர்களைத் தயார் செய்யும் முறையில், அவர்களுக்கு அறிவுறுத்தும் வகையில் சுவரொட்டிகள் தயார் செய்து நாகர்கோவில்முழுவதும் ஒட்டியிருக்கிறோம்."

"மேற்படி சுவரொட்டிகளின் வாசகங்கள் சிலவற்றை என்னவென்று கூறுங்களேன்!"

"'வாக்குரிமையை விற்காதீர்கள்', 'வாக்களிப்பது உங்கள் தனி உரிமை', 'நிச்சயமாக வாக்களியுங்கள். நியாயமாக வாக்களியுங்கள்' இவைகள் எல்லாருடைய பாராட்டும் முழுமையும் நல்ல வரவேற்பைப் பெற்றன. பல பிரமுகர்கள் எங்கள் இந்தப் புதுமையான சேவையை 'மிகவும் பயனுள்ள பணி' என்று மனமுவந்து பாராட்டினார்கள். ஆனால் இந்தப் பாராட்டுக்களெல்லாம் ஜூனியர் சேம்பரின் இளைஞர் சமுதாயத்தையே சேரும். சிறிதும் அயராது உற்சாகத்துடன் சுவரொட்டிகளை எடுத்துச் சென்று ஊரெங்கும் ஒட்டினவர்கள் அவர்கள்தானே! இதே மாதிரி மதுவிலக்கு ரத்துசட்டத்தை எதிர்த்து, மதுவின் தீமைகளை விளக்கிப் போஸ்டர்கள் தயாரித்து ஒட்டச் செய்தோம். இன்னும், ஏழை மாணவர்களுக்குப் பள்ளிச் சம்பளம் கட்டுதல், முதன்மையாகத் தேறும் உயர்நிலைப்பள்ளி இறுதியாண்டு மாணவர்களுக்குப் பரிசுகள் அளித்து ஊக்குவித்தல் போன்றவைகளையும் செய்து வருகிறோம். எங்கள் சங்கத்தில் பதினெட்டு வயதிலிருந்து நாற்பது வயதுவரையில் உள்ளவர்கள்தான் அங்கத்தினர்களாகப் பணி புரிய முடியும். இது ஒன்றே போதுமே, நாங்கள் இளைஞர் சமுதாயத்துக்குக் கொடுக்கும் மதிப்பைக் குறிக்க!" செயலாளரே இப்படிப் பாராட்டிக்கொண்டுவிட்ட பிறகு நான் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது?

"கடைசியாக ஒன்று சொல்ல வேண்டும். எங்கள் சங்க நடவடிக்கைகளைக் குறிக்க Trinity என்ற பெயரில் ஒரு மாதப் பத்திரிகை ஆங்கிலத்தில் நடத்துகிறோம். (தாணு - சிவன், மால் - விஷ்ணு, அயன் - பிரம்மா. இந்த மும்மூர்த்திகளும் ஒருங்கே, ஒருருவமாகக் கோவில்கொண்டிருக்கும் இவ்வூர்த் தலம் சுசீந்திரம். நாகர்கோவில் அருகே ஒரு சிற்றூர். 'மும்மூர்த்தி' என்று பொருள்படும் Trinity என்ற பெயரை உட்கருத்துடன் வைத்திருக்கிறார்கள்) அதன் ஆசிரியர் பொறுப்பை ஏற்றிருக்கும் இளைஞர் திரு எஸ். பத்மநாபன் திருநெல்வேலியில் ஸ்டேட் பாங்க் அதிகாரியாயிருக்கிறார். பல தமிழ், ஆங்கில நூல்கள் தமிழ்நாட்டில் உள்ள மூர்த்தி, தலம், தீர்த்த மகிமைகள் பற்றி விரிவாகப் பல ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் எழுதியுள்ளார்; பத்திரிகைகளுடன் தொடர்பு கொண்டுள்ள சிறந்த எழுத்தாளர். எங்கள் சங்கம் ஆரம்பித்து இன்னும் இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகவில்லை. அனைத்துலகத் தொடர்பு கொண்டது எங்கள் சங்கம். இன்றைய படித்த வாலிபர்களுக்குள்ள பல்வேறு பிரச்சினைகளிலும் மிகுந்த கவனத்துடன் அக்கறை காட்டிச் சிக்கல்களைக் களையப் பல விதத்திலும் முயற்சி எடுத்து வருகிறோம். எல்லாத் துறைகளிலும் இளைஞர்களின் இன்றியமையாத தேவைகளைக் கண்டறிந்து அவற்றைச் சுமுகமாகவும் நல்ல முறையிலும் தீர்த்து வைக்க முயன்று வருகிறோம். எங்கள் சங்கத்தின் முக்கிய நோக்கம் அதுதான்" என்று செயலாளர் கூறி முடித்ததும் நான் மன நிறைவோடு விடைபெற்றுக் கொண்டேன். - ஸோமாஸ்



க்ரிஸ்டல் புன்னகையின் பிரதிபலிப்பு

க்ரிஸ்டல்-க்ளீன் பற்கள்-
க்ரிஸ்டல்-க்ளீன் மூச்சு

க்ரிஸ்டல் குறுநகையே குதூகல வாழ்வின் பிரதிபலிப்பு. காரணம், க்ரிஸ்டல் பற்பசையில் உள்ளடங்கிய மகோன்னதப் பொருள்கள் பற்சிதைவைத் தடுப்பவை— வாயை நாள்முழுவதும் துப்புரவாகப் புதுமலர்ச்சியோடு வைத்திருப்பவை.

க்ரிஸ்டல்
டூத் பேஸ்ட்




SLS மற்றும் DCP அடங்கியது.

2 சைஸ்களில் கிடைக்கிறது.

மகோன்னத நுரை, மகோன்னத சுவைநயம். அலெம்பிக் ஹோம்ப்ரோ தயாரிப்பு.

everest/361n/ACW-TM



GOVAN/OCL/7113



வசந்த மாளிகை

உலகத்து அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹால், இறந்து போன தன் அன்பு மனைவிக்காக ஷாஜஹானால் உருவாக்கப்பட்டது; ஆனால், வசந்த மாளிகை! உயிருடனிருக்கும் தன் காதலிக்கு அன்பளிப்பாக, அன்புச் சின்னமாக ஆனந்தினால் உருவாக்கப்பட்டது.

அந்தக் காதல் பறவைகளின் காதல் கீதம் ஜமீன் அரண்மனைக்கு எட்டியது. சதி உருவாகியது; அந்தஸ்து என்னும் வேற்றுமைப் பேய் இருவரையும் பிரித்தது.

நாட்டுக்குத் தேவையில்லாத ஜமீன்தார் திரைப் படத்துக்குத் தேவைப்படுகிறார். ஆடம்பரமான அரண்மனை வாழ்வையும், ஆடை ஆபரண அலங்காரங்களையும், மாட மாளிகைகளையும் கூட கோபுரங்களையும் ஒரு சாமானியனுடைய வாழ்வில் எப்படிக் காட்ட முடியும்? அநேகமாகத் திரைப்பட ஜமீந்தார்களுடைய குடும்பத்தில் இரண்டு சகோதரர்கள் வருவார்கள்; ஜமீன்தார் உயிருடன் இருக்க மாட்டார்; ஜமீன்தாரிணி இருப்பாள்; குடி, கூத்துகள் அமர்க்களப்படும்.

விஜயா அண்டு சுரேஷ் கம்பைன்ஸாரின் தயாரிப்பான 'வசந்த மாளிகை'யும் தந்தையை இழந்த ஜமீன் சகோதரர்களின் கதைதான். மூத்தவன் முரடன்; இளையவன் 'பெருங்குடி மகன்'! — ஆனால் நல்ல இதயம் கொண்டவன்.

ஆணவங்கொண்ட மூத்த ஜமீன்தாராக வருபவர் பாலாஜி; குடிமக்களைச் சவுக்கால் அடித்துக் கொடுமைப் படுத்தவும், மனைவியின் ஒரு பார்வையில் பெட்டிப் பாம்பாக அடங்கவும் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எப்படி நடிக்க வேண்டுமோ, அப்படி நடிக்கிறார்.

இளைய ஜமீன்தார் ஆனந்தின் பாகத்தை ஏற்றிருப்பவர் சிவாஜி கணேசன்; மது, மங்கையர் மோகத்தில் மதிமயங்கிக் கும்மாளம் அடித்துக் கொண்டிருக்கும்போதே ஒரு பெண்ணின் அபயக் குரலைக் கேட்டுத் தள்ளாடியபடி நடந்து அப்பெண்ணைக் கொடியவனின் கோரப் பிடியிலிருந்து காப்பாற்றும் காட்சியில் மது மயக்கத்திலும், மனித இதயத்தின் நல்லியல்பைக் காட்டி ஒரு சபாஷ் பெறுகிறார்.

இடைவேளை வரையில் சீராகப் போய்க் கொண்டிருந்த திரைக் கதை இடைவேளைக்குப் பிறகு, என்ஜின் பழுதடைந்த ஆகாய விமானத்தைப் போல் பேராபத்துக்கு உள்ளாகிறது. விமானப் பயணம் செய்து கொண்டிருக்கும் ரசிகர்களாகிய நமக்கு சிவாஜியின் உருக்கமான நடிப்பு பிராணவாயுவாகப் பயன்படுகிறது; நம்மைக் காப்பாற்றுகிறது. சிவாஜி இல்லையென்றால் வசந்த மாளிகை இல்லை; நாமும் தியேட்டரில் இல்லை!

ஏராளப் பொருட் செலவில் காட்சி ஜோடனைகளைத் தயாரித்திருக்கிறார்கள். ஆனந்த் லதாவுக்குத் தன் காதலி யார் என்பதைக் காட்டும் கண்ணாடி மாளிகை அதற்கு எடுத்துக் காட்டு.

வாணிஸ்ரீதான் கதாநாயகி லதா. அந்தப் பெயருக்கேற்ற உடல் அமைப்பும், பாத்திரப் படைப்புக்கேற்ற நல்ல நடிப்பும் வசந்த மாளிகைக்கு மெருகேற்றுகின்றன.

தன்னைக் குடிக்கக் கூடாது என்று தடுத்த லதாவின் மீது மதுப் புட்டியை வீசிப் படுகாயப் படுத்தி விடுகிறான் ஆனந்த். மண்டை உடைந்து குருதி கொட்டும் வேளையில் மயக்க முற்று விழாமல் வீர வாசகம் பேசும் லதா— அவன் காயத்தைக் கண்டு பதறாமல், அவனுக்குச் சிறிதும் சளைக்காமல் வீர சபதம் செய்யும் ஆனந்த் — லதாவின் மண்டை உடையும் என்பதை முன்னதாகவே அறிந்து அந்தக் காயத்துக்குக் கட்டுப் போடுவதற்குத் தயாராக அவன் பாக்கெட்டில் வைத்திருக்கும் துண்டு- ஆகியவற்றையெல்லாம் திரைப்படத் தமாஷோடு சேர்த்துவிட வேண்டியதுதான்! இந்த இயற்கைத் தமாஷ்கள் போதாத குறைக்கு நாகேஷும், வி. கே. ராமசாமியும், ரமாப்பிரபாவோடு அடிக்கும் கூத்துகள் நிறைய இருக்கின்றன. அவற்றுள் சில ரஸமாயிருந்தாலும், மற்றவை விரஸமாயிருக்கின்றன.

கிராமத்தில், ஆனந்தையும் லதாவையும் வரவேற்று மக்கள் அடிக்கும் ஆனந்தக் கூத்துக்களை ரஸிக்க முடியவில்லை; கையையும் காலையும் தூக்கி அவர்கள் ஆடும் ஆட்டம் சகிக்கக் கூடியதாயில்லை.

படத்தில் ஏழு பாடல்கள் இருக்கின்றன. ''இரண்டு மனம் வேண்டும் — இறைவனிடம் கேட்பேன்'', ''கலைமகள் கைப் பொருளே'' ஆகிய பாடல்கள் மனத்தில் பதிகின்றன. மற்றப் பாடல்கள் ஒரே அறுவை! இந்த வண்ணப் படத்தில் ஒளிப் பதிவு 'ஏ ஒன்'!

ட்ராஜெடியை ஒரு சஸ்பென்ஸாக வைத்து எப்பொழுதோ முடித்திருக்க வேண்டிய கதையை முடிய விடாமல் மூச்சுத் திணறத் திணற இழுத்தடித்திருக்க வேண்டாம். விஷம் குடித்த கதாநாயகனை அவனது இறுதிக் கட்டத்தில் 'எப்படியோ' காப்பாற்ற முடிந்தது டாக்டருக்கு! ஆனால் திரைக் கதையை யாராலும் காப்பாற்ற முடியவில்லையே!

—காந்தன்

சத்திய வெள்ளம்

நா. பார்த்தசாரதி

பதினைந்தாவது அத்தியாயம்

வெளியே கதவு தட்டப்பட்டதும் சற்குணம் பதறிப் போனார். அவர் கண்களில் பயமும் பதற்றமும் தெரிந்தன. ஆனால் பிச்சைமுத்து பதறவில்லை. மோட்டார் ரூமிலிருந்து கிணற்றுக்குள் குழாய் போவதற்காக ஒரு ஜன்னல் அளவுக்குத் துவாரம் இருந்தது. கதிரேசனுக்குத் தான் செய்யப் போவதைக் குறிப்புக்கள் மூலமே புலப்படுத்திவிட்டு அந்தத் துவாரத்தின் மூலம் உடலை வளைத்து வெளியேறிக் குழாயைப் பிடித்துக் கொண்டு ஓசைப்படாமல் கிணற்றுக்குள் கீழ் நோக்கி இறங்கினார் பிச்சைமுத்து. அவரைப் பின் தொடர்ந்து கதிரேசனும் அப்படியே செய்தான். ஓசை கேட்கும்படி தண்ணீரில் குதித்தும் விடாமல், மிக மிக மேற்பக்கமே தங்கியும் இருக்காமல் நடு ஆழம்வரை குழாயைப் பிடித்துக் கொண்டு இறங்கிச் சென்று திரிசங்கு நிலையில் அப்படியே தொங்கிக்கொண்டிருந்தார்கள் அவர்கள். சற்குணம் எவ்வளவுதான் பலவீனமான மனம் உடையவராயிருந்தாலும் தங்கள் இருவரையும் காட்டிக் கொடுக்கும் மோசமான காரியத்தைச் செய்யத் துணிந்து விடமாட்டார் என்ற நம்பிக்கை பிச்சைமுத்துவுக்கு இருந்தது. அவரும் கதிரேசனும் தங்கள் உடம்புகள் ஒல்லியாயிருந்ததற்காக அன்று மகிழ்ச்சியடைந்தது போல் அதற்கு முன்பு என்றுமே மகிழ்ந்ததில்லை. அறையிலிருந்து கிணற்றுக்குள் குழாய் போவதற்காக விடப்பட்டிருந்த சதுரத் துவாரம் கொள்ளுமளவு ஒல்லியாயிராவிட்டால் அன்று அந்தக் கணத்தில் அவர்கள் தப்பியிருக்கவே முடியாது. பஞ்சாயத்துத் தலைவரின் ஆட்கள் ஏதோ கேட்டதும், கத்தியதும், சற்குணம் பதில் கூறியதும் குழாயைப் பற்றித் தொங்கிக் கொண்டிருந்த பிச்சைமுத்துவுக்கும், கதிரேசனுக்கும் மங்கலாகக் கேட்டன. வந்து கதவைத் தட்டியவர்கள் அதிகமாகச் சந்தேகப்பட்டுக் கிணற்றுப் பக்கம் எல்லாம் புகுந்து தேடிப் பார்த்துக்கொண்டிருக்கவில்லை. சற்குணம் சொன்ன பதிலிலேயே திருப்தியடைந்து நம்பிக்கையோடு அவர்கள் திரும்பிச் சென்றுவிட்டார்கள் என்பது உறுதியாகத் தெரிந்தபின் மீண்டும் குழாய் வழியே மேலே ஏறிக் கிணற்றின் மேற் பகுதி விளிம்புச் சுவரில் தாவித் தொற்றி மீண்டார்கள், பிச்சைமுத்துவும் கதிரேசனும். ''மறுபடியும் அறைக்குப் போய்ச் சற்குணத்திடம் பேச்சுக் கொடுத்துப் பார்க்கலாமா?'' என்று கதிரேசன் கேட்டபோது பிச்சைமுத்து அதைச் செய்ய வேண்டாமென்று மறுத்துவிட்டார். ''சந்தர்ப்பம் சரியில்லை. ஆட்கள் சந்தேகப்பட்டுச் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது நாம் தெரிந்து கொண்டதைவிட அதிகமாக எதையும் மிஸ்டர் சற்குணத்தினிடம் இனி நாம் தெரிந்து கொண்டுவிட முடியாது. முதலில் நாம் இங்கிருந்து வெளியேறித் தப்பியாக வேண்டும். இல்லாவிட்டால் ஆபத்து'' என்றார் பிச்சைமுத்து. அந்த வேளையில் உள்ளூர்க்காரரும் அநுபவசாலியுமாகிய அவர் பேச்சைக் கேட்டு அதன்படி நடப்பதுதான் நல்லதென்று கதிரேசனுக்கும் தோன்றியது. அவர்கள் இருவரும் வாழைத் தோட்டத்திலிருந்து காட்டு வழியாகச் சுற்றி நடந்து மறுபடியும் சோளக் கொல்லைக்கு வந்து சைக்கிள்களை எடுத்துக் கொண்டு திரும்பவும் ஆலமரத்தடிக்கு வந்து சேர்ந்தபின்பே நிம்மதியாக மூச்சு விட்டார்கள். அப்போது ஏறக்குறைய இரவு ஒரு மணிக்கு மேலாகியிருந்தது. இன்னும் சிறிது நேரத்தில் 'டூரிங்' தியேட்டரில் சினிமா விட்டுவிடுவார்கள். ஆதலால் அந்தக் கூட்டத்துக்கு முந்தியே ஊருக்குள் தனித்தனியே சென்றுவிட எண்ணினார்கள் அவர்கள்.

டிரில் மாஸ்டர் பிச்சைமுத்து கூறினார் : ''மிஸ்டர் கதிரேசன்! இனிமேல் நீங்களும் உங்களைச் சேர்ந்த மாணவர்களும் தொடர்ந்து இந்த ஊரில் தங்கிப் புதிதாக எதையும் தெரிந்து கொள்ள வழி இல்லை. உங்களையெல்லாம் எப்படி எதில் மாட்டி வைக்கலாம் என்று இங்குள்ள பஞ்சாயத்துத் தலைவரும், போலீஸும் சதி செய்யக் காத்திருக்கிறார்கள். மல்லிகைப் பந்தலுக்குத் திரும்பச் சென்று அங்கே உங்கள் போராட்டத்தை வலுப்படுத்துங்கள். நீங்கள் விரும்பினால் காலை மூன்று மணிக்கு இங்கிருந்து புறப்படும் லாரி ஒன்றில் நம்பிக்கையாக உங்களை ஏற்றி அனுப்புகிறேன்.''

'' ஒரு லாரியில் நாங்கள் அத்தனை பேரும் போக முடியாதே, சார்?''

''மல்லிகைப் பந்தலிலிருந்து கறிகாய் ஏற்றி வந்த லாரிதான் இங்கிருந்து காலியாகத் திரும்பிப் போகும். டிரைவர் சீட் பக்கம் இருவரும் மற்றவர்கள் பின்னாலுமாக ஏறிக் கொண்டு போய் விடலாம் !.... அதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்.''

கதிரேசனும் அந்த ஏற்பாட்டுக்குச் சம்மதித்தான். பாண்டியன் முதலிய மாணவர் தலைவர்களால் தாங்கள் எதற்காக அனுப்பப்பட்டோமோ, அந்தக் காரியம் இந்தக் கிராமத்தில் முடிந்து விட்டதென்றே கதிரேசனுக்கும் தோன்றியது. பணத்துக்கும் அதிகாரத்துக்கும் பயந்துவிட்ட சற்குணத்திடம் இருந்து மேலே எதுவும் தெரிய வழி இருப்பதாகத் தோன்றாததால் தன் நண்பர்களிடம் கலந்து பேசிப் பயணத்துக்குத் தயாரானான் கதிரேசன்.

பிச்சைமுத்து மாணவர்களின் பிரயாணத்துக்குச் சிரத்தையோடு எல்லா உதவிகளையும் செய்தார். பணத்துக்கும், அதிகாரங்களுக்கும் பயப்படுகிற மனப்பான்மையுள்ள ஒவ்வோர் இந்திய கிராமத்திலும் பிச்சைமுத்துவைப் போல் யாராவது ஒரு தெளிவான — துணிவான மனிதர் மட்டுமே இருக்க முடிவதைக் கதிரேசன் கண்டான். கிராமத்தில் அந்த ஒரு மனிதர் இருக்கிறார் என்பதைவிட அந்த ஒரு மனிதரே கிராமமாக இருக்கிறார் என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்பதை நன்றியோடு நினைத்தான். கதிரேசன். லாரியில் புறப்படுவதற்கு முன் பிச்சைமுத்துவின் வீட்டில் அவர்கள் அரை மணி நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. அந்த வேளையில் அவருடைய புத்தக அலமாரியில் சமூகப் புரட்சிக்கும், கலாசாரப் புரட்சிக்கும் வித்திட்ட பல நூல்களை அவன் பார்த்தான். ரூஸோவின் சமுதாய ஒப்பந்தம். காந்தியடிகளின் சத்திய சோதனை, கார்ல் மார்க்ஸின் மூலதனம், சேகுவேராவின் வரலாறு முதலியவற்றை அங்கே காண முடிந்தது. பிச்சைமுத்துவின் அஞ்சாமைக்கும், தெளிவுக்கும் காரணமான நூல்களைக் கதிரேசன் அங்கே கண்டபோது அந்தக் கிராமத்தில் அவருடைய தனித்தன்மைக்கும், கொள்கைப் பிடிப்புக்கும் காரணம் என்ன என்பது புரிந்தது. புறப்படுவதற்கு முன்னர், ''உங்களைப் போன்ற இளைஞர்களிடம் இந்த மாதிரியான சில புதிய நூல்கள் இருக்க வேண்டும்! தயவுசெய்து இப்போது இதைப் பிரித்துப் பார்க்காதீர்கள். ஊரில் போய்ப் பாருங்கள். நம் சந்திப்பின் நினைவாக இந்த நூலை உங்களுக்கு அளிக்கிறேன்'' என்று நன்றாக உறையிட்டுக் கட்டிய ஒரு புத்தகக் கட்டை அவனிடம் அளித்தார் பிச்சைமுத்து. மாணவர்களும், கதிரேசனும், லாரியில் புறப்படுவதற்குச் சில விநாடிகளுக்கு முன்புதான் அவர் அந்தக் கட்டை அளித்ததால் அவனாலும் உடனே அதைப் பிரித்துப் பார்க்க முடியவில்லை.

'' சார் ! நீங்கள் எங்களுக்காக மிகவும் சிரமப்பட்டு விட்டீர்கள். எங்களால் இன்றிரவு உங்கள் தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டு விட்டீர்கள்.




உங்களுக்கு மிகவும் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம்'' என்று கதிரேசன் நன்றி கூறியபோது பிச்சைமுத்து அதை ஏற்க மறுத்தார்.

''உபசார வார்த்தைகள் எனக்குப் பிடிக்காது. மிஸ்டர் கதிரேசன்! ஓராயிரம் பொய்யான உபசார வார்த்தைகளை மதிப்பதைவிட மெய்யான துயரத்திலே அரும்பும் ஒரு துளி கண்ணீரை அதிகம் மதிக்க வேண்டும். மறுபடியும் நாம் அடிக்கடி சந்திக்கலாம். இப்போது போய் வாருங்கள்'' என்று அந்தச் சம்பிரதாய நன்றியை ஏற்காமல் சிரித்துக் கொண்டே அவர்களுக்கு விடை கொடுத்தார் பிச்சைமுத்து. புறப்படுமுன் அவரால் தான் மிக அதிகமாக வசீகரிக்கப்பட்டிருப்பதைத் தனக்குத் தானே உணர்ந்தான் கதிரேசன்.

மறுநாள் அதிகாலையில் அவர்கள் மல்லிகைப் பந்தலை அடைந்தபோது மாணவர் பிரதிநிதிகளின் உண்ணாவிரதம் இன்னும் தொடர்கிறது என்பது தெரிந்தது. அண்ணாச்சி கடை வாசலில் லாரியை நிறுத்தி இறங்கியதும் அவர்கள் முதலில் தெரிந்து கொண்ட செய்தியே இதுதான். இரண்டு நாட்கள் சமவெளிப் பகுதிக் கிராமத்தில் கழித்துவிட்டு மீண்டும் மலைக்கு வந்திருந்ததால் குளிர் எப்போதையும்விட அதிகமாக உறைப்பது போலிருந்தது.

இந்த இரண்டு மூன்று தினங்களில் மல்லிகைப் பந்தல் நகருக்குள் சில மாறுதல்கள் தெரிந்தன. பல்கலைக் கழக விடுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட மாணவர்களில் வெளியூரைச் சேர்ந்த





இன்றே ஐஓபியில் ஒரு "கல்வி சேமிப்பு கணக்கு" ஆரம்பியுங்கள்

இன்று உங்கள் குழந்தைக்கு பள்ளியில் முதல் நாள்.

நீங்கள் உணரும் முன்னரே அவன் கல்லூரிப் படிப்பை எட்டி விடுவான்.

அவன் உயர் கல்விக்கு தேவைப்படும் பணத்தை எளியமுறையில் சேமிக்க உதவுகிறது ஐஓபி அளிக்கும் கல்வி சேமிப்புத் திட்டம்.

விவரங்களுக்கு அருகில்
உள்ள ஐஓபி கிளையை
அணுகுங்கள்

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்
மத்திய அலுவலகம்
151, மவுண்ட் ரோடு, சென்னை-2

IOB/7116

பெருவாரியான மாணவர்கள் ஊர்களுக்குச் சென்றுவிட்ட காரணத்தால் நகரில் மாணவர்களின் கூட்டம் குறைந்திருந்தது. உள்ளூர் மாணவர்களும், பாண்டியன் முதலிய போராட்டத்தில் ஈடுபட்டிருந்த முக்கியமானவர்களுமே நகரில் மீதமிருந்தனர். பல்கலைக் கழக விடுதிகளுக்கும், 'ஸ்டாஃப் குவார்ட்டர்' ஸுக்கும் போலீஸ் காவல் இன்னும் நீடித்துக் கொண்டிருந்தது. மேரி தங்கத்தின் மரணத்துக்குக் காரணமான இளம் விரிவுரையாளர், குடும்பத்தோடு வெளியேறி எங்கோ இரகசியமாக வெளியூர் போயிருந்தார். இரவோடு இரவாகப் போலீஸ் ஜீப்பிலேயே அவர் தப்பி வெளியேறிச் சென்றதாகப் பேசிக் கொண்டார்கள். பூட்டப்பட்டிருந்த அவர் வீடு இன்னும் போலீஸ் காவலில் பாதுகாக்கப்பட்டது. துணைவேந்தர் கல்விமந்திரியையும், கவர்னரையும் சந்திப்பதற்காகச் சென்னைக்குப் புறப்பட்டுப் போயிருந்தார். ஊர் நிலவரங்களைப் பற்றி அண்ணாச்சியிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, பாண்டியனும் மற்றவர்களும் உண்ணாவிரதம் இருக்கும் இடமாகிய பல்கலைக் கழக வாசலை ஒட்டிய பகுதிக்குப் புறப்பட்டுப் போனார்கள் கதிரேசன் முதலியவர்கள்.

அங்கே பல்கலைக் கழகத்தின் முக்கிய வாயிலில் நடுவே பொதுவில் மூங்கில் தட்டியிட்டு மறைக்கப்பட்ட இரண்டு சிற்றுக் கொட்டகைகள் போடப்பட்டிருந்தன. கொட்டகைகளில் பெஞ்சுகள் போட்டு விரிப்புக்கள் விரித்து மாணவ மாணவிகள் அமர்ந்திருந்தார்கள். தலையணைகளும், கம்பளிப் போர்வைகளும் தென்படவே குளிர் என்றும், பனி என்றும் பாராமல் உண்ணாவிரதம் இருந்தவர்கள் அங்கேயே இரவிலும் இருப்பது தெரிய வந்தது. ஒரு சிற்றுக் கொட்டகையில் மாணவிகள் ஆறு பேரும், மற்றொரு சிற்றுக் கொட்டகையில் மாணவர்கள் ஆறு பேரும் தளர்ந்து சோர்ந்து போய்க் காட்சி அளித்தனர். சிற்றுக் கொட்டகைகளின் இருபுறமும் போலீஸார் இருந்தார்கள். ஒரு கூட்டம் சுற்றி நின்று பார்த்துக் கொண்டிருந்தது. உண்ணாவிரதக் கொட்டகைகளின் முகப்புக்களிலும், மேற்புறமும் கோரிக்கை வாசகங்கள் எழுதி வைக்கப்பட்டிருந்தன. உண்ணாவிரதம் இருக்கிறவர்களுக்கு, பார்க்க வந்தவர்கள் அணிவித்த மாலைகள் பக்கத்தில் குவிந்திருந்தன. சில மாணவ மாணவிகள் அருகே படிப்பதற்குப் புத்தகங்கள் வைத்துக் கொண்டிருந்தார்கள். சிலர் அந்த அதிகாலையிலேயே படித்துக் கொண்டும் இருந்தார்கள். சிலர் சோர்ந்து போய்ப் படுத்துக் கொண்டிருந்தார்கள்.

கதிரேசன் பார்க்கச் சென்றபோது பாண்டியன் படித்துக் கொண்டிருந்தான். மோகன்தாஸ் சோர்ந்து போய்த் தலையணையில் சாய்ந்திருந்தான். கிராமத்தில் தெரிந்துகொண்டு வந்த விவரங்களையும், மேரி தங்கத்தின் பெற்றோரைச் சந்தித்ததையும், டிரில்மாஸ்டர் பிச்சைமுத்து மூலம் அறிந்த உண்மைகளையும் விளக்கமாகப் பாண்டியன், மோகன்தாஸ் இருவரிடமும் விவரித்தான் கதிரேசன்.

''மேரி தங்கத்தின் தந்தையான சற்குணம் நம்மோடு ஒத்துழைத்தாலும், ஒத்துழைக்காவிட்டாலும் நாம் உண்மைக்காகத் தொடர்ந்து போராட



சத்திய வெள்ளம்

ஓராயிரம் பொய்யான உபசார வார்த்தைகளை மதிப்பதைவிட மெய்யான துயரத்திலே விழிகளில் அரும்பும் ஒரு துளி கண்ணீரை நாம் அதிகமாக மதிக்கவேண்டும்.

வேண்டும். இந்த விஷயத்தில் நியாயம் கிடைக்கிற வரை நமது போராட்டம் நிற்காது'' என்றான் பாண்டியன்.

''நிறையப் பணத்தைக் கொடுத்து மிரட்டி மிஸ்டர் சற்குணத்தின் வாயை அடக்கி விட்டார்கள் என்றால் இனி அவரை நம்பிப் பயனில்லை'' என்றான் மோகன்தாஸ்.

அப்போது மல்லிகைப் பந்தல் நகர மாதர் சங்கத்தின் சார்பில் உண்ணாவிரதம் இருக்கும் மாணவிகளுக்கும், மாணவர்களுக்கும் மாலை சூட்டி ஆதரவு தெரிவிப்பதற்காக மாதர் சங்கத் தலைவியும், காரியதரிசியும், மற்றவர்களும் ஒரு காரில் வந்து இறங்கினார்கள். முதலில் கண்ணுக்கினியாள் முதலிய மாணவிகளுக்கு மாலை சூட்டிவிட்டு அப்புறம் மாணவர்கள் அமர்ந்திருந்த பகுதிக்கு வந்தார்கள் அந்த மாதர் சங்கத் தலைவி முதலியவர்கள். அவர்களோடு கண்ணுக்கினியாளும் எழுந்திருந்து வந்தாள். களைப்பும்,

சோர்வும் மிகுந்த அந்த உண்ணாவிரத நிலையிலும் அவள் மான் குட்டிபோல் துள்ளி நடந்து வந்து மாணவர்களை எல்லாம் ஒவ்வொருவராகப் பெயர் சொல்லி அந்த மாதர் சங்கத்தினருக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். காதோரங்களில் சுருண்டு சுழலும் கேசமும், ஒளி திகழும் கண்களும், இனிய நளினப் புன்னகையுமாக அவளைத் திடீரென்று மிக அருகில் பார்த்ததும் அப்போதுதான் முதன் முறையாகச் சந்திக்கும் ஒரு புதிய அழகியைப் போல் அவள் பாண்டியனின் பார்வையில் தோன்றினாள். வந்தவர்கள் மாலை சூட்டிவிட்டுச் சென்ற பின்பும்கூடக் கண்ணுக்கினியாள் மாணவர்கள் அமர்ந்திருந்த பகுதியில் தங்கிப் பாண்டியனுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தாள். பாண்டியன் அவளை வம்புக்கு இழுத்தான் :

'' கண்ணே ! உண்ணாவிரதம்தான் உன்னை இவ்வளவு கவர்ச்சியாகச் செய்ய முடியும் என்றால் நீ இன்னும் ஒரு வாரம் அதிகமாகக்கூட உண்ணாவிரதம் இருக்கலாம்.....''

''யாராவது கேட்டால் சிரிக்கப் போகிறார்கள். 'கண்ணே மூக்கே' என்றெல்லாம் கூப்பிட இதென்ன பழைய 'வள்ளி திருமண' நாடகமா, என்ன?''

''பின்னே வேறெப்படித்தான் கூப்பிடுவது உன்னை? சுருக்கியும் கூப்பிட முடியாமல் உங்கப்பா இப்படி உனக்கொரு பெயர் வைத்துத் தொலைத்திருக்கிறாரே! இதற்கு நான் என்ன செய்வது? உன் பேரைச் சுருக்கிக் கூப்பிட்டா 'கண்ணே'ன்னுதான் வருது.''

''அதற்காக இத்தனை பேர் முன்னிலையில் இப்படிக் 'கண்ணே', 'மூக்கே'ன்னு கொஞ்சத் தொடங்கிடறதுதான் நியாயமா ?''

''அதாவது இரகசியமாகக் கொஞ்ச வேண்டியதைப் பகிரங்கமாகக் கொஞ்சக் கூடாது என்கிறாயா? சபாஷ் ! நீ கெட்டிக்காரி......''

'' இப்படி யெல்லாம் பேசினால் நான் உடனே திரும்பிப் போக வேண்டியதுதான். திலக் கோட்டைக்குப் போன கதிரேசன் குழுவினர் திரும்பி வந்து பேசிக் கொண்டிருந்தார்களே; என்ன சொன்னார்கள் என்று தெரிந்துகொள்ளலாமே என்று பார்த்தால் நீங்கள் ரொம்பத்தான் விளையாடுகிறீர்கள்....''

''விளையாடுவதற்கு நாம் குழந்தைகள் அல்ல.''

'' இப்போதெல்லாம் குழந்தைகள் அதிகம் விளையாடுவதில்லை. நம்மைப் போன்றவர்கள்தான் அதிகமாக விளையாடிக் கொண்டிருக்கிறோம்....''

''இதைத்தான் அப்பா அம்மா விளையாட்டு என்கிறார்கள் பிரதர்'' என்று நடுவே குறுக்கிட்டான் மோகன்தாஸ். அதைக் கேட்டு, ''நான் போகிறேன். இனி இங்கே ஒரு நிமிஷம்கூட இருக்க முடியாது என்னால்'' என்று பொய்க் கோபத்தோடு விருட்டென்று எழ முயன்ற கண்ணுக்கினியாளைக் கையைப் பிடித்து இழுத்து அருகே உட்கார வைத்தான் பாண்டியன். அவள் உட்கார்ந்ததும், ''அவன் மேலென்ன தப்பு? நீ விளையாட்டைப் பற்றிச் சொன்னதனால் அந்த விளையாட்டின் பெயரைச் சொன்னான் அவன்'' என்று மோகன்தாஸுக்குப் பரிந்து பேசிவிட்டுக் கதிரேசன் தெரிவித்த செய்திகளைப் பாண்டியன் அவளிடம் கூறினான்.

பாண்டியன் கூறியவற்றைக் கேட்டதும் அவள், ''அந்தப் பெற்றோர் இப்படி நடந்து கொள்வார்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை'' என்றாள்.

உடனே பாண்டியன், ''யார்தான் அப்படி எதிர்பார்த்தார்கள்? நானும் கூடத்தான் அப்படி எதிர்பார்க்கவில்லை. நீயும் நானும் புத்திபூர்வமாக அளப்பதால் நம் கணக்குப் பிசகிப் போய்விடுகிறது. ஆனால் இப்போதெல்லாம் பணத்தை அளவுகோலாக வைத்து மனிதர்கள் நிறுக்கப்படுகிறார்கள். அந்த நிறுவையில் மிஸ்டர் சற்குணம் விலைக்குப் போய்விட்டார்....'' என்றான்.

''அவர் எப்படியும் தொலையட்டும். உண்மை நமக்குத் தெரியும். இந்த அட்டூழியத்துக்குக் காரணமான விரிவுரையாளரை இந்தப் பல்கலைக் கழகத்திலிருந்து துரத்துகிற வரையில் நாம் விடக்கூடாது.''

''அதுதான் உறுதியாயிற்றே !''

கண்ணுக்கினியாள் எழுந்து மாணவிகள் பகுதியில் திரும்பிப் போய் அமர்ந்து கொண்டாள். 'பல்கலைக் கழகத்தை உடனே திறக்க வேண்டும்' — 'மேரி தங்கத்தின் தற்கொலையை மூடி மறைக்காதே. உடன் விசாரணைக்கு ஏற்பாடு செய்க' — 'குற்றம் புரிந்தவர் யாராயிருந்தாலும் தண்டிக்கப்படுவதே நியாயம்', 'மந்திரிக்குச் சொந்தமானால் மனிதனுக்கு நியாயமில்லையா?' போன்று அங்கே எழுதி வைக்கப்பட்டிருந்த வாசகங்களைப் படித்தபடி எதிரே வந்து நின்ற கூட்டத்தில் சிலர் மாணவர் நல நிதிக்காக அங்கே வைக்கப்பட்டிருந்த டப்பா உண்டியலில் காசுகளையும் நோட்டுக்களையும்போட்டுவிட்டுப் போனார்கள். பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், டீன்கள், யாரும் உண்ணாவிரதம் நடந்து கொண்டிருந்த பகுதியில் எட்டிப் பார்க்கவே இல்லை.

பழமையின் பெருமையும்
புதுமையின் சிறப்பும் நிறைந்த
சாஸ்திரியாரின்
பட்டுப் புடவைகள் இந்தத்
தீபாவளிக்குப் பொருத்தமானவை



சம்பூர்ண சாஸ்திரியார் & சன்ஸ்

வடக்கு மாடவீதி,
மயிலாப்பூர், சென்னை-4.
போன்: 71719



ஆல்போ-ஸாங்

எல்லா வயதினருக்கும் ஒரு சிறந்த டானிக்

உங்களுடைய உடல் வளர்ச்சிக்கு ஆல்போ-ஸாங் அவசியம் தேவை. ஏனெனில் இளையோர் முதியவர்கள் எல்லோருடைய ஆரோக்கியத்திற்கும் உடல் வளர்ச்சிக்கும் தேவையான விசேஷப் பொருள்கள் ஆல்போ-ஸாங்கில் இருக்கின்றன.





ஜே. அன் ஜே. டிஷேன்
ஹைதராபாத் (டெக்கான்)

பூதலிங்கம் மட்டும் யாருக்கும் அஞ்சாமல், யாரை நினைத்தும் கவலைப்படாமல், தொடர்ந்து இரண்டு மாலை வேளைகளில் அங்கு வந்து மாணவர்களைச் சந்தித்து மாணவர்களோடு அமர்ந்து கனிவாக உரையாடிவிட்டுப் போனார். துணை வேந்தரும், ரிஜிஸ்திராரும் மாணவர்கள் உண்ணாவிரதத்தால் மிகவும் பயந்து போயிருப்பதாகவும், பயத்தோடுதான் வி. ஸி. சென்னைக்குப் புறப்பட்டுப் போயிருப்பதாகவும், பூதலிங்கத்தோடு பேசியதிலிருந்து பாண்டியனுக்குத் தெரிந்தது. மேரி தங்கத்திடம் தவறாக நடந்து கொண்டு அவள் தற்கொலைக்குக் காரணமாயிருந்த மதனகோபால் என்ற விரிவுரையாளரைப் போலீஸாரும், பல்கலைக் கழக நிர்வாகமுமே, எச்சரித்து அங்கிருந்து வெளியேற்றி வேறு ஊரில் போய்த் தங்கும்படி அறிவுரை கூறித் தக்க பாதுகாப்போடு அனுப்பி விட்டதாகவும் பூதலிங்கம் தெரிவித்தார். நகர மக்களிடையேயும், மல்லை இராவணசாமியின் கட்சியைத் தவிர உள்ள மற்ற அரசியல் கட்சிகளிடையேயும், மாணவர்களுக்குப் பேராதரவு இருந்தது. இராவணசாமியின் கட்சியினர் மட்டும், 'உண்ணாவிரதம் இருந்தால் உடம்பு இளைக்கும். உடம்பு இளைப்பது மாணவர்களுக்கு நல்லது.' — இப்படிக்கு உடல்நலம் நாடுவோர் சங்கம். — என்று கற்பனையாக ஒரு பொய்ப் பெயரைக் கீழே போட்டுக் கிண்டலான சுவரொட்டி ஒன்றை அச்சிட்டு மல்லிகைப் பந்தல் நகரம் எங்கும் ஒட்டியிருந்தார்கள். இது மாணவர்களின் கொதிப்பையும் குமுறலையும் அதிகப்படுத்தி இருந்தது. கோழைத்தனத்தினாலும், பயத்தினாலும் மல்லை இராவணசாமியின் ஆட்கள் அந்தச் சுவரொட்டியில் தங்கள் கட்சிப் பெயரை அச்சிட அஞ்சிப் பொய்யாக, 'உடல் நலம் நாடுவோர் சங்கம்' என்று போட்டிருந்தாலும் எம். எல்.ஏ. தான் அதை அச்சிட்டு ஒட்ட ஏற்பாடு செய்தார் என்பதை அண்ணாச்சி உளவறிந்து கொண்டு வந்து சொல்லி விட்டார். கதிரேசன் முதலிய மாணவர்கள் நிலக்கோட்டையிலிருந்து திரும்பிய தினத்தன்று மறு தினம் உண்ணாவிரதம் இருந்தவர்களின் நிலை மிகவும் தளர்ந்து விட்டது. அன்று பிற்பகலில் அநேகமாக ஆறு மாணவிகளும், ஆறு மாணவர்களும் தளர்ந்து படுத்துவிட்டார்கள். சிலர் நிலை கவலைக்கிடம் ஆகியிருந்தது. மாணவர்களுக்கு ஆதரவாகத் தாங்களும் உண்ணாவிரதம் தொடங்கப் போவதாகத் தோட்டத் தொழிலாளர்கள் சங்கம் வேறு அறிவித்திருந்தது. துணை வேந்தர் இன்னும் சென்னையிலிருந்து திரும்பவில்லை. பதிவாளர் பயந்து நடுங்கினார். உண்ணாவிரதம் இருக்கும் பன்னிரண்டு பேர்களில் ஒருவருக்கு ஏதாவது நேர்ந்து விட்டாலும் நகரில் உள்ள ஆயிரக்கணக்கான மாணவர்கள் கொதித்து எழுவார்களே என்பது தான் பதிவாளரின் பயமாக இருந்தது. அவர் போலீஸ் அதிகாரியைச் சந்தித்தார். போலீஸ் அதிகாரி சென்னைக்கு ஐ.ஜி.யோடு ஃபோனில் பேசினார். ஐ. ஜி. மந்திரியைப் போய்ப் பார்த்துக் கலந்து ஆலோசனை செய்தார். மல்லிகைப் பந்தல் பல்கலைக் கழக விவகாரம் மல்லிகைப்பந்தல் நகரத்தோடு போகாமல் மாநிலம் முழுவதும் உள்ள இளம் மாணவ சமூகத்தைக் குமுறி எழச் செய்துவிடுமோ என்று மந்திரிக்கும் உள்ளூறப் பயமாகத்தான் இருந்தது. ஆனாலும் ஜம்பத்தையும் வறட்டுத் திமிரையும் விட்டுக் கொடுக்க அவர் தயாராயில்லை. அவருடைய கட்சியும் தயாராயில்லை. அதிகாரத்தை முழு மூச்சோடு பயன்படுத்த நினைத்தார் அவர். அதன் விளைவு அன்று மாலையே மல்லிகைப்பந்தலில் உண்ணாவிரதம் இருந்த மாணவ மாணவிகள் பன்னிரண்டுபேர்களும் ஐ.பி.ஸி. செக்ஷன் முந்நூற்று ஒன்பதின்படி 'தற்கொலை செய்து கொள்ள முயன்றதாக'க் குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டு ஆம்புலன்ஸ் வேனில் ஏற்றப்பட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டார்கள். கதிரேசன் பிச்சைமுத்துவின் வார்த்தைகள் பலித்துவிட்டதைக் கண்ணால் பார்த்தான்.

"நிச்சயமாகத் தற்கொலை செய்து கொண்டுவிட்ட ஒரு மாணவியைப்பற்றி விசாரிக்காமல் மூடி மறைக்கிறார்கள். அதே சமயத்தில் சும்மா உட்கார்ந்திருப்பவர்கள் மேல் 'தற்கொலை முயற்சி' என்று குற்றம் சுமத்திக் கைது செய்கிறார்கள்" என்று ஊரார் தங்களுக்குள் பேசி அரசாங்கத்தை எள்ளி நகையாடும்படி காரியங்கள் நடந்தன. அமைதியாக உண்ணாவிரதம் இருந்த மாணவர்களின் முயற்சியைத் தந்திரமாக முறியடிக்க அரசாங்கம் மேற்கொண்ட நரித்தனமான காரியத்தால் மல்லிகைப் பந்தல் நகரப் பொதுமக்களும், பெற்றோர்களும், தொழிலாளர்களும் கொதித்தெழுந்தனர். மாணவர்களைக் கைது செய்து ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்ற இரவிலேயே போலீஸார் நகர எல்லைக்குள் யாரும் எதற்காகவும் ஒன்றுசேர முடியாதபடி உடனே தடை உத்தரவும் போட்டு விட்டார்கள். (தொடரும்)


மாதம் பத்து, பதினொன்று,
பனிரெண்டு
நின்று சிரிக்கும்
அன்புடன் கண்டு.
மூன்றாவது மாதத்திலிருந்து, உங்கள்
குழந்தைக்குப் பால் மட்டும் போதாது.
சீரான உடல் வளர்ச்சிக்கு உங்கள்
குழந்தைக்குத் தேவை பாரெக்ஸ்–அதன்
முதலாவது திட உணவு.
குழந்தையின் மென்மையான
ஜீரணத்திற்கு ஏற்ற சரியான
புரதச் சத்து கொண்டது
பாரெக்ஸ்.
FAREX
சீரான உடல் வளர்ச்சிக்குக் குழந்தையின் முதலாவது திட உணவு.
பாரெக்ஸ்® – க்ளாக்ஸோ தயாரிப்பு!
CMGF-23R-202 Tam



சபலம்

இவ்வாதின் ம்'மென்ற மணமும் காலணிகளின் 'ஒர்ச்'சென்ற ஒலியும் வந்திருப்பது யார் என்பதை வெளிப்படுத்தின. ஆபீஸ் வேலையில் ஆழ்ந்திருந்த அப்பாசாமி தலையை நிமிர்த்தினார். சில்க் ஜிப்பா, மல் வேஷ்டி, கையில் ஓர் ஆல்பம் ஆகியவைகளுடன் அவர் முன்னால் காட்சி அளித்தான் சப்ளையர் சங்கரன்.

''எக்ஸ்டிரா'' நடிகைகளைச் சினிமாக் கம்பெனிகளுக்குச் சப்ளை செய்யும் சப்ளையர் அவன். அவனுடைய தொழில் என்ன என்பதைத் தோற்றத்திலிருந்தே புரிந்து கொண்டு விடலாம். அப்பாசாமி நல்ல வசதி உள்ளவர் என்பதை உணர்ந்து அவருடன் தொடர்பு கொண்டு தன் வசியப் பேச்சினால் அவர் உள்ளத்தில் சபலத்தை உண்டாக்கி விட்டுவிட்டான் சங்கரன். எல்லாரிடமும் நெருப்பாக இருக்கும் அவர் சங்கரனைக் கண்டால் குழைய ஆரம்பித்துவிடுவார்.

அப்பாசாமி மூக்குக் கண்ணாடியைக் கழற்றி மேஜையின் மீது வைத்துவிட்டு வழக்கம் போல் பொய்ப் பற்கள் தெரியச் சிரித்தவாறு தலையை அசைத்தார். அலட்சியமாக அவர் முன்னால் அமர்ந்த சங்கரன் கையில் இருந்த போட்டோ ஆல்பத்தை அப்பாசாமியின் முன்னால் வைத்தான்.

அப்பாசாமி அமர்ந்தவாறே தம் அறையின் வழியாக வெளியே பார்த்தார்.

''பயப்படாதீர்கள்! ஆபீசில் ஒருவரும் இல்லை. உங்களுடைய 'பியூன்' மட்டும் தான் இருக்கிறான்'' என்றான் சங்கரன்.

'திக்'கென்றது அப்பாசாமிக்கு. ''அவன் ஒருவன் போதுமே! அதனால்தானே நான் உன்னை ஐந்தரை மணிக்குமேல் இங்கே வரச் சொன்னேன்.''

''நான் உள்ளே வந்தது அவனுக்குத் தெரியாது. ஏனென்றால் அவன் ஸ்டூலில் உட்கார்ந்து நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கிறான்.''

அறையின் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து சற்றுப் பலமாக அவன் முதுகில் ஒரு தட்டுத் தட்டினார் அவர். கண் விழித்த ஆபீஸ் பையன் தன் எதிரில் மானேஜர் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனான். அவருடைய பிளாஸ்க் பைகள் முதலியவைகளைக் காரில் கொண்டு போய் வைப்பதற்காக அறையினுள் நுழைய முயன்றான் அவன்.

''எல்லாவற்றையும் நானே கொண்டு போய் வைத்துக் கொள்கிறேன். நீ வீட்டுக்குப் போ'' என்று உத்தரவிட்டார் அவர்.

உடைகளைச் சரிப்படுத்திக் கொண்டு, ''குட்நைட் சார்!'' என்று கூறிவிட்டு ஓட்டமும் நடையுமாக வெளியேறினான் அவன்.

ஆபீசின் வெளிக் கதவைத் தாளிட்டார். முகத்தில் வெடித்து நின்ற வியர்வை முத்துக்களைக் கைக் குட்டையினால் துடைத்தவாறு தம் அறையினுள் நுழைந்தார் அப்பாசாமி.

''நானும் முன்ஜாக்கிரதையுடன் டெலிபோன் ரிசீவரைக் கீழே எடுத்து வைத்துவிட்டேன். 'இதுதானே போன வாரம் நம்மைச் சரியாகப் பேச முடியாமல் செய்துவிட்டது'' என்று ஆட்டுச் சிரிப்பு சிரித்து ஆல்பத்தை அவர் அருகில் நகர்த்தினான் சங்கரன்.

மூக்குக் கண்ணாடியை நன்றாகத் துடைத்து முகத்தில் போட்டுக் கொண்டு அழகிகளின்



ஆர். எஸ். மணி

புகைப்படங்கள் அடங்கிய ஆல்பத்தின் அரு கில் கையைக் கொண்டு போனார். மறுகணம் 'ஷாக்' அடித்தது போல் இருந்தது. கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டார்.

''இது ஒரு சாதாரண விஷயம். சிலர் பகிரங்கமாக இந்த மாதிரியான காரியங்களைச் செய்கிறார்கள்; சிலர் ரகசியமாகச் செய் கிறார்கள். இதற்குப் போய் இப்படிப் பயந்து சாகிறீர்களே ?''

'' இந்த விஷயம் வெளியே தெரிந்தால் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் ?''

'' அந்தக் கவலையே உங்களுக்கு வேண் டாம். இந்தத் தொழிலில் எனக்குப் பத்து வருஷங்கள் அனுபவம். தகுந்த பந்தோபஸ்து பண்ணி இருக்கிறேன். உங்களுடைய வயது, அந்தஸ்து, கௌரவம் இவைகளைப் பார்க்கும் போது இப்படிச் செய்தீர்கள் என்று சொன் னால்கூட யாரும் நம்பமாட்டார்கள். தைரிய மாக ஆல்பத்தைப் புரட்டிப் பார்த்து ஓர் உருப்படியை ஸெலக்ட் செய்யுங்கள்.''

அப்பாசாமியின் உள்ள உறுதி கொஞ்சம் தளர்ந்தது. ஆயினும் ஆல்பத்தைத் தொடுவ தற்கான துணிவு மட்டும் வரவில்லை.

''ஆண்டாள் கம்பெனி ஆவன்னா ரூவன்னா வைத் தெரியுமா ?''

'' ஒழுக்கம் மிகுந்தவராயிற்றே. நான் அவருடன் பழகி யிருக்கிறேன்.''

'' அவருக்கு இரண்டு அடிமையான பாரியாள்கள்.''

'' அப்படியா ?''

''சாரநாதன் இருக்காரே !''

''சத்தியசீலர் என்று பெயர். பெரிய மனிதர்.''

''பகலில் பெரிய மனிதர், ஆனால் இரவில் குடிகாரர், குடிக்கா விட்டால் அவருக்குத் தூக்கமே வராது.''

'' என்ன?''

''குணக்குன்று அப்படி இப்படி என்று ஊரில் அவரைப் பற்றிப் பேசிக் கொள்கிறார் களே? குமாரசாமி.....?''

'' அவரும் என் நெருங்கிய நண்பரா யிற்றே !''

''குதிரைப் பந்தயம் அவர் உயிர் நாடி என்ற உண்மை உங்களுக்குத் தெரியுமோ ?''

அப்பாசாமியின் உள்ள உறுதி மேலும் கொஞ்சம் தளர்ந்தது. 'இதையெல்லாம் பார்த்தால் நாம் செய்யப் போகிற காரியம் அப்படி ஒன்றும் தவறானதாகத் தெரியவில் லையே?' – மின்னல் கீற்றுப் போல் தெறித் தோடியது இந்த எண்ணம்.

இந்த மாதிரியான சமயத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த சங்கரன் சட்டென்று ஆல்பத்தைத் திறந்து அப்பாசாமியின் கண் களின் அருகில் கொண்டு போனான்.

இவை பதினெட்டு வயதுப் பாவைகள். இவை இன்பம் தரும் இளஞ் சிட்டுகள். இவை மனத்தைக் குளிர வைக்கும் மாய மோகினிகள். ஆல்பத்தின் பக்கங்களைப் 'படக் படக்'கென்று புரட்டிக் கொண்டே போனான் சங்கரன். அப்பாசாமியின் மனச் சாட்சி மயங்கியது. உறுதி உறங்கியது. சபலம் நிமிர்ந்து நின்று அவரைத் தம் கைப் பொம்மை ஆக்கியது.

"எல்லோரும் அழகாகத்தான் இருக்கிறார்கள். நீயே செலக்ட் செய்து நாளைக்கே அழைத்துக் கொண்டு வந்துவிடு" என்று உணர்ச்சி பொங்கக் கூறிவிட்டுப் பர்ஸைக் கையில் எடுத்தார் அப்பாசாமி.

"என்ன இது — பாதி? முழுசாகக் கொடுத்துவிடுங்கள். அதுக்குக் குறைந்து நான் வாங்குவதில்லை — போக்குவரத்துச் செலவு, இடத்துக்கு வாடகை, நம்ப கமிஷன் எல்லாம் இதுக்குள்ளேயேதான். நீங்களாகச் சந்தோஷப்பட்டு உருப்படிக்கு ஏதாவது கொடுக்கலாம். ஐந்தோ, பத்தோ — அவ்வளவுதான் — அதற்கு மேல் இல்லை." அப்பொழுது இருந்த மன நிலையில் பணம் பெரிதாகத் தோன்றவில்லை. அலட்சியமாக ஒரு பச்சை நோட்டை எடுத்து அவன் முன்னால் வீசினார்.

பணத்தைக் கையில் வாங்கியவுடன் பட்டென்று ஆல்பத்தை மூடிவிட்டான் சங்கரன். "இது என்னிடம் இருக்கட்டும். நாளைக்குக் கொடுக்கிறேன்."

ஆல்பத்தைச் சங்கரனிடமிருந்து வாங்க முயன்றார் அப்பாசாமி.

"என் தொழிலின் மூலதனம் இதுதான். இது என் கையில் இல்லை என்றால் எனக்கு யார் மதிப்புக் கொடுப்பார்கள்? இருபத்து நான்கு மணி நேரம் பொறுமையுடன் இருங்கள். நேரிலேயே கொண்டு வந்து நிறுத்திவிடுகிறேன். ராயப்பேட்டையில் எனக்குத் தெரிந்த ஒரு ஹோட்டல் இருக்கிறது. எல்லா வசதிகளும் உண்டு. பால் பழம்கூடக் கொண்டு வந்து வைக்கச் சொல்லி யிருக்கிறேன். உங்கள் வாழ்க்கையிலேயே நாளை மறக்க முடியாத நாள்."

அப்பாசாமியின் உள்ளத்தில் அலைமோதிக் கொண்டிருந்த உணர்ச்சி திடீரென்று பொங்கி எழுந்தது.

"நாளை சரியாக ஏழு மணிக்குப் பஸ் ஸ்டாண்டுக்குப் பக்கத்தில் இருக்கும் பழக் கடையின் அருகில் வந்து நின்று கொண்டிருங்கள். நான் டாக்ஸியில் வந்து உங்களை ஹோட்டலுக்கு அழைத்துக்கொண்டு போகிறேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் சங்கரன்.

* * *

கண்ணாடியின் முன்னால் நின்று தம்மை உற்றுப் பார்த்துக்கொண்ட அப்பாசாமிக்குக் காய கல்பம் சாப்பிட்டதுபோல் இருந்தது.

கறுப்பு மையினால் வெளுத்த கேசங்களை மறைக்க ஆரம்பித்தார் அப்பாசாமி.

அவருடைய மனைவி விமலாவுக்கு இதெல்லாம் வியப்பாக இருந்தது. "முக்கால் கிழவராகிவிட்டீர்கள். இதெல்லாம் என்ன? யாராவது உங்களைப் பார்த்தால் சிரிக்கப் போகிறார்கள்?" என்று கணவரைக் கடிந்து கொண்டாள்.

"நான் கிழவனா? அப்படி என்ன எனக்கு வயதாகிவிட்டது? இந்த வயதில் அவனவன் கல்யாணம்கூடச் செய்து கொள்கிறான்."

"அவசரப்படாதீர்கள்! இன்னும் நாலைந்து நிஜப் பற்கள் இருக்கின்றன. அவைகளெல்லாம் விழுந்த பிறகு கல்யாணம் செய்து கொள்ளுங்கள். இன்றைக்கு நீங்கள் ஏன் இப்படி இருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். நீங்கள் மறைத்தாலும் என்னால் கண்டுபிடிக்க முடியாது என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா?" என்றவாறு பக்கத்தில் வந்து நின்றாள் விமலா.

"உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. அதெல்லாம் வெறும் புரளி — நம்பாதே.... நான் அப்படியெல்லாம் செய்வேனா?... என் அந்தஸ்து என்ன? கௌரவம் என்ன?" என்று தடுமாறினார் அப்பாசாமி.

"ஏன் இப்படித் தவிக்கிறீர்கள்? நான் உங்களைச் சந்தேகப்படுகிறேன் என்று நினைத்தீர்களா? நீங்கள் ஒருபோதும் எனக்குத் துரோகம் செய்ய மாட்டீர்கள். உங்களைப் போல் பெரிய பதவியில் இருப்பவர்கள் எல்லாம் எப்படி எப்படியோ இருக்கிறார்கள். ஆனால் நீங்கள் அப்படி இருக்க மாட்டீர்கள்... உங்களால் அப்படியெல்லாம் இருக்கவும் முடியாது. பம்பாயிலிருந்து பெரிய அதிகாரி வரப் போகிறார். அவர் ஒர் இளைஞர். அவரைத் திருப்திப்படுத்துவதற்காக இப்படி வேஷம் போடுகிறீர்கள். அப்படித்தானே?"

"ஆமாம், ஆமாம். அதுவேதான். கண்டு பிடித்து விட்டாயே — நீ மகா கெட்டிக்காரி — இன்று பஸ்ஸில்தான் போகப் போகிறேன். எப்பொழுது வருவேன் என்று சொல்ல முடியாது. எனக்காக நீ காத்திருக்க வேண்டாம். காரியம் முடிந்துவிட்டால் சீக்கிரம் வந்துவிடுவேன். இல்லாவிட்டால் காலையில்தான் வருவேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டார் அப்பாசாமி.

* * *


நன்றாக இருட்டிய பிறகுதான் ஆபீசை விட்டுக் கிளம்பினார் அப்பாசாமி. தம்மை யாரும் பார்த்துவிடக் கூடாது என்பதற்காக அதிகமான ஜன நடமாட்டம் உள்ள கடை வீதியினுள் புகுந்து கும்பலோடு கும்பலாக பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்தார் அவர். அவருடைய நெஞ்சு திக்குத் திக்கென்று அடித்துக் கொண்டே யிருந்தது. குளிர்ந்த காற்று வீசிய போதிலும் உடம்பு 'குப்குப்' பென்று வியர்த்துக் கொட்டிக் கொண்டுதான் இருந்தது. 'சங்கரன் ஏற்பாடு செய்திருக்கும் ஹோட்டல் அறையினுள் சென்றவுடன் நாமாக அவளிடம் பேச வேண்டுமா? அல்லது அவளாக நம்மிடம் பேசுவாளா? ஹோட்டல் அறையினுள் முதலில் நான் செல்ல வேண்டுமா? அல்லது அவளை அனுப்ப வேண்டுமா?' —

தம் மீது யாரோ பலமாக இடித்துக் கொண்டு செல்வது போலிருந்தது. சிந்தனை தடைப்பட்டது. திரும்பிப் பார்த்தார் அப்பாசாமி. சற்றுத் தூரத்தில் செல்லும் பெண் மணிதான் தம் மீது மோதிக் கொண்டு சென்



கல்கத்தா Krystal Chemicals (Private) Ltd. டைரக்டரான ஸ்ரீ நாகோஜி அவர்கள் குமாரத்தி சௌபாக்கியவதி பார்கவிக்கும், பம்பாய் Bayer (India) Ltd., ஐ சேர்ந்த சிரஞ்சீவி கே. வெங்கட்ராமனுக்கும் திருமணம் சென்னையில் 10-9-1972 அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்



Dr. M. R. Gopal, Ph.D., **Sow. Lakshmi, B.Sc.,**

ஸ்ரீ ஏ.எஸ். நாகேஸ்வரன் (India Audit & Accounts Service) புத்திரியான சௌ. லக்ஷ்மிக்கும் ஸ்ரீ Dr. எம்.கே. ராமசுவாமி அவர்களின் புத்திரரான சிரஞ்சீவி M. R. கோபாலுக்கும் சென்னை தியாகராயநகர் தேவேந்திர கல்யாண மண்டபத்தில் 28-8-72 அன்று சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. மணமக்களுக்கு நேரில் கலந்து கொண்டு ஆசீர்வதித்தவர்களுக்கும் வாழ்த்துக்கள் அனுப்பிய அனைவருக்கும் இதன் மூலம் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீ ஏ.எஸ். நாகேஸ்வரன்
ஸ்ரீமதி கோமதி நாகேஸ்வரன்



பூட்ஸ் வழங்கிடும் செராஸ—இருமல் வரும்போது உண்மையிலேயே இதமளித்துச் செயலாற்றும் நோஸ்கபீன் அடங்கிய இருமல் லாஸெஞ்ச் (மாத்திரை)



நிருக்கிறான் என்பதை உணர்ந்தார் அவர். ஒயிலாக நடந்து சென்று கொண்டிருந்த அப்பெண்மணி சற்றுத் தூரத்தில் இருந்த கடையின் பக்கம் நின்று திரும்பி அவரைப் பார்த்து இலேசாகப் புன்முறுவல் செய்தாள். அப்பாசாமியின் மனம் 'திக்'கென்றது. 'இவளுடைய உடைக்கும் வயதுக்கும் சம்பந்தமே இல்லையே. வயதானவளான போதிலும் எத்தனை மிடுக்கு? எத்தனை ஒய்யாரம்?' அந்த மாதின் பார்வை அவர் உணர்ச்சியின் வேகத்தை அதிகப்படுத்தியது. சங்கரன் தமக்காகக் காத்திருக்கப் போகிறான் என்ற எண்ணம் ஏற்பட வேகமாக பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்தார் அப்பாசாமி.

மணி ஏழு. பஸ் ஸ்டாண்டைச் சுற்றிக் கண்ணோட்டம் விட்டார். சங்கரனைக் காண வில்லை. சங்கரன் குறிப்பிட்டிருந்தபடி பழக் கடையின் பக்கமாகப் போய் இருளில் பதுங்கியவாறு நின்று பாதையில் ஓடும் டாக்சிகளை ஆவலுடன் பார்த்தவண்ணம் இருந்தார் அப்பாசாமி.

சற்றுத் தூரத்தில் வேகமாக வந்து கொண்டிருந்த டாக்சி ஒன்று பழக் கடையின் அருகில் வந்து 'சருக்'கென்று நின்றது. சங்கரன் வந்துவிட்டான் என்ற சந்தோஷத்துடன் டாக்சியின் அருகில் விரைந்து வந்து நின்ற அப்பாசாமி தம் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் தட்சிணாமூர்த்தி டாக்சியிலிருந்து வெளியே எட்டிப் பார்ப்பதைக் கண்டு திடுக்கிட்டுப் போனார்.

''பழம் வாங்கலாம் என்று வண்டியை நிறுத்தச் சொன்னேன். உங்கள் கார் ரிப்பேரா? வீட்டுக்குத்தான் போகிறேன். ஏறிக் கொள்ளுங்கள் போகலாம்'' என்று அழைத்தார் அவர்.

அவரிடமிருந்து தப்புவது அப்பாசாமிக்குப் பெரும் பாடாகிவிட்டது. இவர் வீட்டுக்குப் போய் எதையாவது உளறிக் கொட்டிவிடப் போகிறாரே என்ற பயம் அப்பாசாமியை வாட்டி எடுத்தது. மனத்தைத் தைரியப் படுத்திக் கொண்டு மீண்டும் இருளில் பதுங்கினார் அவர்.

''எங்கே சார், இங்கே வந்து பதுங்கிக் கொண்டிருக்கிறீர்கள்? டாக்சிக்காகக் காத்திருக்கிறீர்களா?'' என்று தம் பின்னாலிருந்து வந்த குரலைக் கேட்டு மீண்டும் திடுக்கிட்டார் அப்பாசாமி.

தலைமைக் குமாஸ்தா தலையைச் சொறிந்தவாறு தம் முன்னால் நிற்பதைக் கண்ட அப்பாசாமிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

''அதோ இருக்கிறதே, அந்த வீட்டில்தான் நான் குடியிருக்கிறேன். வீட்டிலிருந்து உங்களைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். டாக்சிகள் வரும் போது முன்னால் வருவதும் அவை தாண்டிச் சென்றவுடன் பின்னால் செல்வதுமாக இருக்கிறீர்களே என்றுதான் கேட்டேன் — பொதுவாக இந்த நேரங்களில் இந்த இடத்தில் டாக்சிகள் கிடைப்பது துர்லபம். நீங்கள் இங்கேயே இருங்கள். ஸ்டாண்டுக்குப் போய் ஒரு டாக்சி கொண்டு வருகிறேன்'' என்றான் அவன்.

ஏதேதோ சாக்குப் போக்குச் சொன்னார். தலைமைக் குமாஸ்தா அவரை இலேசில் விட வில்லை. அவனை அங்கிருந்து அனுப்புவது அவருக்குப் பெரும் பாடாகிவிட்டது. அந்தக் காரியத்தை ரகசியமாக முடித்துவிட வேண்டும் என்று எண்ணி இருந்தார். ஆனால் அது அம்பலம் ஆகிவிடும்போல் இருந்தது. ஆகவே அந்த இடத்தைவிட்டு நகர்ந்து எதிர்ச்சாரியின் பக்கம் போனார்.

குறிப்பிட்ட நேரத்துக்கு மேலாகியும் சங்கரன் வராததினால் அவன் மீது கோபம் கோபமாக வந்தது. சங்கரன் நம்மை ஏமாற்றி விட்டானோ என்ற சந்தேகம்கூட எழுந்தது. அவரால் அங்கு இருக்க முடிய வில்லை. அவ்விடத்தை விட்டு நகரவும் மனசு இடம் கொடுக்கவில்லை.

அவருடைய அலை பாயும் உள்ளத்துக்கு அபயம் அளிப்பது போல் ஆலய மணியின் ஓசை ஒன்று கேட்டது. பக்கத்தில் பிள்ளையார் கோயில் ஒன்று இருப்பதை உணர்ந்த அவர் சட்டென்று கோயிலினுள் நுழைந்தார்.

''இனி யாரும் நம்மைச் சந்தேகப்படமாட்டார்கள். எவ்வளவு நேரமானாலும் சங்கரன்



அருணாசலம் மறைவு

''அருண்'' என்ற புனைபெயரில் எழுதி வந்த திரு கே. அருணாசலம் தமது 59வது வயதில் காலமானார்.

திரு அருணாசலம் 1930ம் ஆண்டில் நடைபெற்ற உப்பு சத்தியாக்கிரகத்தில் சேர்ந்து சிறைப்பட்டார். 1942ம் ஆண்டைய இயக்கத்திலும் சேர்ந்து சிறைப்பட்டார். இந்த ஆண்டு சுதந்திரத் திருவிழா நாளில் தில்லியில் தாமிர பத்திரம் பெற்ற தேசபக்தர்களில் அருணாசலமும் ஒருவர். தேச பக்திக் கனலில் புடம் போடப்பட்ட அருணாசலம் உணர்ச்சியும் தெளிவும் மிக்க சிறந்த எழுத்தாளர். பெரியோர்கள் பலரின் இளமைப் பருவத்தையும் வளர்ச்சியையும் சுவை மிக்க கட்டுரைகளாக வரைந்து தமிழ் எழுத்துலகில் நிரந்தரமான இடம் பெற்றுவிட்டார்.

அவரது மறைவினால் துயர் உறும் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்.



பத்திரிகையை முகரலாம்!

உணவுப் பொருள், சென்ட் போன்றவற்றின் விளம்பரங்களை அமெரிக்க சஞ்சிகைகளில் பார்க்கும் வாசகர் இனி அந்தப் பக்கத்தை விரலால் கீறினால் குறிப்பிட்ட பொருளின் மணத்தையும் நுகரலாம்!

மருந்துப் பொருளை 'காப்ஸ்யூலில்' அடக்குவது போல் வாசனையை மிக மிக நுண்ணிய 'காப்ஸ்யூ'லில் அடக்கியிருக்கிறார்கள். 350 'காப்ஸ்யூ'ல்களை இணைத்தால் ஒரு மனிதனின் ஒரு கேசத்தைச் சுற்றி வளைக்கலாம். அத்தனை சிறியவை! இந்த 'காப்ஸ்யூ'ல்கள் காகிதத்தில் ஒட்ட வைக்கப்படுகின்றன. பிறகு வாசனை வேண்டுவோர் நகத்தால் கீறி காப்ஸ்யூல்களை உடைக்க வேண்டியதுதான்!

வரும் வரையில் கவலையின்றிக் காத்திருக்கலாம்'' என்று எண்ணினார் அவர்.

அவருடைய உடல் ஆலயத்தினுள் இருந்தது. உள்ளம் வெளியே அலை பாய்ந்துகொண்டிருந்தது. அவருடைய கூப்பிய கரங்கள் கடவுளைப் பார்த்தவண்ணம் இருந்தன. விழிகள் இரண்டும் வீதியைப் பார்த்துக் கொண்டிருந்தன. மனச்சாட்சி அவரை உள்ளே இழுத்தது. சபலம் அவரை வெளியே இழுத்தது.

''நமஸ்காரம். வாங்கோ...வாங்கோ...'' என்ற குரல் கேட்டுத் தலையைத் திருப்பினார் அப்பாசாமி.

மணி குருக்கள் தம் முன்னால் நிற்பதைக் கண்டு திகைத்துப் போனார் அப்பாசாமி. பழக்கப்பட்ட குருக்கள் அவர். ஆழ்வார்ப் பேட்டையில் தம் வீட்டுக்கு அருகில் உள்ள கோயிலைக் கவனித்துக் கொள்ளும் இவர் இங்கு எப்படி வந்தார்?

'' இங்கே என் மாமாதான் பார்த்துக் கொண்டிருந்தார். ஒரு வாரமாக அவருக்கு உடம்பு சரியாக இல்லை. அதனால்தான் நான் வந்தேன்'' என்று கூறிவிட்டு உள்ளே சென்று பெரிய கற்பூரக்கட்டி ஒன்றை ஏற்றித் தட்டில் வைத்துக் கணீர் கணீரென மந்திரங்களை உச்சரித்தவாறு தீபாராதனை செய்தார். மணி குருக்கள் கையில் ஏந்தி வந்த கற்பூர ஆரத்தியைக் கண்களில் ஒத்திக் கொள்வதற்காகத் தலையைக் குனிந்தார் அப்பாசாமி. விநாயகரின் கழுத்திலிருந்து கழற்றித் தட்டில் வைத்திருந்த பெரிய ரோஜா மாலையை எடுத்து அப்பாசாமியின் கழுத்தில் போட்டு, ''ரொம்ப சக்தி வாய்ந்த விநாயகர் — உங்களுக்கு மனோ பலத்தையும் தீர்க்காயுளையும் கொடுப்பார்'' என்றார் குருக்கள். அத்துடன் எதிர் வரிசையில் நின்று அப்பாசாமியையே பார்த்துக் கொண்டிருந்த அந்தக் கோயில் தர்மகர்த்தாவிடம், ''இவரை எனக்கு ரொம்பநாட்களாய்த் தெரியும். தெய்வ பக்தி மிகுந்தவர்; தர்மிஷ்டர். இவரைப் போன்ற உத்தமர்களை இந்தக் காலத்தில் காண்பது ரொம்ப அபூர்வம். இன்று நம் கோயில் சந்தனாபிஷேகம் என்று தெரிந்து கொண்டு ஆழ்வார்ப் பேட்டையிலிருந்து வந்திருக்கிறாரே? இதிலிருந்தே இவர் எவ்வளவு பெரிய பக்திமான் என்பது தெரியவில்லையா?'' என்று பாராட்டினார்.

அப்பாசாமி தம் கழுத்தில் விழுந்திருக்கும் மாலையைப் பார்த்தார். சற்றுத் தூரத்தில் காட்சியளிக்கும் விநாயகப் பெருமானைப் பார்த்தார். உத்தமர், உயர்ந்தவர் என்ற வார்த்தைகளையும் எண்ணிப் பார்த்தார். விழிகளும் செவிகளும் மெல்ல சந்நிதியின் பக்கம் திரும்பின.

அப்பாசாமி அதுவரை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த டாக்ஸி கோயிலின் வாசலில் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய சங்கரன் மிகுந்த பரபரப்புடன் கோயிலினுள் நுழைந்தான்.

''வெளியே நிற்கச் சொன்னால் இங்கே வந்து நிற்கிறீர்களே — உங்களை எங்கேயெல்லாம் தேடுவது? டாக்ஸி கிடைக்கவில்லை. அதனால்தான் கொஞ்சம் லேட்டு. எல்லாம் தயார். புறப்படுங்கள் — புறப்படுங்கள்'' என்று துரிதப்படுத்தினான் சங்கரன்.

'' நான் ஆழ்வார்ப்பேட்டை வழியாகத்தான் போகிறேன், வாருங்கள். என் காரில் போகலாம். உங்களைப் போன்றவர்களை அழைத்துப் போக நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்'' என்றார் தர்மகர்த்தா.

அப்பாசாமியை யார் அழைத்துப் போவது என்பதில் இருவருக்கும் போட்டி ஏற்பட்டு விட்டது. அப்பாசாமி ஒன்றையும் காதில் போட்டுக் கொள்ளாமல் மலர் மாலையுடன் கோயிலை விட்டு வெளியே வந்தார். சங்கரன் வெளியே ஓடி வந்து டாக்ஸியின் கதவைத் திறந்தான்.

அப்பாசாமியின் மனம் சங்கரனின் டாக்ஸியின் பக்கம் சென்றது. அவருடைய கால்கள் இரண்டும் தர்மகர்த்தாவின் வண்டியின் அருகில் அவரை அழைத்துச் சென்றன. அப்பாசாமி தர்மகர்த்தாவின் காரினுள் நுழைந்தார். விர்ரென்று கார் புறப்பட்டது.

'நான் என்ன செய்ய நினைத்தேன்? என்ன செய்து கொண்டிருக்கிறேன்' என்ற கேள்வி அப்பாசாமியின் உள்ளத்தில் எழுந்தது. ''நீங்கள் நேர் வழியிலேயே செல்பவர் — உங்களால் தவறான வழியில் செல்ல முடியாது. உங்கள் உள்ளம் அப்படிப்பட்டது'' என்று அன்று காலையில் தம் மனைவி கூறியது நினைவு வந்தது அவருக்கு. 'அவள்தான் எத்தனை கச்சிதமாகத் தம்மை எடை போட்டு வைத்திருக்கிறாள்!' என்று அதிசயித்தார்.

நடந்த சம்பவங்கள் மனச்சாட்சிக்கு ஒரு சோதனை — சபலத்துக்கு ஒரு சவுக்கடி—வேறு ஒன்றுமில்லை என்று தம்மைத் தாமே தேற்றிக் கொண்டார் அப்பாசாமி.

அவருடைய மனச்சாட்சியின் உறுதியைக் கண்டு மகிழ்வதுபோல் அவருடைய மடியில் இருந்த ரோஜா மாலையின் இதழ்கள் பொல பொலவென்று உதிர்ந்தன.

தீபாவளி விசேஷ விற்பனை!

1972 தீபாவளிக்கு

புதிய தினுசுகள்!

NALLI SILKS

— SILK SAREES —



புதிய கலர்கள்:

● ரமா ● சுபா

● வீணா ● ராணி

புதிய பார்டர்: ● லதா

புதிய கட்டங்கள்:

● கேரவான்

● ஜூபிளி ● கிருபா

புதிய தினுசு: ● வானவில்

புதிய கோடு: ● பென்சில்

வண்ணச் சேர்க்கையில் உருவாக்கிய இப்புதிய கலர்கள்
ஒன்-சைட் & டபுள்-சைட் பார்டர்களில் கிடைக்கும்.

முந்திய தீபாவளி கலர்களுக்கு
இந்தத் தீபாவளி புதிய கலர்கள் ஜோடியாக இருக்கும்

தேவைக்கு இப்பொழுதே ஆர்டர் கொடுத்தால்
தீபாவளிக்கு சப்ளை செய்யப்படும்.

தீபாவளி புதிய கலர்களில் பாவாடைகளும் கிடைக்கும்
இவை தவிர, மற்ற எல்லா இதர கலர்களும் கிடைக்கும்

தீபாவளி புதிய கலர்கள் மட்டும் அடங்கிய இலவச வண்ணக்கார்டு வேண்டுவோர்
25 பைசா ஸ்டாம்புடன் விலாசம் தெளிவாக எழுதி அனுப்பவும்

தீபாவளி புதிய கலர்களை அறிமுகம் செய்யும் முன்னோடிகள்

நல்லி சில்க்ஸ்

பட்டு சேலைகள்

82, ராயப்பேட்டை ஹைரோடு - லஸ், மயிலாப்பூர், சென்னை-4

(போன்: 74862)

தீபாவளி வரை எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் விற்பனை உண்டு

எமது தயாரிப்புகள் அனைத்தும் கல்கத்தாவில் கிடைக்குமிடம்:

கணேஷ்ராம் சில்க் பாலஸ், 2-A, பிபின்பால் ரோடு, கல்கத்தா-26

உருளைக் கிழங்கு என்னைப் பார்த்துச் சிரித்தது.

''பார்த்தாயா? என்னை 'பாய்காட்' பண்ணி வந்தாயே, இப்ப என்னையே பார்க்க ஊட்டிக்கு வரவேண்டி நேர்ந்து விட்டதே, பார்த்தாயா?''

''உடல் பருமனைக் குறைக்கணும்னு உன்னை 'பாய்காட்' பண்ண வேண்டியது தானே?''

''நான் பணம் கொடுக்கும் கற்பகச் செடி. ஊட்டி விவசாயிகள் என்னைப் புறக்கணிக்கமாட்டார்கள்! நான் இவர்களுக்கு ஹீரோ!''

''உனக்கு ஒரு வில்லன் முளைச்சிருக்கானே, நெமோடோட் — 'பொன்னிற நூற்புழு'! இருக்கிறார்கள். அதனால் ஓர் ஏக்கருக்குச் சுமார் அறுபது சதம் உருளைக் கிழங்கு உற்பத்தி அதிகரித்திருக்கிறது.''

தாம்பட்டி கிராமத்துக்கு நெரிசலான பாதையில் காரில் செல்கிறோம். மலைச் சரிவுகளில் எழுந்துள்ள சிறிய கிராமம். முதியவரான திரு நந்தி கவுடரைச் சந்திக்கிறோம். படகர்கள் திப்புசுல்தான் காலத்தில் மைசூரிலிருந்து விரட்டப்பட்டு நீலகிரி ஜில்லாவில் குடியேறியவர்கள். இவர்கள் பாஷை கன்னடமும் தமிழும் கலந்த மொழி. படகப் பெண்கள் உழைப்பில் தேர்ந்தவர்கள். நாற்பது பேர் ஓர் ஏக்கர் நிலத்தில் உருளைக் கிழங்கு அறுவடை செய்துவிடுவார்கள்!

உதகையில் ஒரு கதாநாயகன்

உன்னை அவன் என்ன பாடுபடுத்தறான். பார்த்தாயா?''

''அவன் அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதியான எதிரி. 1961ம் வருஷம் டாக்டர் ஜோன்ஸ் இந்த வியாதி நீலகிரியில் பரவுவதைக் கண்டுபிடித்துவிட்டாரே! மேற்கு ஜெர்மானியர்கள் இந்த வில்லனுக்கு மருந்து வைச்சிருக்காங்க. டாசானேட். அது வில்லன் 'நெமோடோட்' தலைகாட்ட விடாமல் அடித்து விடுமாக்கும்!''

அந்தச் சமயத்தில் டாக்டர் வால்பர்ஸ், ''பொடாடோ — பொடாடோ'' என்று சொல்லிக் கொண்டு வந்தார்.

உருளைக் கிழங்கு ஹீரோ டாக்டர் வால்பர்ஸை நமக்கு அறிமுகப்படுத்தி வைத்தது.

''எங்க குடும்ப டாக்டர் இவர். நீலகிரியிலே வில்லன் 'நெமோடோட்'டை ஒழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவர்!'' என்று கூறிவிட்டு, ''டாக்டர் வால்பர்ஸ்: உங்கள் திட்டங்களை இந்தப் பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கு எடுத்துக் கூறுங்க!'' என்றது.

நீலகிரியில் இந்திய — ஜெர்மன் விவசாய மேம்பாட்டுத் திட்டத்தைப் பார்வையிடப் பத்திரிகைப் பிரதிநிதிகளில் ஒருவனாக நான் சென்றிருந்தபோதுதான் எனக்கும் ஹீரோ உருளைக் கிழங்குக்கும் இடையில் மேற்கூறிய சம்பாஷணை நிகழ்ந்தது!

வால்பர்ஸ் கூறினார்: ''நான் மேற்கு ஜெர்மனி டாக்டர்! எங்க நாட்டு உதவியுடன் இந்தியாவில் மூன்று இடங்களில் விவசாய மேம்பாட்டுத் திட்டங்கள் நடக்கின்றன. இமாசலப் பிரதேசத்தில் மண்டி மாவட்டம், உத்தரப் பிரதேசத்தில் அல்மோரா மாவட்டம், தமிழகத்தில் நீலகிரி மாவட்டம். நாங்க உருளைக் கிழங்கைப் பிடித்து வரும் 'நெமோடோட்'டை ஒழிக்க எழுபத்தைந்து லட்சம் மதிப்புள்ள 'டாசானேட்' வழங்கியிருக்கிறோம்!''

திட்ட அதிகாரி சொக்கலிங்கம் சொன்னார்: ''வைரஸ் பரவாத உருளைக்கிழங்கு விதைகளை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறோம். 750 விவசாயிகள் இந்த விவசாய மேம்பாட்டுத் திட்டத்தினால் பயன் அடைந்திருக்





உருளைக் கிழங்கு விதைத்து நாலு மாதங்களில் விளைச்சல் கிட்டுகிறது. உருளைக் கிழங்கு பயிருக்கு ஊடே ஊடே அவரையும் ஊன்றி வைத்திருக்கிறார்கள்.

விஜயநகரம் பண்ணையிலுள்ள மண் வள ஆராய்ச்சி நிலையத்துக்கு வருகிறோம். 'டாசானெட்' அடிப்பதைப் பார்வையிடுகிறோம். முகமூடி அணிந்து பணியாளர்கள் இந்தப் பணியை நிறைவேற்றுகிறார்கள். டாசானெட் கடும் விஷம்! அதனாலேயே முன் ஜாக்கிரதை.

இந்த ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயிகள் அடிக்கடி கூடித் தங்கள் பிரச்னைகளை விவாதிக்கிறார்கள். ''விளைச்சலை விற்பனைக்குக் கொணரு







1. விவசாயிகளுக்கு நவீன கருவிகளைப் பற்றி விளக்கம் தருகிறார் விவசாய அதிகாரி.
2. 'டாசானெட்' என்ற விஷ மருந்தை முகமூடி யணிந்து தெளிக்கிறார்.
3. 'குப்ரிமுத்து' என்ற புதுவகை உருளைக்கிழங்கு விளைச்சல்.
4. டாக்டர் வாஸ்பர்ஸ், மேற்கு ஜெர்மானிய பத்திரிகைத் தொடர்பு அதிகாரி திரு எலிக்கு ஆகியோருடன் நமது நிருபர்.
5. புதுவித முட்டைகோஸ் பயிர் விளைச்சல்.
6. 'நேமோடோட்' விஸ்வனின் ஆதிக்கம்!


வது எங்களுக்குப் பெரிய பிரச்னை. சென்ற வருஷம் எங்களுக்கு நஷ்டம்!'' என்றார் பொன்னன்.

''இந்த வருஷம் எங்களுக்கு நல்ல சீஸன். மூட்டைக்கு அறுபது ரூபாய் கிடைத்தால் எங்களுக்குக் கட்டி வரும்!'' என்றார் வயதான விவசாயி இரியப்ப கவுடர்.

'' இந்த வருஷமும் எங்களுக்குப் பண உதவி (Subsidy) கொடுத்தால் நல்லது!''

''எப்பொழுதுமே நாம் (Subsidy) உதவி கேட்பது அழகா? சுயகௌரவத்தோடு தலை நிமிர்ந்து என்றைக்கு நிற்கப் போகிறோம்?'' என்று விவசாயிகளின் உதவித் தலைவர் கஞ்சையா சூடு கொடுத்தார்.

''சென்ற வருஷம் எங்களுக்கு ரூ. 1500 நஷ்டம். இந்த வருஷம் சரிக்கட்டுங்க!'' என்கிறார் ஒரு முதிய விவசாயி.



'' உருளைக் கிழங்கு மார்க்கெட்டை உறுதி யாக நிலைக்கச் செய்தால் நல்லா இருக்கு முங்க!'' என்கிறார் ஓர் இளம் விவசாயி.

'' உருளைக் கிழங்கைவிட்டு அவ்வப்போது பார்லி, மெக்ஸிகன் கோதுமை போன்றவற் றைப் பயிரிடலாமே?'' என்று ஆலோசனை கூறுகிறார் 'நெமோடாலஜி' நிபுணர் விஜய ராகவன். '' அப்போதுதான் நெமோ டோட்டை அடக்கி வழிக்குக் கொணர முடியும்.'' — நெமோடோட் உருளைக் கிழங்குச் செடிகளில் எப்படிப் பரவுகிறது என்பதை மண்வள ஆராய்ச்சிசாலையில் கண்கூடாகக் காண்கிறோம்.

'' இந்த உருளைக் கிழங்குப் பயிரில் நெமோடோட் வியாதி மட்டுந்தானு? வேறு ஏதேனும் வியாதிகள் உண்டா ?''

''ஓ! சுமார் பத்தாயிரம் ஏக்கர் நிலங்களை நாங்கள் பரிசோதனை செய்தோம். நெமோ டோட் வியாதி உருளைக் கிழங்குச் செடிகளில் பரவுவதோடு தக்காளி, கத்திரிக்காய் போன்ற செடிகளிலும் வேகமாகப் பரவும். உருளைக் கிழங்குப் பயிருக்குப் பின்கருகல், (Late Blight) பூஞ்சான் நோய்கள் போன்ற வேறு வில்லன் களும் உள்ளன. பீன்ஸ், பட்டாணி, முட்டை கோஸ் போன்ற காய்கறிகளைப் பயிரிட்டால் அவற்றில் நெமோடோட் பரவுவதில்லை. ஆகவேதான் உருளைக் கிழங்கு விவசாயிகளை இவற்றை நான்கு வருஷங்களுக்கு ஒரு முறை யாவது பயிரிடக் கோருகிறோம்!'' என்றார் விஜயராகவன்.

''நாங்கள் உலகிலுள்ள 131 உருளைக் கிழங்கு வகைகளை வரவழைத்து அவற்றை இந்த நீலகிரி மண்ணுக்கு ஏற்ப எப்படிப் பயிர் செய்வது என்று சொல்லித் தருகிறோம்!'' என்றார் டாக்டர் வால்பர்ஸ்.

''உதகமண்டலத்தில் உருளைக் கிழங்கு மன்னனின் ஆதிக்கம் மட்டும் இல்லை. காப்பி, தேயிலை எஸ்டேட்டுகள் இருக்கின் றன. நாங்களும் இருக்கிறோம்!'' என்று முட்டைகோஸ், பட்டாணி, கேரட், பீன்ஸ் முதலிய காய்கறிகள் குரல் கொடுத்தன.

''எங்களுக்கும் இந்த இந்திய — ஜெர்மன் விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உதவி கிடைக்கிறது !'' என்றது முட்டைகோஸ்.

'' வைரஸ் அற்ற செடிகளாக வளர அவர்கள் உதவுகிறார்கள் !'' என்று பீன்ஸ் கூறியது.

'' நாங்கள் உதகமண்டலத்திலிருந்து 14,000 டன்களாக்கும் லாரிகளில் ஏற்றுமதி யாகிறோம்! எங்களுக்குத் தமிழகம் முழுதும் அமோக கிராக்கி. 25,000 டன்வரை உங்க ளுக்குத் தேவைப்படுகிறதாம்!'' என்று காய் கறிகள் பெருமைப்பட்டுக் கொண்டன.

வகைக்குக் கொஞ்சமாகக் கூடையில் நிரப்பிக்கொண்டு புறப்பட்டேன் சென்னைக்கு.

— குண்டுமணி

நிஜமான சிரிப்பு!

சிரிப்பு என்பது எப்போதுமே கற்பனையாகத்தான் இருக்க வேண்டுமென்று அவசியமில்லை. இதை நிரூபிக்கிறார் பிரபல நகைச்சுவை நிபுணர் பென்னெட் செர்ஃப், 'தி லாஃப் இஸ் ஆன் மீ' என்னும் புத்த கத்தின் மூலமாக. நம்மைச் சிரிக்கவும் வியக்கவும் வைக்கிறது இப்புத்தகம்.

★ முன்னாள் செனட்டர் டெமோட கிரீன் டெமோக் ராட்டிக் கட்சியைச் சேர்ந்தவர். தம் கட்சிக்கு எப்படி வோட்டுச் சேகரிப்பார் தெரியுமா அவர்? டாக்ஸிக்



கார்களுக்கும் ஹோட்டல் வெயிட்டர்களுக்கும் சல்லிக் காசும் டிப் கொடுக்காமல் எதிர்க் கட்சியைச் சொல்லி, 'அவர்களுக்கே உங்கள் ஓட்டைப் போடுங்கள்' என்று சொல்வார்.

★ ஹாங்காங்கில் இரண்டு நண்பர்கள் சந்தித்துக் கொண்டார்கள்.


''உன் பெண்டாட்டியை உலகம் சுற்றக் கூடவே அழைத்துக் கொண்டு போயிருந்தாயே....''




''வயிற்றெரிச்சலைக் கிளப்பாதே, பேசாமலிரு.''

''ஏன்? என்ன ஆயிற்று?''

''ஹூம், எங்கே கொண்டு போய் விட்டுவிட்டு நழுவினாலும் எப்படியோ வழி தேடிக் கண்டுபிடித்து என்னை வந்தடைந்து விடுகிறாள்!''





'மியாமி' கடற்கரையில் இரண்டு முடி திருத்தும் நிலையங்களின் வாசலில் கண்டிருந்த போட்டி அறிவிப்புகள் இவை:

- கே. வி. முரளி

ஒவ்வொருவரின் மேனிக்கும் பாதுகாப்பு தேவை



வியர்வை துர்நாற்றத்திலிருந்தும், அதனால் நுண்ணிய கிருமிகளிடமிருந்தும் உங்களுக்கும், மற்றவர்களுக்கும் ஏற்படும் சங்கடத்திலிருந்தும் பாதுகாப் பளிக்கிறது.
ஜி-11 கலந்து **சிந்தால் டாய்லெட் பவுடர்** இந்தப் பாதுகாப்பைத் தருகிறது. அதோடு...அன்றலர்ந்த மலரின் நறுமணத்தையும் தருகிறது.

சிந்தால் **துர்நாற்றத்தை அறவே போக்கிப் பாதுகாப்பளிக்கும்** டாய்லெட் பவுடர்.

Interpub/GSP-8/72R Tam



பிரயாணம்

வையவன்

காளஹஸ்தி பஸ்ஸில் அமர்ந்திருந்த நாகராஜனுக்கு மனசின் மீது ஐஸ் கட்டிகளை அடுக்கினாற் போன்று ஓர் இன்ப நிலை. காரணம் முழங்காலின் மீது ஒரு கையை ஊன்றியவாறு இரட்டை வடம் செயினும், நரைத்த தலையில் பளீரென்று பிரகாசிக்கும் மல்லிகைச் சரமும் சரிந்த வயிறுமாக அந்த அம்மாள் ஏறிக் கொண்டிருந்தாள். அவள் பின்னால் . . . .

செக்கச் செவேரென்ற பட்டுச் சேலையின் கொசுவம் அலைவது தெரிந்தது.

''அடே, பாபநாசத்திலே பார்த்தோமே அதே அம்மா! விட்ட குறையைத் தொட்ட குறையோ? கூடவே வர்றாங்களே! இவங்க ஏன் பஸ்ஸிலே வர்றாங்க? கார் என்னாச்சு?'' என்று அவன் மனைவி தேவகி ஆச்சரியத்தால் அரற்றினாள்.

''அப்பா, ஐஸ் வேணும்!'' என்று நாகராஜனின் பையன் பாஸ்கர் சிணுங்கினான்.

அவன் சாக்கை வைத்து, ''அப்பா! அப்பா!'' என்று அவனுடைய மோவாயைத் தொட்டு, ''பாலை ஐஸ் கேக்கறும்பா!'' என்று புகார் கூறுவதுபோல் தன் விருப்பத்தைச் சமர்த்தோடு வெளிப்படுத்திக் கொண்டிருந்தாள் பெண் நந்தினி.

அவன் மனம் எல்லாவற்றுக்கும் அப்பால் இருந்தது. மனைவி பார்ப்பாளோ என்ற கல்மிஷம் இன்றி உத்ஸவ விக்கிரகம் மூலை திரும்புமா என்று காத்திருப்பது போன்ற ஆவலுடன் பஸ்ஸின் படியைப் பார்த்தான்.

சுசரிதா — அவள் பெயர் அது என்று அவனுடைய மாமியார் கூப்பிட்டதிலிருந்து தெரிந்து கொண்டான் — ஏறினாள்.

நடுத்தர உயரம். பூசினாற் போன்ற உடல் வாகு. நிறம் நெருப்பாக ஜொலித்தது. ஆனால் அக்கினியின் தகிப்பு இல்லை. பழுத்து நிறம் கனிந்த ஆரஞ்சைப் பார்ப்பது போன்ற தன்மை. கரேலென்று தலையில் அலைஅலையாய்ச் செருமிவிட்டு இடுப்பின் கீழே துள்ளிய கூந்தல்.

''இப்படி வாங்கம்மா! இங்கே ஸீட் காலியாயிருக்கு!'' என்று தேவகி அவர்களுக்கு எதிரே காலி ஸீட்டைக் காட்டி அவர்களைக் கூப்பிட்டாள்.

சுசரிதா அவனைத் தாண்டிக் கொண்டு ஜன்னல் ஓரத்துக்குப் போனாள். புது பட்டுப் புடவையின் சொரசொரப்பு. தலையில் கூடையாய்ச் செருகியிருந்த மல்லிகை. கண்கள் நாணத்துடன் கீழே பார்த்தன.

''நீங்களேதானா! ராத்திரி எங்கே தங்கினீங்க?'' சுசரிதாவின் மாமியார் தேவகியை விசாரிக்கத் தொடங்கினாள்.

''அஞ்சானத்ரி காட்டேஜ்தான்! நீங்க விடியற்காலை தரிசனத்துக்கு வரல்லே போல இருக்கே!''

''ஆமாங்க, சுசரிதாவும் பிள்ளையும்தான் போனாங்க. உங்களைக்கூடப் பார்த்ததாகச் சொன்னாங்களே!''

நாகராஜனுக்கு விடியற்காலை தரிசனத்துக்காக க்யூவில் நின்ற ஞாபகம் வந்தது. தெற்குச் சுவர்ப் பக்கமாக அவர்கள் நின்றார்கள். முன்னால் சுசரிதாவும் அவள் கணவனும். பின்னால் தேவகி. அடுத்து அவன் நின்றான்.

கருப்பக் கிருகத்தைவிட்டு வெளியே வந்து பிரசாதம் வாங்கும் க்யூவில் மீண்டும் அவர்களைச் சந்தித்தான் நாகராஜன்.

தேவகிதான் அவர்களோடு பேசினாள்.

சேலத்தில் அந்த இளைஞன் கல்லூரிப் பேராசிரியராம். திருமணம் முடிந்து நாலு நாட்கள்கூட ஆகவில்லை. திருப்பதியில் பிரார்த்தனை இருந்ததால் தம்பதி சமேதராக அம்மா அப்பா தம்பி தங்கைகள் என்று குடும்பத்தோடு வந்திருந்தார்கள். கோவையில் சொந்தத்தில் நகைக் கடை இருப்பதாகவும் பெரியவர் கவனித்துக் கொள்வதாகவும் கொஞ்ச நேரத்தில் தேவகி பல தகவல்களைக் கிரகித்து விட்டாள்.

''என்னங்க, இன்னிக்கு இவ்வளவு குஷியா இருக்கீங்க! காலையிலே அம்பாள் தரிசனம் கிடைச்சதோ?'' என்று அன்று மாலை தேவகி சீண்டினாள்.

அதுவரையில் ஒரு ரகசியம் போன்று அந்த அழகிய அநுபவத்தை மனசுக்குள் தேக்கி வைத்திருந்தான் நாகராஜன்.

''குஷியாகவா? இல்லையே... எப்பவும் போலத்தான் உன் மேலே எரிஞ்சு விழுந்துண்டு வர்றேன் !''

''ஹூ, என்னை ஏமாத்த முடியுமா? காலையிலே அந்தப் புதுக் கல்யாணப் பெண்ணைப் பார்த்தது உங்களை என்னமோ செஞ்சிருக்கு!''

அவன் பேசாமல் சிரித்தான். கையும் களவுமாகப் பிடிபட்டபின் சாகசம் செய்யும் சிரிப்பு.

''உண்மைதானே ?'' என்று விரலை நீட்டி வாத்தியாரம்மா மாதிரி ஆட்டினாள் தேவகி.

'' உனக்குப் பொறாமையா இருக்கா ?''

'' எனக்கென்ன பொறாமை ! உங்களை எனக்குத் தெரியாதா ? ஒரு ரோஜாப்பூவைப் பார்த்துட்டு மணிக் கணக்கா நிப்பீங்க ! சூரியன் சாயறதைச் சிலை மாதிரி நின்னு பார்ப்பீங்க. அப்போ அது மேலேயெல்லாம் நான் பொறாமைப்பட்டிருக்கேனா ?''

தேவகி அவனுக்கு உகந்தவள்தான். அதை விட அவனை நன்கு தெரிந்தவள். அவன் மனப் போக்கில் ஓடும் நீரோட்டம் அவளுக்குச் சட்டென்று புரியும்.

''ரொம்ப அபூர்வமான அழகில்லே!''

''குணமும் அற்புதமானதுதாங்க! ஒரு வெட்டி வார்த்தையில்லே. பொறாமை, வஞ்சனை, மினுக்கு.....பொய்.... ஒரு சாயல் கூடஹூம் !''

''பைத்தியமே! இந்த அழகு குணத்தோடே சம்பந்தப்பட்டது. மனசுக்குள்ளேயிருந்து ஏதோ ஒரு விளக்கு வெளிச்சம் வீசிண்டிருக்கு.''

''போதும், போதும். ரொம்ப வர்ணிக்க வேண்டாம். நானும் பெண் பிள்ளைதான். ஒரு நேரமில்லாட்டா இன்னொரு நேரம் என் சுபாவம் தலை காட்டிடும்'' என்று தன் பொறாமைக்குப் பயந்து அவன் வாயை அடக்கினாள் தேவகி.

மீண்டும் பாபநாசம் நீர்வீழ்ச்சிக்குக் காரில் அவர்கள் வந்தார்கள். பெரிய ஜரிகை பார்டரில் நட்சத்திரங்கள் சிந்திய டார்க் வயலெட் சேலையில் சுசரிதா சாந்தியையும் இனிய பரவசங்களையும் விநியோகிக்க வந்த தேவதை போல் நின்றாள்.

நாகராஜன் வீட்டுப் பலகாரமும் அவர்கள் பலகாரமும் பரஸ்பரம் பரிமாறப்பட்டன. குளித்த பின்பு பொதுவாக ஊர்க் கதைகள் பேசினார்கள், தேவகியும் மற்றவர்களும். மாப்பிள்ளை தன் மனைவியுடன் மெதுவாகப் பேசிச் சிரித்தவாறு சற்றுத் தொலைவில் உலவிக் கொண்டிருந்தான். நாகராஜனுக்கு அந்தக் காட்சியில் தானும் பங்கு பெறுவது போன்ற ஒரு சிலிர்ப்பு உண்டாயிற்று.

அவர்கள் மகிழ்ச்சியைக் காணுகையில் தன் மனம் மெதுவாக நிரம்புவதையும், அந்த ஜோடியின் கண்ணியமான உல்லாசத்தை வாழ்த்தி ஆசீர்வதிக்கும் பக்குவத்துக்கு மனம் நெகிழ்வதையும் உணர்ந்தான்.

யதேச்சையாக ஓரிரு முறை அவனைப் பார்த்தாள் சுசரிதா. அவன் என்ன என்னுகிறான் என்று புரிந்து கொண்டதுபோல், அவள் முகம் வெட்கத்தினால் குவிந்தது. காரில் புறப்படும்போது அவனை ஒரு மரியாதை கலந்த பிரியத்தோடு சுசரிதா பார்த்தாள். தான் கௌரவிக்கப்பட்டதைப் போன்று மாசற்ற ஒரு திருப்தி அவனுள் நிறைந்தது.

'' ரைட் !'' என்று கண்டக்டர் குரல் கொடுத்ததும் நாகராஜனின் நினைவுகள் கலைந்தன.

'' கார் எங்கேங்க ? மத்தவங்களையும் காணோம் ?'' என்று தேவகி பேச்சை ஆரம்பித்தாள்.

''பேக் வீல் ஷாக்ப்டோ என்னவோ — உடைஞ்சு போச்சாம். பத்து வைச்சுட்டு வர்றேன்னாங்க. அதான் தம்பியை மட்டும் அழைச்சுக்கிட்டு நாங்க பொறப்பட்டுட்டோம். அவங்க பின்னாடியே வர்றோம்னாங்க.''

பஸ் வேகம் கொண்டது. இருந்தாற்போலிருந்து சுசரிதாவின் மைத்துனன், ''அம்மா! கார் அதோ போகுதே!'' என்று கூவினான்.

அவர்கள் ஜன்னல் வழியாகப் பார்த்தனர். பச்சை வண்ண அம்பாஸிடர் சீறிக் கொண்டு பஸ்ஸைக் கடந்து ஒரு பர்லாங் தூரம் சென்றுவிட்டது.

''கானாஹஸ்டிலே போய்க் காத்திருக்கலாம்னு தீர்மானிச்சிருப்பாங்க. அதுவரைக்கும் அவங்க சௌகரியமா வரலாம்!'' என்றான் அந்த அம்மாள்.

அரை மணி நேரம் வண்டி ஓடியிருக்கும். அதன்பின் படபடவென்று தூறல்கள் விழத்

தொடங்கின. ஷட்டர்களை இழுத்து மூடத் தொடங்கினர் அனைவரும். மழை சற்று ஊரத்தபோது பஸ் நாலாபுறமும் வெட்ட வெளியாக இருந்த ஒரு சமவெளியில் பிரவேசித்தது.

திடீரென்று காற்று சீறத் தொடங்கிற்று.

"ஏமி குரு, தோஸ்தாவா நிறுப்போஸ்தாவா?" என்று கண்டக்டர் டிரைவரை நோக்கிக் கத்தினார்.

"அட்லா வதுலுதோனி போதானு..... குஸ்தாம்!" வண்டி மெதுவாக உருண்டது.

சில அடிகள் போயிருக்கலாம். காற்றின் சின வெறி பஸ்ஸின் டாப் மீது ஊளையிட்டுக் கொண்டு ஓடிற்று.

"நிறுப்பேய் அப்போய்!" என்று பிரயாணிகளில் ஒருவரின் பயந்த குரல் கூவிற்று.

பயத்தைவிடக் கொடிய தொத்து எதுவும் இராது. வண்டி நின்று விட்டது. இருக்க இருக்க ஸ்தாயி ஸ்தாயியாகக் காற்றின் உக்கிரம் உயர்ந்து கொண்டு போயிற்று.

பிரவேச வழியின் கதவுக்குத் தாழ்ப்பாள் உடைந்து விட்டிருந்ததால் அதை ஒருவர் பிடிக்க வேண்டியிருந்தது. பிடித்தாலோ மழை சீறிக் கொண்டு முகத்தில் அடித்தது. அங்கே ஷட்டரும் இல்லை.

நாகராஜன் மழையைக் கவனித்தான். இவ்வளவு பயங்கரமான காற்றையும் மழையையும் கண்டு வருஷக் கணக்காகி இருக்கும்! தொலை தூரத்தில் பனை மரங்கள் பேயாட்டம் ஆடின. பஸ்ஸும் ஆடத் தொடங்கவே, எல்லோரும் பயந்துவிட்டனர். நாகராஜன் சுசரிதாவின் முகத்திலும் பயம் பரவியதைக் கண்டான்.

பஸ் கவிழ்ந்து விடும்போல் ஆடியது.

"கோவிந்தா... கோவிந்தா..." என்று அபயக் குரல் திடீரென்று எழுந்தது. நாகராஜனுக்கும் உடல் சிலிர்த்தது.

மரமரவென்று ஏதோ முறிவது போன்ற ஓசை கேட்டது. "கோவிந்தா!..கோவிந்தா!" நாலைந்து குரல்கள் சேர்ந்து கொண்டன. பொத்தென்று பஸ்ஸுக்குப் பின்னால் ஒரு பேரோசை. நாகராஜன் திரும்பிப் பார்த்தான். ஏரி மேட்டின் மீது நின்றிருந்த பனை மரம் ஒன்று சாலைக்குக் குறுக்கே விழுந்திருந்தது. அந்த இடத்தில் பஸ் நின்றிருந்தால்....

வயிற்றிலிருந்து புரண்டு எதுவோ அவன் நெஞ்சை அடைத்தது. பரவாயில்லை, எல்லோருமே கூட இருக்கிறார்கள். தேவகி, குழந்தைகள், யாரையும் அவன் அநாதையாக்கிவிட்டுச் செல்ல வேண்டியதில்லை. அந்தத் துணிவு மரணத்தைச் சந்திக்கும் தைரியத்தை அவனுக்குக் கொடுத்தது.

நிமிர்ந்து சுசரிதாவைப் பார்த்தான். அந்த அழகிய விழிகளில், உதடுகளில் தெரிந்த கிலி அவன் மனத்தைப் பிசைந்தது.

"அப்பா...! அன்னா எல்லாம் காரிலே போறாங்களே, என்ன ஆயிருக்கும்மா?" என்று அசந்தர்ப்பமாகக் கேட்டான் பையன்.

"சீ.... சும்மா இருடா! தெய்வமே, ஸ்வாமி வேங்கடேசுவரா!" என்று புலம்பத் தொடங்கினாள் அந்த அம்மாள்.

சுசரிதா வாய் திறக்கவில்லை. நாகராஜனின் கண்கள் அவளுடைய கழுத்திலிருந்த மஞ்சள் கயிற்றில் இறங்கி நகர்ந்தன.

இன்னும் அவள் நுகர வேண்டிய இன்பங்களும், அனுபவிக்க வேண்டிய மகிழ்ச்சிகளும் படல் படலாக விரிந்து நாகராஜனின் இதயம் கனத்தது.

சுசரிதா கண்களை மூடிக் கொண்டிருந்தாள்.

சுசரிதா... சுசரிதா.....

தன் உயிர் தன் குடும்பம் இவற்றைவிட அதிகமாக அந்த நூதனமான உணர்வு மேலிடத் தொடங்கியது அவனுக்கே வியப்பாக இருந்தது. தான் வாழ்ந்து முடிந்து விட்டது போன்றும், எவரையும் அநாதையாக விடாது எல்லாருமே மரணத்தின் சந்நிதிக்கு வந்துவிட்டது போன்றும்...ஆனால் சுசரிதா மட்டும் தனியாக, அவளது கணவன் இன்றித் தனியாக –

அவள் யார்? அவளுக்கும் எனக்கும் என்ன உறவு? மூன்று தினங்களுக்குமுன் அவள் எங்கே இருந்தாள் என்று எனக்குத் தெரியுமா? இந்தக் கேள்விகள் பொறிகளாகத் தெறித்தன. ஆனால் நாகராஜனின் கவலைக்கு முன்னால் அவை அர்த்தமிழந்துவிட்டன.

'தெய்வமே, இவள் வாழ வேண்டுமே! நிறைந்த சௌபாக்கியங்களோடு இந்தப் பிரகாசத்தை அனைவர் மீதும் வீசியவாறு இவள் வாழ வேண்டுமே!'

கால் மணிக்குப் பின் வண்டி நகர்ந்தது. பேயறைந்ததுபோல் அமர்ந்திருந்த பிரயாணிகள் முகத்தில் கொஞ்சம் கலகலப்பு கண்டது.

"காரிலே போறாங்க..." என்று ஆரம்பித்து மேலே பேசுவதற்குப் பயந்தவள்போல் நிறுத்திக் கொண்டாள் அந்த அம்மாள்.

நாகராஜனுக்குச் சுர்ரென்று நெஞ்சில் ஒரு சவுக்கு விழுந்த மாதிரி இருந்தது.

'சுசரிதா' என்று தனக்குள்ளேயே வேதனையோடு கூவினான். காற்று போகப் போகத் தணிவுற்றுக் கொண்டே வந்தது. எனினும், அவன் மனசிலிருந்த கிலி குறையவில்லை. இரண்டு மைல் தூரம் வண்டி ஓடியிருக்கும். திடீரென்று நின்றது.

"என்னது?" என்று வெளியே அனைவரும் எட்டிப் பார்த்தனர். கார் ஒன்று நின்றிருந்தது. பச்சை அம்பாஸிடர். யாரோ வெளியே நின்று கைகாட்டினர்.

நாகராஜன் எட்டிப் பார்த்தான். அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. வெளியே ஒரு சொட்டு மழையில்லை.

"அம்மா!" என்று கூப்பிட்டுக் கொண்டே மாப்பிள்ளை வண்டியில் ஏறினான். சுசரிதாவின் முகத்தில் நூறு மலர்கள் பூத்தது போன்ற ஒரு மகிழ்ச்சி மலர்ந்தது. நாகராஜன் ஆழ்ந்த பெருமூச்சு விட்டான்.

அவர்கள் நாகராஜனிடமும் தேவகியிடமும் விடைபெற்றுக் கொண்டு இறங்கினர். வண்டி புறப்பட்டதும் தன் மனம் போன போக்கை எண்ணிப் பார்த்தான். புரிபடவில்லை. தேவகியிடம் சொன்னான்.

அவள் எப்போதாவது கோபித்துக் கொள்ளும் போது இன்றும் அதைச் சொல்லிக் காட்டுகிறாள்: "உங்களுக்கென்ன? உங்க சம்சாரம் குழந்தையெல்லாம் எந்தக் கணக்கு? பஸ்ஸில் வர்றவ உசிரு பத்திரமா இருக்கணும்னு வேண்டிப்பீங்க!"

நாங்கள் பேக்கை மாற்றிவிட்டோம்...

சிவப்பும், பொன்னிறமும்
இணைந்த கவர்ச்சிமிகு
பேக்காக...உங்களுக்கு
கூடுதலான செலவின்றி
அதிக கவர்ச்சியான பேக்.



...ஆனால் நாங்கள் ஒருபோதும் பிஸ்கெட்டை மாற்றவே மாட்டோம்



போஷாக்கு மிகுந்த அதி
ருசியுள்ள பிஸ்கட்.
பின்வருவனவைகள் எப்பொழுதும்
அடங்கியது.
வைட்டமின்கள் ஏ..டி..பி1..பி2..
கால்ஷியம், ப்ரோட்டீன், பால்,
கோதுமை, சர்க்கரை, க்ளுகோஸ்.

பார்லே க்ளுகோ

இந்தியாவின் மிக அதிகமாக விற்பனையாகும் பிஸ்கெட்டுகள்



everest/871 rd/PP TM



இந்த தீபாவளிக்கு 10% விசேட தள்ளுபடி

வண்ணத்துப் பூச்சியின் பிரத்தியேக-மான கவர்ச்சி உங்களுக்கு புத்தொளி-யும், புதுப்பொலிவும் தரும். புத்தம் புதிய கையிருப்பு- நவீன நாகரிக டிசைன்கள், புரட்சிகரமான மாதிரிகள், ஒவ்வொரு கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களி-லும் கிடைக்கும்.

புகழ் பெற்ற காஞ்சிபுரம், ஆரணி, மற்றும் கும்பகோணம் பட்டுகள், பர-வசம் தரும் பருத்தி ஆடைகள், கிளாசிக் ரெடிமேட் கைத்தறி ஷர்ட்டு-கள், மற்றும் பட்டு டைகள் கிடைக்கும்.

வண்ணத்துப்பூச்சி உங்கள் நல்வரவுக்-காக நாடெங்கிலுமுள்ள முன்னூற்று ஐம்பது விற்பனை நிலையங்களில் காத்திருக்கிறது.

வண்ணத்துப்பூச்சி 10% விசேட தள்ளு-படியில் தருகிறது. (தள்ளுபடியை தமிழக அரசு ஏற்றுக் கொள்கிறது) தமிழக அரசு ஊழியர்களுக்கு கடன் வசதித் திட்டம் வழக்கம் போல் வழங்கப்படும்.

விசேட தள்ளுபடி 1—10—'72 முதல் 9—11—'72 வரையில்.

கோ-ஆப்டெக்ஸ் **கைத்தறிஆடைகள்**

Criterion CO 2779TMB

பம்பாய் நகர மக்களுக்கு ஒரு நற்செய்தி! தமிழ்ச் சங்க கட்டிடத்தில் நடைபெறும் (1-10-72 முதல்

யூதர்களின் சிரிப்பு....? கேட்க வேண்டுமா, அராபியர்களின் வெறுப்பு!

○ யூதர்களைப் போலத் துன்பம் அநுபவித்த ஓர் இனத்தை உலக சரித்திரத்திலேயே காண முடியாது. ஆனால் என்னதான் இடையூறுகள் நேர்ந்தாலும் அத்தனையையும் சிரித்துக் கொண்டே சமாளித்தவர்கள் அவர்கள்.

○ ஹிட்லர் ஆட்சி நடந்து கொண்டிருந்த காலம். ஜெர்மனியில் யூதர்களைத் தேடிப் பிடித்துக் கொன்று குவித்து நாஜிகள் வெறியாட்டம் போட்டுக்கொண்டிருந்த நேரம்.

ஒரு ரயில் வண்டியில் யூதர் ஒருவரும் (மாறு வேடத்தில்தான்) நாஜி அதிகாரி ஒருவரும் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். அதிகாரி தம்முடன் ஒரு நாயையும் அழைத்து வந்திருந்தார்.

அந்த நாயை அழைக்க நேர்ந்தபோதெல்லாம் "மோஸஸ்" என்று யூதப் பெயர் ஒன்றைச் சொல்லியே அழைத்தார் நாஜி அதிகாரி. இந்த அவமானத்தைப் பொறுமையுடன் சகித்துக்கொண்டிருந்தார் யூதர். ஒரு கட்டத்தில் அவருக்கே பொறுக்கவில்லை. "இந்த நாய்க்குப் போயும் போயும் யூதப் பெயர் வைத்திருக்கிறீர்களே! என்ன ஆளய்யா நீங்கள்!" என்று அங்கலாய்த்துக் கொண்டார் அதிகாரியிடம்.

"ஏன்? இதிலே என்ன தப்பு?" என்று கேட்டார் அதிகாரி.

"தப்பு ஒன்றுமில்லை... யூதப் பெயராக இருப்பதனாலே அதற்குத் துரதிர்ஷ்டம் என்றுதான் சொல்வேன். இல்லாவிட்டால் இந்நேரம் நாஜிப் படையில் அது ஓர் அதிகாரியாக ஆகியிருக்குமே!" என்று மூக்கை உடைத்தார் யூதர்!

○ ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலின் கூட்டம் ஒன்றில் பங்கு கொள்வதற்காக எகிப்து ஜனாதிபதி நாஸர் சென்றிருந்தார். ஒரு நாள் மாலை மெய்க்காப்பாளரிடம் கூடச் சொல்லிக்கொள்ளாமல் உலாவச் சென்றார்.

ஆற்றுப் பாலம் ஒன்றின் மீது நடந்து சென்ற போது குனிந்து நீரில் தம்முடைய பிம்பத்தைக் காண ஆசைப்பட்டார். ஆனால் பாவம், குனிந்தவர் அப்படியே தலைகுப்புறத் தண்ணீரில் விழுந்துவிட்டார்.

'குய்யோ முறையோ' என்று கத்தினார் நாஸர். அப்போது அந்தப் பக்கமாகச் சென்று கொண்டிருந்த ஒரு சிறுவன் சட்டென்று தண்ணீரில் குதித்து நாஸரைக் கரையில் இழுத்துப் போட்டான்.

"தம்பி! உன்னால்தான் இன்று நான் உயிர் பிழைத்தேன்... ஆமாம், நீ எந்த இனத்தைச் சேர்ந்தவன்?" என்று கேட்டார் நாஸர்.

"மிஸ்டர் பிரஸிடெண்ட்! நான் இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த யூதன்!...."

"பரவாயில்லை. உனக்கு என்ன வேண்டும் சொல், தருகிறேன்!"

"நிச்சயமாக நான் விரும்புகிறபடி நடந்துகொள்வீர்களா?"

"நிச்சயமாக!"

"அப்படியானால் நான்தான் உங்களைக் காப்பாற்றினேன் என்று வெளியே சொல்லாதீர்கள்! எங்கள் இனத்தவர்கள் இதற்காக என்னைக் கொன்று போட்டுவிடுவார்கள்!" என்றான் பையன்.

○ இஸ்ரேல் மந்திரி சபைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. பொருளாதார நிலைமை பற்றி விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

"நம்முடைய நிதி நிலைமை படு மோசமாக இருக்கிறது" என்றார் நிதி அமைச்சர். "என்ன செய்யலாம் சொல்லுங்கள்!"

"ஏன், இப்படிச் செய்தால் என்ன?" என்று ஆரம்பித்தார் இன்னொர் அமைச்சர். "அமெரிக்காவுடன் யுத்தம் தொடுப்போம்... அமெரிக்கர்களிடம் ஒரு நல்ல வழக்கம் என்னவென்றால் தங்களிடம் போரிலே தோற்றுப்போன நாட்டிலே கொண்டு போய்த் தங்கள் பணத்தை யெல்லாம் கொட்டுவார்கள். அந்த நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்திவிட்டுத்தான் மறு வேலை பார்ப்பார்கள்! அதனால் சொல்கிறேன்!"

"நல்ல யோசனைதான்......ஆனால்....." என்று இழுத்தார் பாதுகாப்பு மந்திரி.

"என்ன ஆனால்?"

"நாம் நிச்சயம் ஜெயித்து விடுவோமே!"

○ யூதர் ஒருவர் சாலை விபத்து சம்பந்தப்பட்ட வழக்கு ஒன்றில் சாட்சி சொல்ல வந்தார்.

"விபத்து நடந்ததை நீங்கள் பார்த்தீர்களா?" என்று கேட்டார் அரசாங்க வக்கீல்.

"பார்க்காமல் என்ன? என் கண் பொட்டையா என்ன?"

"விபத்து நடந்தபோது நீங்கள் அந்தச் சாலை வழியே நடந்து போய்க் கொண்டிருந்தீர்களா?"

"பின்னே என்ன? பறந்தா போவேன்?"

"குற்றவாளி பேரிலேதான் முழுத் தப்பும் என்று சொல்கிறீர்களா?"

"பின்னே என்ன? உங்கள் பேரிலே தப்பு என்றா சொல்லுவேன்?"

நீதிபதி இந்தக் கட்டத்தில் குறுக்கிட்டார். "ஆமாம், இதென்ன உங்கள் பதிலெல்லாம் கேள்விகளாகவே இருக்கின்றனவே?" என்றார்.

"ஏன்? இருக்கக் கூடாதா என்ன?" என்று ஒரு போடு போட்டார் சாட்சி.

— தாஜா



ஊன்று கோல்

க. பஞ்சாபகேசன்

ஒரு நாள் மாலையின் முடிவு நேரம். கல்லூரிக் காம்பவுண்டில் எனக்காகக் கொடுத்திருந்த தனி குவார்ட்டர்ஸின் முன் வராந்தாவில் பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு படித்துக் கொண்டிருந்தேன்.

காம்பவுண்டுக் கதவு திறக்கப்பட்ட ஒலி. நிமிர்ந்து பார்த்தேன். வெளியே போர்த்திக் கொண்டு வந்திருந்த அந்தி இருட்டிலிருந்து என் வீட்டு முன் விளக்கொளி மேலே வீச —

ஒரு பெண் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். நானும் நாற்காலியிலிருந்து எழுந்து யாரென்று பார்க்கவும் வரவேற்கவும் தயாரானேன்.

ஒரு கணம் எனக்குள்ளேயே விதிர் விதிர்த்தேன். வந்து என் முன்னே நின்ற அவளும் சில விநாடிகள் அப்படியே நின்று விட்டாள்.

''கோபால்! நீங்களா ?''

''பூமா ! வா....''

''புரொபசர் ராஜுகோபால்.''

''நானேதான் பூமா ! வா, உட்கார் !''

''வணக்கம். நமஸ்தே. நான் வேறு யாரோ என்று எண்ணி வந்து விட்டேன்.'' அவள் இங்கிதமான தயக்கத்துடன் கூறிக் கொண்டே எதிரேயிருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள்.

நானும் உட்கார்ந்தேன்.

இரண்டொரு நிமிட மௌனம். அதனிடையில் பூமாவைப் பார்த்த நான் —



விசாலமான நெற்றியின் நடுவே வெறுமை தான் நிலைமிட்டிருந்தது. மற்றப்படி பூமா பழைய பூமாவாகவே கட்டுடல் குலையாமல் இருந்தாள். கண்களில் மட்டும் சிறிதே களைப் படைந்த பார்வை. முன்னே எவ்வப்போதோ நான் அடிக்கடி புகழ்ந்திருந்த கருளான தலைக் கேசம்.

''சார்....!'' என்று பூமா ஆரம்பித்தது எனக்கு மனச் சிலிர்ப்பை உண்டாக்கினாலும் அவள் இனி என்னை அவ்விதமாகக் கூப்பிட்டுத்தானாக வேண்டும். ''சார்...! இந்த வருடம் 'எம். ஏ.' எழுதுகிறேன்; அதுவும் வேதாந்தப் பாடத்தில்.....''

''பூமா.....''

''ஆமாம், சார் ! திருமணமாகி என் விஷயத்தில் எல்லாம் முடிந்தபிறகு முயற்சிகள் எடுத்து நான் நாலைந்து ஆண்டுகளாகப் படித்து..... சார் ! போன ஆண்டு 'முதல் பார்ட்' பாஸ் பண்ணி முடித்தேன். இந்த வருடம் 'பைனல்' பரீட்சை எழுதுகிறேன்.... கடினமான பாடப் பகுதிகளை நீங்கள்தான் சொல்லித் தர வேண்டும்... ஒரு நாலைந்து மாதங்களுக்கு மட்டும் டியூஷன். உங்களுக்கு ஆட்சேபம் இல்லையே?''

'மளமள'வென்று சொல்லிக் கொண்டே போனாள் பூமா. கிட்டத்தட்ட பழைய பூமாவேதான், நெற்றியில் இருந்த அந்த வெறுமையைத் தவிர.

'' என்ன சார்! எதுவுமே சொல்லவில்லையே ?''

''பூமா...!நான் என்ன சொல்வது என்றே எனக்குப் புரியவில்லை ... நீ ... உனக்கு...'' தடுமாறினேன் நான்.

'' சார் ! எனக்கு ஒன்றுமில்லை'' என்று கூறிச் சிரித்தாள் அவள். அதிலிருந்த வெறுமை, விரக்தி புரிந்தது. '' எனக்கு இரண்டு குழந்தைகள் இருக்கின்றன. ஆறு வயசு, நாலு வயசு. மூத்தது பையன், இளையது பெண். 'அவர்' எனக்கு விட்டுச் சென்றிருக்கும் இந்தச் செல்வங்களுடன் இரண்டு, மூன்று வீடுகளும் உண்டு. அவற்றிலிருந்து வரும் வாடகை, அவரது பிராவிடெண்ட் பண்ட் பணம், இன்ஷ்யூரன்ஸ் பணம்..... கோபால்! மன்னிக்கணும் சார் ! உண்மையிலேயே எனக்கு வேதாந்தத்தில் பற்று வராமல் இருக்குமா ?''

''பூமா ! எனக்கு எல்லாம் புரிகிறது. நீ என்னை 'சார்' என்று கூப்பிடுவதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. நீ என்னைக் 'கோபால்' என்றும் கூப்பிட வேண்டாம். பேச்சும் அழைப்பும் புரிபடும்போது விளிச் சொற்கள் தேவையில்லை.''

இன்னும் சில மாதங்களில் பரீட்சை வரவிருந்தது. பூமாவிடம் மேலும் விளக்கம் ஏதும் கேட்காமல் அவளுக்குப் பாடம் சொல்லித் தரச் சம்மதித்து விட்டேன்.

எனக்குக் கொடுத்திருந்த அந்தப் பெரிய குவார்ட்டர்ஸில், தன்னந் தனியனாக, ஒரு மூலையில் இருந்த என் அறையில், இரவின் அமைதியில் படுக்கையை ஒட்டியிருந்த விளக்கின் வெளிச்சத்தில் உட்கார்ந்துகொண்டு பூமாவுக்கு வேண்டியிருக்கக் கூடிய புத்தகங்களுக்கான பட்டியலைத் தயாரித்துக் கொண்டிருந்தேன். இடையிடையில் இதயத்தில் நினைவாம் வீணை ஒலியின் கார்வைகள்.....

நான் அப்போது ஃபைனல் ஆனர்ஸில் படித்துக் கொண்டிருந்தேன். கல்லூரியில் மிகவும் 'ரிசர்வ்ட்' பேர்வழியாக ஒதுங்கியிருந்தாலும் மிகவும் கடினமான வேதாந்தப் பாடத்தில் அந்த ஆண்டின் 'யுனிவர்சிடி முதல்' இடத்தைத் தட்டப்போகிறேன் என்று எல்லோருமே எண்ணியிருந்ததால் பிரபல மாணவனாக இருந்தேன்.

பூமா பி.ஏ. முதலாண்டு படித்துக் கொண்டிருந்தாள். யாரிடமும் அதிகமாகப் பேசாத கட்டுப்பெட்டியான நான் பூமாவிடம் மட்டும் மனம் விட்டுப் பேசக் காரணம் —

எனக்கே புரியாமல் இருந்தது.

ஒரே ஒரு சம்பவம் :

ஒரு சர்க்கஸ் ஷோவுக்கு அவளுடன் சென்றேன். சிறு வயது முதற்கொண்டே சர்க்கஸ் என்றால் பூமாவுக்கு மிகவும் இஷ்டமாம். கல்லூரியில் எங்கள் இருவரையும் குறித்து நிலவி வந்த கேலிப் பேச்சுக்கள் புரிந்த நிலையிலும் இருவரும் அடிக்கடி சந்தித்துத்தான் வந்தோம்.

ஏனெனில் எனக்கு — என் மனத்துக்கு — நன்றாகத் தெரியும், நான் பூமாவின் மேல் எந்தவித வித்தியாசமான உணர்வையும் கொள்ளவில்லை என்று.

ஆனால் சர்க்கஸில் நடைபெற்ற நிகழ்ச்சி...

முதல் வகுப்பில் அருகருகில் உட்கார்ந்திருந்தோம். இரும்புக் கூண்டுக்குள் சிங்கம், புலி, ஆடு மூன்றும் அருகருகில் உறவாடின.

''கோபால் ! இரும்புக் கூண்டுக்குள் ஓர் அற்புதமான, நம்புதற்கரிய ஒற்றுமையுணர்வைக் காட்டுகிறார்கள், பார்த்தீர்களா ?'' என்றாள் பூமா.

நான் சிரித்துக் கொண்டே சொன்னேன்: ''நீ சொல்வது உண்மைதான், பூமா ! சிறைக்குள்ளே அவை தவம் செய்கின்றன. வேற்றுமையில் ஒற்றுமை உணர்வைக் காட்டுவது என்பது — பகைமையின் நடுவில் நட்புறவின் இனிமையை உணர்த்துவது என்பது— ஒரு தவம்தான்.''

பூமா திரும்பி என்னை ஆர்வத்தோடு பார்த்தாள். ''கோபால் ! எல்லாவற்றிலும் நீங்கள் ஏதாவது ஒரு தத்துவத்தையே பார்க்கிறீர்கள்.''

நான் மேலும் சிரித்துக் கொண்டே சொன்னேன்: ''கூண்டுக்குள்ளே இந்த மிருகங்களை ஒரு மனிதன் ஆட்டுகிறான். கூண்டுக்கு வெளியே இந்த உலகமாகிய சிறையில் நம்மைக் கண்ணுக்குத் தெரியாத ஒரு சூத்திரதாரி ஆட்டுவிக்கிறான்; மனிதர்களுக்குள் எத்துணை நாடக பாசங்கள் — கூண்டுக்குள்ளே இருக்கிற அந்த மிருகங்கள் மாதிரி—உலவுகின்றன என்பதை நீ அறிவாயே ?''

அருகில் சில குரல்கள் கேட்டன :

'' அந்தச் சிங்கம் இன்றைக்கு இத்தனை சாதுவாக இருக்கிறதே. ஆனால் போன வாரம் முழுவதும் அது 'புருபுரு'வென்று இருந்ததாம்.....''

'' ஏன் ?''

''அதற்கு ஒரு காதலி இந்த சர்க்கஸில் இருக்கிறது. அதற்கும் இதற்கும் ஏதோ பிணக்கு. அதனால் இந்த ஆண் சிங்கம் போன வாரம் முழுதும் சரியாகவே நடந்து கொள்ளவில்லையாம்.... இப்போது பாருங்கள் !.... பிணக்கு தீர்ந்துவிட்டது ; ரிங் மாஸ்டர் சொல்லுகிறபடியெல்லாம் அது கேட்கிறது!''

இதைக் கேட்ட பூமா இலேசாக, ஆனால் என் காதுகளில் தெளிவாகக் கேட்கும்படியாகச் சிரித்தாள். எனக்குள்ளோ சிந்தனை... உணர்வுகளைச் சிறைப்படுத்தினால் மனித சமூகத்தில்தான் போராட்டம் என்றால், பிராணி உலகிலும்கூட அத்தகைய போராட்டம் இருக்கிறதா ?

சர்க்கஸ் முடிந்து வெளியில் வந்தோம். அருகே ஒரு பெரிய 'கான்டீன்'. ஏதாவது சிற்றுண்டி சாப்பிடலாம் என்று அங்கே போய் இருவரும் எதிரும் புதிருமாய் உட்கார்ந்தோம்.

''கோபால்! அந்தச் சிங்கத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?''

''பூமா ! உன்னைப் போலவே நானும் அந்தச் சிங்கத்தைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன். உணர்ச்சிகள் என்று வந்துவிட்டால் மனிதன் வேறு, மிருகம் வேறு என்று இல்லை.''



கிரீஸ் நாட்டில் பார்ட்டிகள் நடந்து முடிந்த பிறகு பிளேட்டுகளையும் கோப்பைகளையும் தரையில் அடித்து நொறுக்குவது கொண்டாட்டத்தின் ஒரு பகுதி. அரசு இந்த வழக்கத்துக்குத் தடை விதித்திருக்கிறது. சமீபத்தில் இந்த உத்தரவை மீறி மிக அதிக அளவில் பிளேட்டுகள் உடைத்ததற்காக அரிஸ்டாடில் ஓனஸிஸ் மீது அரசு வழக்குத் தொடர்ந்திருக்கிறது.

— டைம் • பாலி

''கோபால் ! காதலுக்காக அந்தச் சிங்கம் தன் உயிரையேகூடத் தியாகம் செய்துவிடும்; காதலுக்காக மனிதனோ....'' முடிக்காமல் என்னையே பார்த்தாள் பூமா. அப்போது அவளுடைய கண்கள் நீலப் பூக்களில் செவ்வரி படர்ந்தாற் போலிருந்தன.

''பூமா ! காதல் என்பதும் ஒரு தவம் தான் ! அதில் தூய்மை இருந்தால்தான் அந்தத் தவத்துக்கும் சிறப்புண்டு.''

அன்று நாங்கள் இருவரும் ஒருவரிடமிருந்து மற்றவர் விடைபெற்றபோது பலத்த மௌனம்தான் சாதித்தோம்.

மறு நாள் நான் வகுப்பறையில் நுழைந்து என்னுடைய இருப்பிடத்தில் அமர்ந்து தலை நிமிர்ந்தபோது —

நேரே கரும் பலகையில் –

திடுக்கிட்டேன். அங்கே ஒரு சிங்கத்தின் படம் தாறுமாறாகப் போட்டிருந்தது. கீழே 'ஒரு வாரம் என்னோடு பேசாத காதலியைப் பார்த்தீர்களா ?' என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்தது. மாணவர்களில் யாரோ முந்தின நாள் எங்களை 'பாலோ' செய்திருக்கிறார்கள் என்பதும் எனக்குப் புரிந்தது. இன்னும் வகுப்புக்குள் எங்கள் பேராசிரியர் வந்திருக்கவில்லை. எல்லோரும் என்னையே பார்த்து ஏதோ 'கிகிக'வென்று முணுமுணுத்தாற்போல் எனக்கு உணர்வு ஏற்பட்டதைப் பொறுக்க முடியவில்லை.

வேகமாக இருப்பிடத்திலிருந்து எழுந்து கரும் பலகையிடம் போனேன். அருகில் மேஜையின் மேல் இருந்து சாக்பீஸையும் எடுத்துக் கொண்டேன். வேகமாக அந்தச் சிங்கப் படத்தின் மேல் எழுதினேன் : 'சிங்கத்தின் தவத்தை யாரும் கலைக்க முடியாது. பார்ப்பதைத் தவறாக நம்பும் முட்டாள்களே, மறுபடியும் கேளுங்கள் : சிங்கத்தின் தவத்தை யாராலும் கலைக்க முடியாது.'

இதை நான் எழுதி முடிப்பதற்கும் வகுப்பில் பேராசிரியர் வருவதற்கும் சரியாக இருந்தது. அவர் புயலாக மாறினார்.

எனது சமாதானங்கள் எதுவும் அவரிடம் எதிரொலியைச் சாதிக்க முடியவில்லை. நான் சொன்னதெல்லாம் புரியாத வேதாந்தமாகி விட்டது அவருக்கு. எனக்குக் கிடைத்தது கல்லூரியிலிருந்து இரண்டு நாட்கள் 'சஸ்பென்ஷன்'......

பழைய நினைவுகளை இந்த இடத்தில் முடித்துக் கொண்டு மறுபடியும் பூமாவுக்குத் தேவையான பாடப் புத்தகப் பட்டியலைப் பார்வையிடத் தொடங்கினேன். பிறகு நான் பூமாவைக் காதலிக்கவில்லை என்பதை இந்த உலகம் அறிந்து கொண்டதுடன், பூமாவும் அறிந்து கொண்டபோது –

இரண்டே வரிகளில் அவள் கல்லூரியை விட்டுச் சென்றபோது எனக்குக் கடிதம் எழுதிச் சென்றாள்:

'' கோபால் !

எனக்குத் திருமணம் நிச்சயமாகி விட்டது. வாழ்க்கையில் எனக்கென்று ஏற்பட்ட 'தவம்' ஆரம்பமாகிவிட்டது. என்னை வாழ்த்துங்கள். — பூமா''

அதற்கப்புறம் வாழ்க்கைச் சக்கரம் உருண்ட வேகத்தில், நான் இன்றைக்குப் பேராசிரியராகி விட்டேன். அவள் — பூமா — என்னிடமே வேதாந்த விளக்கம் கேட்க வந்துவிட்டாள், தனது தவம் இடையில் கலைக்கப்பட்டவளாக.

இரண்டு நாட்களுக்கு ஒரு முறை பூமா என் 'குவார்ட்டர்ஸ்'க்குப் பாடம் சொல்லிக் கொள்ள வருவாள்.

ஒரு நாள் தன் குழந்தைகளை அழைத்துக் கொண்டு வந்தாள், என் விருப்பத்துக்கிணங்க.

அன்று நான் பூமாவுக்குச் சரியாகவே பாட விளக்கங்களைக் கூறவில்லை. நேரத்தின் பெரும் பகுதியை அந்தக் குழந்தைகளுடன் விளையாடிக்கொண்டிருப்பதிலேயே அன்று கழித்தேன்.

பூமாவுக்குப் பரீட்சை ஆரம்பமானபோது நான் அவசரமாக மிக முக்கியமான கல்லூரி அலுவல் சம்பந்தமாகக் கல்லூரி முதல்வரால் கல்கத்தாவுக்கு அனுப்பப்பட்டுவிட்டேன்.

பரீட்சைகள் எல்லாம் முடிந்த பிறகுதான் என்னால் திரும்ப முடிந்தது. அதற்குள் பூமா தன் குழந்தைகளுடன் சொந்த ஊர் போய் விட்டிருந்தாள். பரீட்சை முடிவுகள் வருகிற வரை பூமாவிடமிருந்து ஒரு கடிதமுமில்லை.

முடிவுகள் வந்தன. பூமா முதல் வகுப்பில் தேறியிருந்தாள். முதல் வகுப்பில் தேறியிருந்த ஒரே ஒரு நபரும் பூமாதான். இதனால் பல்கலைக் கழகத்திலேயே அவளுக்குத்தான் முதல் ராங்க்.

அவளை — அவள் வெற்றியைப் பாராட்டிக் கடிதம் எழுதினேன். இரண்டு நாட்களில் அவளிடமிருந்து கடிதம் வந்தது :

''...... மறைந்தும் மறையாமலும் என் கணவர் என்னுடைய இந்த வெற்றிக்கு ஊன்றுகோலாக இருந்து உதவியிருக்கிறார். அன்று உங்கள் விருப்பப்படி என் குழந்தைகளை உங்கள் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்திருந்தேன் அல்லவா ? அவர்களை என் ஜாகைக்கு அழைத்துச் சென்றபோது அவர்கள், 'நம் அப்பா இருந்தபோது இந்த நல்ல மாமாவை நமக்குத் தெரியவில்லையே அம்மா. அப்பா எத்தனை சந்தோஷப்பட்டிருப்பார்' என்றார்கள். அன்றே நிச்சயித்துக் கொண்டேன், உங்களுடைய நட்பு என் கணவருக்குக் கிடைத்திருக்காவிட்டாலும், உங்களுடைய மாணவியான என்னும் அவருடைய ஆத்மாவின் மகிழ்ச்சி பெருகட்டும் என்று. அதன் விளைவும் உழைப்புமே இந்தப் பரீட்சை முடிவு..... பூமா.''

தவங்களின் உண்மைத் தன்மைக்கு முடிவு கிடையாது. ஒன்றின் முடிவில் இன்னொன்றின் பொருள் பொதிந்த தொடக்கம் இருந்து, வேதாந்தச் செடிக்கு ஜீவ உணவு கிடைத்துக் கொண்டேயிருக்கிறது.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor T. Sadasivam





இந்தியப் பெண்மணிகளின் மேனி வண்ணங்களுக்குப் பொருந்தி மெருகூட்டுவதற்காக, லக்மேயின் புதிய அல்ட்ரா சில்க் முகப் பவுடர் விசேஷமாகத் தயாரிக்கப் பட்டுள்ளது. இந்த முகப்பவுடர் உங்களை மணிக்கணக்கில் எழில் கொஞ்சும் தோற்றத்துடன் திகழச் செய்யும். நாள் முழுவதும் நீங்கள் எழில் வடிவமாக, அழகுப் பிம்பமாகத் தோற்றமளிப்பீர்கள். அதன் இரகசியம்? அழகான புதிய பெட்டியில் வரும் பரிபூரண ஒப்பனை சாதனம்—லக்மேயின் அல்ட்ரா—சில்க் காம்பாக்ட். இலேசாக அழுத்தப் பட்டுள்ள இந்த அருமையான முகப் பவுடர் உங்கள் மேனியை சீராகத் தழுவி, ஒப்பனையை சிறப்பாகப் பாதுகாக்கிறது.

லக்மே அல்ட்ரா-சில்க் பேஸ் பவுடர் மற்றும் காம்பாக்ட் மேக்-அப் எட்டு உள்ளங் கவரும் வண்ணங்களில் வருகிறது. டெண்டர் சில்க், ஸாட்டின் சில்க், லேட் சில்க், ரோஸ் சில்க், பீஜ் சில்க், கோல்ட் சில்க், ஸம்மர் சில்க், சாக்கலேட் சில்க்.

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

PERKINS
P6-354 V
ALL YOU'VE EVER WANTED IN A VEHICULAR ENGINE






Power that remains unfailing throughout. Power that keeps the vehicle going all the time, very economically.



Internationally reputed for reliability, Perkins Diesel never lets you down.



Perkins has all that you have wanted in an engine for a transport vehicle.

Simpson & Co. Ltd.

Head Office:
202 203, Mount Road, Madras-2
Branches
Bangalore, Ootacamund, Tiruchirapalli,
Secunderabad.

9-364